

பரிசோதனைக்குத் தயார்

பக்கம் 09



பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

பக்கம் 10



அரசு வெளிப்படுத்த வேண்டும்

பக்கம் 17



மீண்டெழுந்தது ஆஸி.

பக்கம் 23

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 152

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 14 வியாழக்கிழமை (26/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## பொன்சேகாவை வைத்தியசாலையில் அனுமதிக்க உத்தரவு

ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்குமாறு சிறை அதிகாரிகளுக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று உத்தரவிட்டுள்ளார். மேல் நீதிமன்றத்தில் இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றவர்களை மறைத்துவைத்திருந்தமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது சரத் பொன்சேகாவின் உடல்நிலையை அவதானித்த நீதிபதி அவரை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பணித்தார்.

## மிலிந்த மொரகொட நேற்று இராஜினாமா

கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர் ஆகிய பதவிகளை இராஜினாமா செய்துள்ளதாக மிலிந்த மொரகொட நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளார். உலக வங்கியில் பதவி ஒன்றை வகிப்பதற்காகவே அவர் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரூபாவின் மதிப்பு நேற்று மேலும் வீழ்ச்சி

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று புதன்கிழமை காலை மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 132.20 ரூபாவாகக் காணப்பட்டது. ஆனால் நேற்றுப் புதன்கிழமை காலை மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்து 133.20 ரூபா என்ற சாதனை அளவை எட்டியது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கி அமெரிக்க டொலர் ஒன்றை நேற்று முன்தினம் 133.16 ரூபா வீதம் வங்கிகளுக்கு விற்பனை செய்திருந்தது. இலங்கை ரூபாவின் மதிப்பு கடந்த சில வாரங்களாகவே நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருவதால், முதலீட்டாளர்கள் அமெரிக்க டொலரில் முதலிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## முள்ளிவாய்க்கால் வீதி நேற்று முதல் மக்கள் பாவனைக்கு

முல்லைத்தீவில் இருந்து வெட்டுவாய்க்கால் ஊடாக முள்ளிவாய்க்கால் - இரட்டை வாய்க்கால் - மந்துவில் - புதுக்குடியிருப்பு வரை செல்லும் வீதி பொது மக்கள் பாவனைக்காக நேற்று இராணுவத்தினரால் திறந்து விடப்பட்டது. நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இந்த வீதியை இராணுவத்தினர் மக்கள் பாவனைக்கு திறந்து விட்டனர். கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் மூடப்பட்டிருந்த இந்த வீதி மீண்டும் நேற்றுத் திறக்கப்பட்டது. இதுவரை காலமும் இந்த வீதி ஊடாக வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனங்கள் செல்வதற்கு மட்டுமே இராணுவத்தினர் அனுமதி வழங்கி இருந்தனர்.

# தமிழீழ தனிநாடு உருவாக இந்தியா உதவ வேண்டும்

### டில்லி நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் ரி.ஆர்.பாலு வேண்டுகோள்



புதுடில்லி,ஏப்ரல் 26

தமிழர் பகுதிகளில் சிங்கள ஆதிக்கமுள்ள இலங்கையில் கொடுங்கோலாட்சி தொடர்கின்ற நிலையில், தமிழீழத் தனிநாட்டை உருவாக்குவதற்கு ஐ.நாவை இந்தியா இணங்கச் செய்ய வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரி.ஆர்.பாலு நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக் கேள்வி நேரத்தின் போது, இது பற்றிப் பிரச்சினை எழுப்பிய அவர், இலங்கையில் தமிழர் வாழ்விடங்களைச் சுற்றி இலங்கை இராணுவத்தினரே உள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழர்கள் முள்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வாழ்கின்றனர். கொடுங்கோலாட்சிதான் அங்கு நடக்கிறது. இந்திய- இலங்கை உடன்பாடு மதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அவர் அங்கு 04

## மர்மப்பொருள் வெடித்ததில் இரு சிறுவர் உடல் சிதறிச் சாவு

### பளையில் நேற்றுக் கோரச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

வீட்டுக்கு முன்பாக நிலத்தில் புதைந்திருந்த மர்மப்பொருள் ஒன்றை இழுத்து எடுக்க முற்பட்ட வேளை அது வெடித்ததில் சிறுவர்களான சகோதரர்கள் இருவர் அந்த இடத்திலேயே உடல் சிதறி மரணமானார்கள்.

இந்தக் கோரச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் பளை மணியம்தோட்டம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் முகுந்தன் தமிழ்மாறன் (வயது - 5), முகுந்தன் கனோஜன் (வயது - 2) ஆகிய இரு சகோதரர்களுமே உடல் சிதறி மரணமானார்கள்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

பளை, மணியம் தோட்டம் பகுதியில் தற்காலிகமாக அமைக் 04

## டில்லியின் முடிவால் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது கொழும்பு

### இப்படித் தெரிவித்தார் சுஷ்மா சுவராஜ்



கொழும்பு, ஏப். 26

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவாக புதுடில்லி வாக்களித்தது கொழும்பை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது - என்று இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியக் குழுவின் தலைவருமான சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இலங்கை பயணம் தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட சுஷ்மா தெரிவித்தவை வருமாறு -

வடக்கில் இருந்து இலங்கைப் படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டோம். பிறந்தநாள் நிகழ்ச்சிகளுக்கு இலங்கைப் படையினர் அழையா விருந்தா 04

## அக்ஷன் பெய்ம் எச்சரிக்கை மிரண்டது இலங்கை அரசு

### மூதூர் படுகொலைகள் குறித்த விசாரணைக்கு இணக்கம்

கொழும்பு,ஏப். 26

பிரான்ஸ் தொண்டர் நிறுவனமான அக்ஷன் பெய்ம் பணியாளர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகப் புதிய விசாரணைகளை நடத்தப் போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மூதூரில் தமது பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பில் இலங்கை அரசு போதிய கவனம் எடுத்து விசாரணை நடத்தவோ குற்றவாளிகளை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவோ இல்லை 04

## அம்பாறையில் இன்று ஹர்த்தால்

அப்பாறை,ஏப்.26

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் இன்று வியாழக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தம்புள்ள ஹைரியா பள்ளிவாசல் மீது பௌத்த பேரினவாத இனவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலைக் கண்டித்தும், அப்பள்ளிவாசலை வேறு இடத்திற்கு இடம்மாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தும் இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கை தேசிய ஒற்றுமை 04

## இலங்கைக்கு எதிராக மீண்டும் அமெ. செயற்படும் சாத்தியம்

### எச்சரிக்கிறார் மஹிந்த சமரசிங்க

கொழும்பு,ஏப். 26

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் மீண்டும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர அமெரிக்கா முயற்சிக்கலாம். ஜூன் மாதம் அல்லது ஒக்ரோபர் மாதங்களில் இந்த முயற்சி இடம்பெறலாம் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் குறித்த ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த 04

## தமிழர்களின் கடும் எதிர்ப்புக்கு பணிந்தது பாதுகாப்பு அமைச்சு

### பிள்ளையார் கோவில் விவகாரம் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஏப்.26

திருமலைப் பிள்ளையார்கோயில் விவகாரம் தொடர்பில் முழுமையான ஆய்வறிக்கையை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள [illegible] பிள்ளையார்கோயிலை அகற்றுவதற்கு பாதுகாப்பு அமைச் 04

## தெரிவுக்குழு மூலம்தான் தீர்வு அதை டில்லிக்கு புரிய வைப்போம்

### அடித்துக் கூறுகிறார் அமைச்சர் பஸில்

கொழும்பு, ஏப். 26

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வராவிட்டால், தீர்வுப் பயணத்தை வேறுவழிகளில் ஓர் அடியேனும் நகர்த்த முடியாது - தீர்வை வழங்க முடியாது. இந்த விடயத்தை நான் அடுத்த மாதம் இந்தியா சென்று நேரில் உறுதியாகக் கூறுவேன்.

- இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி மாற்றம் குறித்து கூட்டமைப்பும் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முள்ளிவாய்க்காலில் நின்றபோது

# போரை நடத்தி முடிக்கும்படி உத்தரவிட்டவர் மஹிந்தவே

## இராணுவத் தளபதி வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 26

வன்னியில் நடந்த போர்இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கையில் அதனை நிறுத்துமாறு சர்வதேசம் கடும் அழுத்தங்களை வழங்கி வந்த போதும் போரைத் தொடர்ந்து நடத்தும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாக உத்தரவிட்டார் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்றநிகழ்வில் இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிக உறுதியாக இருந்தார். 2009 ஏப்ரலில் போர் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கையில் மனிதாபிமானப் போரை நிறுத்துமாறு சர்வதேசத்தின் கடும் அழுத்தங்கள் இருந்தபோதும் அதற்கு அடிபணியவில்லை. எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. போரை நிறுத்தக் கடுமையான அழுத்தங்கள் வழங்கப்பட்டபோதும் தனிப்பட என்னைத் தொலைபேசியில் அழைத்த ஜனாதிபதி, திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கையைத் தொடருங்கள் என்று எனக்கு நேரில் உத்தரவிட்டார். அவ்வளவு உறுதியானது எங்கள்நாட்டின்அரசியல் தலைமை. நாங்கள் வெற்றி பெறுவதற்கு வேண்டியபலத்தை அதுவே வழங்கியது'' என்று ஜகத் ஜயசூரிய கூறினார் என்று இராணுவத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

> என்னைத் தொலைபேசியில் அழைத்த ஜனாதிபதி, திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கையைத் தொடருங்கள் என்று எனக்கு நேரில் உத்தரவிட்டார்.

இராணுவத் தளபதி குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே வன்னியில் மிகப் பெருமளவில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றன என்று ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையிட்டுள்ளது. இறுதிப் போரில் 40,000க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று நம்புவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்தவர்கள் நீதி விசாரணை ஏதுமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றும் பெண்கள் வன்புணரப்பட்டார்கள் என்றும் 'சனல்-4' தொலைக்காட்சி 'சிறிலங்காவின் கொலைக்களங்கள்' மற்றும் 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற இரு ஆவணப்படங்களை வெளியிட்டிருந்தது.

நடந்த மனித உரிமை மீறல்கள் அனைத்துக்கும் அரசின் உயர் மட்டத்தில் உள்ளவர்களே நேரடியான பொறுப்பு என்று மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனால் அரசு அதனைத் தொடர்ச்சியாக மறுத்து வருகிறது. (உ-01)



### முக்கிய நகரங்களில் இரத்த அழுத்த சோதனைக் கருவிகள்

கொழும்பு, ஏப். 26

தொற்றாத நோய்களின் தாக்கத்தைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு நாட்டின் முக்கிய நகரங்களில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் இரத்த அழுத்தத்தை அளவிடும் கருவிகளைப் பொருத்த சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இரத்த அழுத்தம் என்பது சீரான இடைவெளியில் சோதிக்கப்பட வேண்டியது என்பதை மக்களுக்குப் புரிய வைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 'ஹாட் அட்டாக்' போன்ற நோய்களில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்களைக் காப்பாற்ற முடியும் என்று அமைச்சுக் கூறுகிறது.

இது விடயத்தில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவுக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். (உ-01)





சுதந்திர ஊடகக் குரல் நடத்தும்



புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்



'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்குத் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின்

Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புபவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

1 10,000/=
2 7,000/=
3 5,000/=

10 படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும் பரிசுகள் வழங்கப்படும்

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை:

லக்ஷ்மி ஒகனைசேசன்
23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## போருக்குப் பின்னர் பௌத்தர்களின் மத சகிப்புத்தன்மை குறுகிவிட்டது

### 'அக்கறை கொண்ட குடிமக்கள் குழு' அறிக்கை

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் போரின் பின்னர் சிறுபான்மை மதங்கள் மீதான சகிப்பு மனப்பான்மை அண்மைக்காலமாக வேகமாகக் குறைந்து வருகிறது என்று 'அக்கறை கொண்ட குடிமக்கள்' என்ற குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தேசிய சமாதானப் பேரவை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், விழுது மனிதவள மேம்பாட்டு நிறுவனம், தாய்மாரும் புதல்வியரும் அமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அமைப்பு, காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான அமைப்பு என பல அமைப்புகளுடன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சிலரும் இன்னும் பல சமூகப் பிரதிநிதிகளுமாக 200க்கும் அதிகமானவர்கள் கையொப்பங்களிட்டு இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

தம்புள்ளயில் பள்ளிவாசல் மீது பிக்குகள் தலைமையிலான கும்பல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

தம்புள்ளயில் கடந்த 60 ஆண்டுகளாக சட்ட ஆவணங்களுடன் இயங்கி வருகின்ற பள்ளிவாசலையும் அந்தப் பகுதியில் இருக்கின்ற இந்துக் கோவிலையும் அகற்ற வேண்டும் என்று நடத்தப்பட்ட போராட்டங்களையும், கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை நிறுத்தப்பட்டமையையும் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த அறிக்கை, சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காது போனமை வருத்தம் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் போருக்குப் பின்னரான சூழலில், இனச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு அநீதிகள் இழைக்கப்படாமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிக்கை வலியுறுத்துகிறது.

தம்புள்ள விவகாரத்தில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கருத்துக்கள் பெறப்படாமையாலேயே, ஆறு மாதங்களுக்குள் அங்குள்ள பள்ளிவாசலை அகற்றி வேறிடத்தில் அதனை அமைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**தொடர் சம்பவங்கள்**

அனுராதபுரத்தில் முஸ்லிம் தர்கா கடந்த ஆண்டில் தகர்க்கப்பட்டமை, அஷ்ரப் நகரில் முஸ்லிம் மக்களின் சொந்தக் காணிகளை இராணுவம் எடுத்துக்கொண்டுள்ளமை, இலங்கைத்துறை முக்துவாரப் பகுதியை லங்கா பட்டுண என்று சிங்களத்தில் பெயர்மாற்றம் செய்து, அங்கிருந்த இந்து மதச் சிலையை அகற்றிவிட்டு புத்தர் சிலையை நிறுவியுள்ளமை, களுத்துறையில் கடந்த ஆண்டில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலமொன்று தாக்கப்பட்டமை, அம்பலாங்கொடையில் திருச்சபை தாக்கப்பட்டமை, களுத்துறையில் கிறிஸ்தவ போதகர் ஒருவர் தாக்கப்பட்டமை உட்பட்ட சம்பவங்களை சிறுபான்மை மதங்களுக்கு எதிரான இந்த ஆட்சியின் கீழான தாக்குதல்களாக அறிக்கைபட்டியலிட்டுள்ளது.

மதச் சுதந்திரத்தை பாதிக்கும் விதத்தில் நிலங்களை கையகப்படுத்த அனுமதிக்கும் நாடு நகர திட்டமிடல் சட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றமை நிலைமையை இன்னும் மோசமாக்குவதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது. ''இவ்வாறான செயற்பாடுகள் இனச்சிறுபான்மை சமூகங்களுக்கு பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளன. பல்கலாசார சமூக பண்புகள் காணப்படும் இலங்கையில் எங்குவேண்டுமானாலும் மத சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான உரிமை அரசமைப்பில் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னரான இலங்கையில் மத ரீதியான சகிப்புத் தன்மை குறைந்து வருகின்றமையை உணர்ந்து அரச அதிகாரிகள், சிறுபான்மைச் சமூகங்கள் பாதுகாப்பாக உணர்வதை உறுதி செய்யவும் அவர்கள் அரச நிறுவனங்கள் மீது நம்பிக்கை வைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிக்கையை வெளியிட்டுள்ள 'அக்கறை கொண்ட குடிமக்கள் குழு' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளது. (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு ரூ. 75 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.26

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு மணலையும் பறிமுதல் செய்தது.

வேலணை, புளியங்கூடலைச் சேர்ந்த ஒருவரே டிப்பரில் மண்கும்பானிலிருந்து மணல் ஏற்றிச் சென்றபோது ஊர்காவற்றுறைப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜாவிடம் சந்தேகநபரைப் பொலிஸார் முற்படுத்தினர். தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மணலைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார் நீதிவான்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வரது டிப்பர் வாகனம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## யாழ். மாவட்ட வீதிகளின் புனரமைப்புக்கு 2ஆம் கட்டமாக ரூ. 300 மில்லியன்

யாழ்ப்பாணம், ஏப்.26

'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் வீதிப் புனரமைப்புக்கென 2 ஆம் கட்டமாக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள பொறியியலாளர் எஸ். றெஜிலதரன் தெரிவித்தார்.

வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-


பிரதேச சபைகளில் உள்ள 28 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய நிலையில் முதற்கட்டமாக 21 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீதியும் ஒரு கிலோ மீற்றர் தொடக்கம் 3 கிலோ மீற்றருக்கு உட்பட்டவை.

தெரிவு செய்யப்பட்ட 21 வீதிகளதும் ஒப்பந்தகாரர்களின் ஒத்துழைப்புக்கள் பூரணமாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் சமூக கண்காணிப்புக் குழுக்களின் ஒத்துழைப்புக்களும் கிடைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் தற்போதைய நிலைவரம் குறித்தும் ஆராயப்பட்டது.

வேலைத்திட்ட அத்தியட்சகர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் குறித்த காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டிக் காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதித் திட்டப் பணிப்பாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-13)



சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தென்னிலங்கையில் இருந்து ஆலய நிர்வாகத்தினரால் கொண்டு வரப்பட்ட யானை ஆலய முகப்பில் விழுந்து வணங்குகிறது. (ம)

# பொருள்களின் நுகர்வு குடாநாட்டில் வீழ்ச்சி

## பொருள்களின் விலை உயர்வே இதற்குப் பிரதான காரணம்

*யாழ்ப்பாணம், ஏப்.26*

*பொருள்களின் நுகர்வு வீதம் யாழ்ப்பாணத்தில் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக யாழ்.நகரப் பகுதி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். பொருள்களின் சடுதியான விலையேற்றமே நுகர்வின் வீதத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வீழ்ச்சி காண வைத்துள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.*

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் கொழும்பு விலைக்கே பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றபோதும் யாழ்ப்பாண மக்களின் நுகர்வு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. விலைவாசி ஏற்றம் காரணமாக மக்களிடம் பணப்புழக்கம் குறைந்து விட்டது. இதுவே நுகர்வு வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணம் என்கிறார் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

பொருள்களின் விலையேற்றத்துக்கு ஏற்ப தனியார் அரச துறை ஊழியர்களின் சம்பளம் இன்னமும் அதிகரிக்கப்படவில்லை. இதனால் மக்களின் சேமிப்பு பழக்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் குறைவடைந்து செல்கிறது. அத்துடன் மக்கள் செலவு செய்வதற்குத் தேவையான பணம் அவர்களிடம் இல்லை. இதுவே அத்தியாவசியப் பொருள்களின் நுகர்வு வீதம் வீழ்ச்சி காணுவதற்குக் காரணம் என வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் வங்கிகள், நிதி நிறுவனங்களின் 114 கிளைகள் இயங்கி வருகின்றன. அவை மக்களின் பணத்தை வைப்பிலிடுவதற்காக முயன்று வருகின்றனவே தவிர அவற்றின் மூலம் மக்கள் நன்மையடைவதாகத் தெரியவில்லை எனவும் வர்த்தகர்களால் தெரிவிக்கப்படுகிறது. பெரியளவில் கடன்களை வழங்க வேண்டாம என்றும் வங்கி மேலதிகப் பற்றுக்களை அதிகரிக்க வேண்டாம் என்றும் கொழும்பில் இருந்து வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. இதுவும் மக்களின் கைகளில் பணப்புழக்கம் குறைவடைந்தமைக்கான காரணங்களில் ஒன்று எனக் கூறப்படுகிறது.

அத்துடன் காப்புறுதி நிறுவனங்கள் கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்து மக்களின் பணத்தைத் தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்கின்றன. காப்புறுதியில் இணைந்து பணத்தைச் செலுத்தி வந்தவர்களுக்கு விலையேய்றம் காரணமாகத் தொடர்ந்து அதைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கட்டுப் பணத்தையும் இழக்கும் நிலையில் பல மக்கள் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுவும் மக்களின் நுகர்வு வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

இவ்வாறாக விலைவாசி ஏற்றமே நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருள்களின் நுகர்வில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆடம்பர பொருள்களின் நுகர்வு வீதம் மிக மோகமாக வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர். (த-3)

## சேந்தாங்குளம் பகுதியில் மீனவர்களுக்கு வசதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.26

இளவாலை, சேந்தாங்குளம் பகுதியில் ஐ.ஒ.எம். நிறுவனத்தின் உதவியுடன் 14 மில்லியன் ரூபா செலவில் மீனவர்களுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீனவர் இளைப்பாறும் மண்டபம், மீன் ஏல விற்பனை நிலையம் அமைத்தல் உட்படப் பல திட்டங்கள் இதில் அடங்கியுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

## மீனவர்களுக்கு ஏப்ரல் மாத எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ். மாவட்ட மீனவருக்கான ஏப்ரல் மாத எரிபொருள் மானிய முத்திரைகளை விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த முத்திரைகளை இந்த வாரத்துக்குள் விநியோகித்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்தது.

பாஷையூர், குருநகர், மாதகல் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு நேற்று இந்த மானிய முத்திரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு மானிய முத்திரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## கால்நடைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்.26

கோப்பாய், நீர்வேலி போன்ற பிரதேசங்களில் விவசாய நிலங்களில் மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் கால்நடைகளைத் திருடர்கள் களவாடிச் செல்வதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வரும் திருடர்கள் மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் ஆடுகளையே இவ்வாறு திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருட்டுகள் கூடுதலாகப் பகலிலேயே இடம்பெறுகின்றன.

மோட்டார் சைக்கிள்களில் மரப் பெட்டிகளைக் கட்டிக் கொண்டு வரும் இந்தத் திருடர்கள் ஆடுகளை அவற்றுக்குள் தூக்கிப் போட்டுக் கொண்டு தப்பி விடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (த-17)

## சேதமடைந்த வீதியால் நெருக்கடி நிலைமை

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியின் பஸ் தரிப்பு நிலையத்துக்குச் செல்லும் குறுக்கு வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது.

அந்த வீதியில் அதிகளவு வாகன நெரிசல் காணப்படுகின்ற போதும் வீதி திருத்தப்படவில்லை. வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்த ஒரு வழிப்பாதை குறுக்கு வீதியில் வங்கிகள் அதிகம் காணப்படுவதுடன் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளின் பஸ்தரிப்பிடமும் காணப்படுகிறது.

இந்த வீதியின் ஊடாக நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் பயணித்தவாறே உள்ளன.

இந்த நிலையில் தற்போது இந்த வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

ஒரு வழிப்பாதையாக இருக்கும் இந்த வீதியின் ஊடாக பெரிய வாகனங்களே அதிகம் பயணித்த வண்ணம் உள்ளன. (ம-14)

> அதிகளவு வாகன நெரிசல் காணப்படுகின்ற போதும் வீதி திருத்தப்பட வில்லை. வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

## 2006 இல் காணாமற்போனோர்: 2ஆம் கட்ட விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.26

2006 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போனக் கூறப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களது மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளும் பொருட்டு இரண்டாம் கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2006ஆம், 2007ஆம், 2008ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல் போனவர்கள் தொடர்பில் அந்தக் காலப் பகுதிகளில், காணாமற் போனவர்களது உறவினர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் 2007, 2008, 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பில் எம்மிடம் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து இவர்களின் உறவினர்களை அழைத்து இரண்டாம் கட்ட விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம்.

2006 ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் தற்போதுதான் அடுத்தகட்ட விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றோம். முறைப்பாடுகளில் காணப்படுகின்ற ஆவணக் குறைபாடுகளைச் சீர்செய்வதுடன், பொலிஸ் முறைப்பாடு தொடர்பிலும் ஆவணங்களைப்பெற்றுவருகின்றோம். இந்த விசாரணைகள் ஒரு வார காலத்துக்கு எமது அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளன.

இதன் பின்னர் கொழும்பிலிருந்து எமது தலைமையகத்தால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.- என்றார். (த-5)

## கள் வைத்திருந்த மூவருக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி வீட்டில் தலா 2 போத்தல் வீதம் கள்ளு வைத்திருந்த 3 பேருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தலா 500 ரூபா வீதம் அபாரதம் விதித்தது நேற்று.

காரைநகரைச் சேர்ந்த மூன்று பேரையும் சங்கானை மதுவரிப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையின்போது கண்டறிந்து ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தினர்.

மூவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

**கூட்டம்**

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவுக்குழு மூலம்தான் தீர்வு அதை டில்லிக்கு புரிய வைப்போம்

கனவு காண்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுப்பேச்சு ஸ்தம்பிதமடைந்துள்ளமை குறித்துக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முனைப்புடனேயே நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்துள்ளோம். அந்தக் குழுவில் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு கூட்டமைப்பு ஒத்துழைப்பு நல்க மறுக்கின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது உறுப்பினர்களை அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பினால்தான் தீர்வை நோக்கி நகரமுடியும். இல்லையேல் நாம் மாற்றுவழிகளைக் கையாளமாட்டோம்.

தீர்வு விடயத்தில் தெரிவுக்குழுவை விடுத்து வேறொரு வழியில் நாம் அடியேனும் நகரமாட்டோம். இதுதான் எமது உறுதியான நிலைப்பாடும்கூட. இதை நாம் இந்தியாவிடமும் நேரில் சென்று சொல்வோம்.

நான் அடுத்த மாதம் நடுப்பகுதியில் இந்தியா செல்லவுள்ளேன். இதன்போது இந்தியத் தரப்பிடம் இந்த விடயத்தை நேரில் தெரிவிப்பேன்.

தீர்வு விடயத்தில் அரசு காலத்தை இழுத்தடிக்கின்றது என விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தவறானதொரு கருத்தாகும். கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் தெரிவுக்குழுவுக்கு வராமையால்தான் அதை இயக்க முடியாமல் உள்ளது.

கூட்டமைப்பு தமது பிரதிநிதிகளை தெரிவுக்குழுவுக்கு அனுப்பிய பின்னர் அரசு அசமந்தப்போக்கில் செயற்படுமானால் அதை எங்குவேண்டுமானாலும் கூட்டமைப்பினர் சொல்லலாம். அதனைவிடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சிமாற்றம் குறித்து கனவு காண்பது பயனற்றவிடயமாகும் - என்றார் பஸில். (சி-த)

## அரசிடம் இருந்து விலகமாட்டோம்

கொழும்பு, ஏப்.26

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து உடனடியாக விலகுவதற்கான எண்ணம் எதுவும் தனது கட்சிக்கு இல்லை என நீதியமைச்சரும், முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து பேச்சு மூலம் சுமுகமாகத் தீர்வுகாணவே முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்து விலகிக் கொள்வது குறித்துமுஸ்லிம் காங்கிரஸ் ஆலோசித்து வருவதாக வெளியாகி இருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந் நிலையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 28ஆம்திகதி இடம்பெறவுள்ளதாக அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

## அக்ஷன் பெய்ம் எச்சரிக்கை மிரண்டது இலங்கை அரசு

என்று குற்றம் சாட்டும் அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக அக்ஷன் பெய்ம் நிறுவனம் கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தது. அத்துடன் மிருகத் தனமான இந்தப் படுகொலை தொடர்பில் உண்மையையும் குற்றவாளிகளையும் கண்டறிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவை சுதந்திரமான அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அது கோரியிருந்தது.

இந்த நிலையிலேயே இந்தப் படுகொலைகள் தொடர்பாக புதிய விசாரணைகளை நடத்த உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

புதிய விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து அறிக்கை ஒன்றுக்காக அரசு காத்திருக்கிறது. நாம் மீண்டும் இந்த விசாரணைகளை ஆரம்பத்தில் இருந்து மேற்கொள்வதிலேயே கவனம் செலுத்தி உள்ளோம் என்று அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (த)

## அம்பாறையில் இன்று ஹர்த்தால்

சபையும் அமைப்பு இந்த பூரண ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளதுடன், இன்றைய தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கோரியுள்ளது.

வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரச சாரா, பாடசாலைகள், வங்கிகள், நிறுவனங்கள், மாலைநேர கல்வி நிலையங்கள் அனைத்தையும் மூடி இந்தக் ஹர்த்தாலில் பங்கு கொள்ளுமாறு இந்து அமைப்பு துண்டுப் பிரசுரம் மூலம் கோரியுள்ளது.

தம்புள்ளச் சம்பவம் தொடர்பில் இனவாதிகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்க நாளை வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழுகையின் பின்னர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இந்த அமைப்பு பொதுமக்களிடம் கோரியுள்ளது.

இந்த நாட்டையும், அரசையும், ஜெனீவா மனித உரிமை சபையில் வாக்குப் பெற முடியாதிருந்த முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பேசி பல நாடுகளின் வாக்குகளைப் பெற்று காப்பாற்றியதற்கு ஜனாதிபதி செய்யும் கைமாறு தம்புள்ள பள்ளிவாசல் உடைப்பா? என்று இலங்கை தேசிய ஒற்றுமைச் சபை கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

## தமிழர்களின் கடும் எதிர்ப்புக்கு பணிந்தது பாதுகாப்பு அமைச்சு

சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல் பிரமுகர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்தே அவர் மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார்.

கோவிலுக்கு பாதிப்பேற்படாத வகையில் சட்டவிரோதக் கட்டடத்தை அகற்றுவது என்பது உட்பட முக்கிய பல விடயங்களை ஆராய்ந்து விரைவில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அவர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதை அடுத்து அதிகாரிகள் அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அறிய முடிகின்றது.

## இலங்கைக்கு எதிராக மீண்டும் அமெ. செயற்படும் சாத்தியம்

சமரசிங்க எச்சரித்துள்ளார். எமது அனுமதியின்றி உள்நாட்டுச் செயற்பாட்டுக்கு மனித உரிமைகள் சபை தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியாது. எனினும் விரைவில் அவர்கள் எமக்கு உதவி வழங்குவது குறித்து யோசனை முன் வைக்கும் சாத்தியம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைப் பார்க்கும் போது எமது அனுமதியின்றி உள்நாட்டுச் செயற்பாட்டுக்கு மனித உரிமைகள் சபை தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியாது.

அதாவது எமது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தாம் தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயார் என்று கூறலாம்.

மனித உரிமைகள் சபையில் நான் நிகழ்த்திய இறுதி உரையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் அதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். இதுதான் எமது நிலைப்பாடாகும்.

இதேவேளை அமெரிக்கா எமக்கு எதிராக ஏன் இவ்வாறான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தது என்று நாம் ஆராயவேண்டியுள்ளது. 2009 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் கூட அமெரிக்கா எமக்கு எதிரான போக்கை கொண்டிருக்கவில்லை. அந்த வகையில் இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து பக்கச்சார்பான நிலையில் இருந்துகொண்டே அமெரிக்கா இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அதற்கு வாக்குகளைச் சேகரிக்கும் முயற்சியிலும் அமெரிக்கா பக்கச்சார்பான முறையிலேயே செயற்பட்டது.

இலங்கையானது யுத்தத்தின் பின்னர் பாரிய வேலைத்திட்டங்களைச் செய்துள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அது தொடர்பில் தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமெரிக்கா செயற்பட்ட விதத்தை பார்க்கும் போது இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்த அக்கறையில் அமெரிக்கா செயற்பட்டதாக தெரியவில்லை. அது பின்னர் அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாறியதை அவதானிக்க முடிந்தது.

எனவே மீண்டும் ஒரு முறை இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்படலாம். தற்போது கொண்டுவரப்பட்டதைவிட ஆழமான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படலாம். எனவே எவ்வாறான நிலைமையையும் எதிர்கொள்ளக் கூடிய வகையில் நாங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்-என்றார். (த)

## மர்மப்பொருள் வெடித்ததில் இரு சிறுவர் உடல் சிதறிச் சாவு

கப்பட்ட தமது வீட்டின் முன்னால் இந்த இரண்டு சிறுவர்களும் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் விளையாடிக்கொண்டிருந்தனர். நேற்றுமுன்தினம் பெய்த மழையை அடுத்து வீட்டு முற்றத்தில் புதைந்திருந்த மர்மப்பொருள் ஒன்று வெளியே தெரிந்தது. சிறுவர்களின் தாயான முன்பள்ளி ஆசிரியை பாமினி வீட்டில் சமையலில் ஈடுபட்டிருந்தார். தகப்பனான முகுந்தன் வேலைக்காக வெளியே சென்றிருந்தார். இந்நிலையில் சிறுவர்கள் இருவரும் முற்றத்தில் வெளித் தெரிந்த அந்த மர்மப்பொருளை கத்தி ஒன்றைப் பாவித்து தோண்டி வெளியே எடுக்க முற்பட்டுள்ளனர். இந்த வேளையில் அது பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதனால் இரு சகோதரர்களும் அந்த இடத்திலேயே உடல் சிதறி மரணமானார்கள்.

தகவல் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் இது குறித்து கிளிநொச்சி நீதிவானுக்குத் தெரியப்படுத்தினர். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சிறுவர்களின் உடல்களை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து சடலங்கள் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டன. இந்த துயரச் சம்பவத்தினால் அந்தப் பகுதி பெரும் சோகத்தில் மூழ்கியது. சிறுவர்கள் இருவரும் சம்பவத்தில் உயிரிழந்த நிலைகண்டு அப்பகுதியில் உள்ள மக்கள் பலர் கதறி அழுதனர் என்று எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடம் பொது மக்கள் ஏற்கனவே மீளக்குடியமர்ந்த பகுதி எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சம்பவம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்ட யாழ். மாவட்ட கண்ணி வெடி ஒருங்கிணைப்புக்குழு அதிகாரி, அதனால் சம்பவ இடம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட இடமா என்பதை உறுதிப்படுத்த முடியாது என்றார்.(த-4-6-9)

## தமிழீழ தனிநாடு உருவாக இந்தியா உதவ வேண்டும்

மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தி.மு.க தலைவர் கருணாநிதி குறிப்பிட்டபடி, தமிழீழத்தை அமைப்பது குறித்து அங்கு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

தமிழர்கள் அங்கு அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்காக இந்த வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐ.நாவையும் அனைத்துலக சமூகத்தையும் இந்தியா இணங்கச் செய்ய வேண்டும்.

இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கையில் இருந்து திரும்பியுள்ள போதும், மத்திய அரசிடம் இருந்து எந்த அறிக்கையும் வராதது வருத்தமளிக்கிறது-என்றார்

அதேவேளை, தமிழர்களுக்கு புனர்வாழ்வு உதவிகள் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று தி.மு.கவின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான தாமரைச்செல்வன் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழர்களுக்கான உதவிகள் அவர்களுக்கே சென்றடைவதற்கும், அது திசை திருப்பி விடப்படாதிருப்பதை உறுதி செய்வதற்கும் இந்தப் பொறிமுறை அவசியம். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்ட வீடுகள் பல சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கின்றன. சிங்களவர்கள் அங்கு அத்துமீறிக் குடியேறி வருகின்றனர்.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் இந்த விவகாரங்களையெல்லாம் இந்தியா கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (த)

## டில்லியின் முடிவால் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது கொழும்பு

ளிகளாக வருகின்றனர் என்றும், ஆலயங்களுக்குள் நுழைகின்றனர் என்றும் அங்குள்ள பொதுமக்கள் எம்மிடம் சுட்டிக்காட்டினர்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்தும் இலங்கை ஜனாதிபதியுடன் பேசப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு ஒன்றை எட்டவே விரும்புகின்றது. தாம் இலங்கையர்கள் என்பதில் பெருமைப்படுகின்றனர் என அதன் உறுப்பினர்கள் கூறினர். அவர்கள் வன்முறைகளை எதிர்க்கின்றனர். பிளவுபடாத இலங்கை என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

எனவே, என்ன தடை உள்ளது என்று இலங்கை அரசை நாம் கேட்டோம். பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுமாறு நாம் இருதரப்புகளையும் கேட்டுக்கொண்டோம்.

அதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எட்டுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைக்க மட்டுமே தன்னால் முடியும். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறினார் ராஜபக்ஷ.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது குறித்து இலங்கைத் தலைவர்கள் எம்முடன் விவாதித்தனர்.

தீர்மானத்திற்கு ஆதரவாகப் புதுடில்லி வாக்களித்தது கொழும்பை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தத் தீர்மானம் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவே சொல்கிறது. இது ஒன்றும் இலங்கை அரசுக்கு எதிரானது அல்ல. நீங்கள் அமைத்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நீங்களே நடைமுறைப்படுத்துங்கள் என்றுதான் கூறுகிறதே என்று அவர்களிடம் கூறியபோது பதில் பேசாமல் இருந்தனர் என்று மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சி மே தினத்தில் பங்குபற்றுமாறு அழுத்தம்

## வேலையற்ற பட்டதாரிகள் விசனம்

கொழும்பு,ஏப் 26
விசேட நியமன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் அரசின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என அமைச்சர்களினால் கேட்கப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விசனம் தெரிவித்துள்ள்து.

தாம் செய்யும் வேலைக்காகவே புதிதாக நியமனம் பெற்றவர்கள் சம்பளம் பெறுகின்றனர். இதனால் அரசின் பிரசார வேலைக்கு அவர்களை அழைக்க முடியாது என வேலையற்ற பட்டதாரிகளின் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளரான தம்மிக்க முனசிங்க தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என இவர்களிடம் அரசு கூறியுள்ளது. ஆனாலும் அரசின் நெருக்குதலுக்கு மசிய வேண்டாம் எனவும் முனசிங்க கேட்டுள்ளார்.

தற்போது, வழங்கப்பட்டு வரும் வேலைவாய்ப்பு திட்டத்துக்கமைய 15,000 இற்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படவுள்ளது. ஆயினும் கிழக்கில் எந்த நியமனமும் வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.வவுனியா, மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அரசின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தமையால் நியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (த)

# தம்புள்ளையில் பள்ளிவாசல் ஒருபோதும் இருக்கவில்லை

## ஹெல உறுமய கூறுகிறது

கொழும்பு,ஏப் 26
ரங்கிரி தம்புள்ளை புனித பூமி பிரதேசத்துக்குள் உள்ள பள்ளிவாசல், ஒரு பள்ளிவாசல் அல்ல எனவும் அங்கு பள்ளிவாசல் அமைப்பதற்கு அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறவில்லை எனவும் ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

1962 ஆம் ஆண்டு அந்தப் பகுதியிலிருந்த வர்த்தகர் ஒருவருக்கு கடையொன்றை நிர்மாணிப்பதற்காகக் காணி வழங்கப்பட்டது என ஜாதிக ஹெல உறுமய தலைவர் வண. ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வர்த்தகர் அங்கு வீடு ஒன்றை அமைத்தார். சில வருடங்களின் பின்னர், சமய நடவடிக்கைகளுக்காகப் பிறிதொரு அறையை அமைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ 1982 ஆம் ஆண்டு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தவேளை, அவர் 300 ஏக்கர் பகுதியை புனித பூமியாக முன்மொழிந்தபோது அந்தக் காணி பெறப்பட்டது. அப்போது அது ஒரு மத நிலையமாக குறிப்பிடப்படவில்லை.

இந்தக் காணியில் சட்ட விரோதமாகப் பள்ளிவாசல் அமைக்கப்படுவதாக தம்புள்ள விகாராதிபதி வண. இனாமுலுவ சுமங்கல தேரர் அதிகாரிகளுக்கு அறிவித்தார். ஆனால் அதிகாரிகள் யாவரும் அதைக் கவனிக்கத் தவறிய நிலையில், அதற்கு எதிராக அப்பகுதியிலுள்ள பிக்குகள் மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு வீதிக்கு வந்தனர்.

அவர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமோ, மாவட்ட செயலாளரிடமோ, தம்புள்ளை மாநகரசபையிடமோ இதற்கு அனுமதி பெறவில்லை - என்றார். (த)

### விரிவுரையாளர்களுக்கு வீடமைப்புக் கடன்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் கோரிக்கைக்கு அமைய அவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் வீட்டுக்கடன் வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் ஆரம்பமாக அரச வங்கிகளில் இருந்து 7 வீத வட்டியில் கடன் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அமைச்சு முன்னெடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறியுள்ளார்.

விரிவுரையாளர்களுக்கு 20 லட்சம் ரூபாவும் கல்வி சாரா ஊழியர்களுக்கு 10 லட்சம் ரூபாவும் வீட்டுக் கடன் பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்துள்ளார். (த-4)

# பாடத் திட்டங்களிலும் நுழைகிறது சீனமொழி

கொழும்பு,ஏப் 26
இலங்கையில் ஜி.சி.ஈ சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் சீனமொழியும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

கொழும்பில் கன்பூசியஸ் நிலையத்தில் இடம்பெற்ற சீனமொழிப் பயிற்சி நிறைவு நிகழ்வில் பேசிய போது, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை சீன நட்புறவை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கெனச் சீனமொழி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் பௌதிக வளங்களை வழங்க சீனா முன்வந்துள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த)



நேற்று நீதிமன்றுக்கு வருகை தந்திருந்த சரத் பொன்சேகா சுகயீனம் காரணமாக கடும் அவஸ்தைப்பட்டார். அவரை நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதனையடுத்து வாகனத்தில் அவர் அழைத்துச் செல்லப்பட்டவேளை...

### உதுல் பிரேமரத்ன பிணையில் விடுதலை

கொழும்பு,ஏப் 26
நீதிமன்றில் முன்னிலையான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இயக்கத்தின் உறுப்பினர் உதுல் பிரேமரத்னவை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

5000 ரூபா பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணை இரண்டிலும் உதுல் பிரேமரத்ன விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வனாத்தமுல்ல - ரி-20 தோட்டத்தில் அண்மையில் பொலிஸார் சோதனை நடத்திச் சிலரைக் கைது செய்ததை அடுத்து பிரதேச மக்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பதற்றம் ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பதற்றம் ஏற்படுத்தியமை, மக்களை ஒன்றுதிரட்டியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உதுல் பிரேமரத்ன மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் அவரது உறவினர்களிடம் விசாரணை நடத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை உதுல் பிரேமரத்னவைக் கைது செய்யப் பொலிஸார் முனைந்தபோது அவர் சட்டத்தரணி வழியாக நீதிமன்றில் முன்னிலையானார். இதன்போது நீதிமன்ற வளாகத்தில் வைத்தே உதுல் பிரேமரத்னவிடம் வாக்கு மூலம் பெறுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரஹர்ஷா ரணசிங்க பணித்தார்.

# அரசியல் தீர்வு தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?

## அரச அதிபரிடம் கேட்டார் நோர்வே அதிகாரி

யாழ்ப்பாணம்,ஏப் 26
இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் எதிர்ப்பார்ப்பு என்ன? என்பது தொடர்பில் நேற்று யாழ். வந்த நோர்வேத் தூதரக முத்நிலைச் செயலாளர் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கேள்வி எழுப்பினார்.

நோர்வே தூதுரகத்தின் முதல் நிலைச்செயலர் மார்ரிலியா ரொய்ஜேனீஸ் அரச அதிபரிடம் இது தொடர்பாகக் கேட்டறிந்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நோர்வேத் தூதுவர் நேற்று வருகை தந்து பல்வேறு தரப்பையும் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருந்தது. எனினும் சுகவீனம் காரணமாக அவர் வரவில்லை. நோர்வேத் தூதரகத்தின் முதல் நிலைச் செயலரே இங்கு வந்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் வசந்தபுரத்தில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் தலா 7 லட்சத்து 68 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 50 வீடுகளை மக்களிடம் கையளித்தனர். அத்துடன் சிறுவர் பாடசாலை, கூட்டுறவுச் சங்க மண்டபம், பொது நோக்கு மண்டபம், அரைக்கும் ஆலை என்பவற்றையும் திறந்து வைத்தனர்.

இதன்பின்னர்நேற்றுமாலை யாழ். மாவட்ட செயலகத்தில் அரசஅதிபர்திருமதி இமெல்டா சுகுமாரை இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச அதிபர் தெரிவித்ததாவது:-

மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் நோர்வே அதிகாரி கேட்டறிந்தார்.

மேலும் தற்போதைய யாழ். மாவட்ட இளைஞர்களது நோக்கம் எவ்வாறிருக்கிறது என்பது தொடர்பிலும் ஆராய்ந்தார். மேலும் பொதுமக்கள் தீர்வு நிலைப்பாட்டில் எவ்வாறு இருக்கின்றனர் என்று கேட்டார். அவர்கள் உடனடியாகத் தீர்வை எதிர்பார்ப்பதாக நான் அவரிடம் தெரிவித்தேன்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு வரவு - செலவு திட்ட நிதியை விட மேலதிக நிதி வழங்கப்படுகின்றமை தொடர்பிலும் அவர் ஆராய்ந்தார்.

இறுதியில் அவரிடம் இங்குள்ளோருக்கான வீடுகளின் தேவை தொடர்பில் கோரிக்கை விடுத்தேன் - என்றார். (த-5)

# சரியான வானிலை தெரியாத வளிமண்டலத் திணைக்களம்

## அமைச்சர் மஹிந்த அமரவீர காட்டம்

கொழும்பு,ஏப் 26
வளி மண்டலத் திணைக்களம், வானிலை பற்றிய எதிர்வு கூறலைச் சரியாக செய்ய முடியாது இருப்பதனால் இலங்கைக்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தம்புள்ள வைத்தியசாலையில் 80 மில்லியன் பெறுமதியான கருவிகள் இழக்கப்பட்டுள்ளதாகவும் தம்புள்ள பொருளாதார நிலையத்திற்கு 200 மில்லியன் ரூபா அளவிலான சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அமரவீர தெரிவித்தார்.

வளிமண்டலத் திணைக்களம் நவீனமயப்படுத்தப்பட்டால் இயற்கை அனர்த்தங்களால் உண்டாகக் கூடிய சேதங்களை தவிர்க்க முடியுமெனவும் அமரவீர கூறினார்.

> வளிமண்டல திணைக்களம் நவீன மயப்படுத்தப்பட்டால் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படக் கூடிய சேதங்களை தவிர்க்க முடியும்

வளிமண்டலத் திணைக்களம் மழை பெய்யும் என அறிவித்தால் குடையை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை என மக்கள் கூறுவது உண்மையாகிவிட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.



தூரத்தில் உள்ளபோதே காற்றின் வேகத்தைச் சரியாக அறிவதற்கு உதவும் டொப்ளர் ராடர் தொகுதி தெனியாய கொங்கலகந்தவில் நிறுவப்பட்டுள்ளது எனவும் நவீன கருவிகளை அமைச்சு கொள்வனவு செய்யவுள்ளதாகவும் இவ்வருட முடிவுக்குள் ராடர்கள் தொழிற்பட தொடங்கி விடும் எனவும் அமைச்சர் கூறினார்.

இந்த தொகுதி அமைக்கப்பட்டதன் பின் வளிமண்டலத் திணைக்களம் மழை பற்றி சரியான எதிர்வு கூறலைச் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறினார். (த)

# இன, மத முரண்பாடுகளை மீண்டும் ஏற்படுத்த முயற்சி

## அரசைக் கண்டிக்கிறார் கரு

கொழும்பு,ஏப் 26
இன, மத ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தி பொது மக்களை மீண்டும் நெருக்கடிக்குள் ஆழ்த்த அரசு முயற்சிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.இதனை ஐ.தே.க வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீண்டும் பிளவுகளை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படுகின்றது. அதனை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீண்டும் நாட்டில் இன, மத ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்படுகிறது.

யுத்த நிறைவின் பின்னர் நாட்டு மக்களிடையே சகோதரத்துவம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மீண்டும் நாட்டுக்குள் பிளவினை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகி வருகின்றமை வருத்தமளிக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையை மக்கள் எதிர்பார்க்கவில்லை -என்றார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை, தம்பாட்டி - நுனிபுரம் அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய

01ஆவது வெளியீடாக கோ. சத்தியனின் இசையில்

"மணிசெல்லாம் முத்துமாரியம்மா இறுவட்டு வெளியீட்டு விழா"

காலம் : 26.04.2012 வியாழன் நேரம் : மதியம் 1 மணி
இடம் : ஆலய முன்றல் தலைமை : க. ஜெயக்குமார் (செயலாளர், தேர்த் திருப்பணிச் சபை)

முதன்மை விருந்தினர்: **பேராசிரியர் மா. வேதநாதன்**
தலைவர் - இந்து நாகரிகத்துறை, (யாழ். பல்கலைக்கழகம்)

அறிமுக உரை: **திரு. க. அருந்தாகரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, (யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: **திரு. இம்மனுவல் ஜோன்சன்**
கலாசார உத்தியோகத்தர், உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

**நிகழ்வுகள்:**

வரவேற்புரை - ஞ. டக்ளாஸ், துணைத்தலைவர், பரிபாலன சபை
தலைமையுரை
வெளியீட்டுரை - அ. அன்னராசா (செயலாளர், கிராம முன்னேற்ற சங்கம்)
அறிமுக உரை
வெளியீடு
கலைஞர் கௌரவிப்பு
சிறப்புரை
நன்றியுரை - ஞ. பிரணவன் (ஆலய பரிபாலன சபை உறுப்பினர்)

அனைவரும் வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.26

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவினர் இணைந்து நடத்திய நடமாடும் சேவையில் வலி.வடக்கு பகுதியைச் சேர்ந்த 650 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

கடந்தவாரம் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் தொலைந்த அடையாள அட்டைகளுக்குப் புதிய அடையாள அட்டை வழங்கல், புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்குப் புதிய அடையாள அட்டை வழங்கல், பழைய அடையாள அட்டைகளை புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றன.

இந்த நடமாடும் சேவையில் ஒபர் நிறுவனம், டெனிஸ் அகதிகள் பேரவை, சர்வோதய நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கான நடமாடும் சேவைக்கான பணிகளை மேற்கொண்டன.

(எ-14-36)

வடமராட்சி துன்னாலை திருவருள்மிகு
ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய (புளியங்கியான் பிள்ளையார்)



**மகோற்சவம் - 26.04.2012**

மகோற்சவ பிரதமகுரு - சிவஸ்ரீ நாகரத்தின கலாதர சிவாச்சாரியார் B.A. Hons., M.A.
கொடியேற்றம் - காலை 10 மணி
உபயம் - கந்தசாமி தயாகரன் (பவான்) குடும்பம்
தொடர்சொற்பொழிவு : சிவஸ்ரீ நாகரத்தின கலாதர சிவாச்சாரியார் B.A.Hons., M.A.
விடயம் - விநாயகர் புராணம்

அனைவரும் ஆலயம் வருக விநாயகப் பெருமானின் அருளைப் பெறுக.

இங்ஙனம்
**ஆலய பரிபாலன சபை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச மின் பொறியியலாளர்
ச. ஞானகணேசன் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி சிரோன்மணி சங்கரப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மின் அத்தியட்சகர் (வர்த்தகம்), மின்மானி வாசிப்பாளர்கள்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



**அமரர் கந்தையா சச்சிதானந்தன்**

கடந்த 27.03.2012 செவ்வாக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 27.04.2012 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக் கொடை நிறுவனத்தில் இடம்பெறும்.

அங்கு இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)


366, கோவில் வீதி,
நல்லூர். குடும்பத்தினர்.

## வாடகைக்கு

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் இயங்கும் 09 அறைகள் (08 அறைகள், குளியலறை இணைந்தவை) ஒரு சமையல் அறை, வாகனத் தரிப்பிட வசதி மற்றும் சகல வசதிகளுடன் கூடிய உல்லாச விடுதி வாடகைக்கு உண்டு. தொழில் நிறுவனங்கள், அரச அரச சார்ப்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு - 0773107685, 021 222 3533

## 45 ஆம் நாள் நினைவு நாள்



அமரர் **செல்லையா முத்தையா**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.04.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரினது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரவேலு ஒழுங்கை,
அரியாலை. குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தைச் சார்ந்த திருமதி பு. ரஜனி அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பு இரத்தினம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள்.
யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள
உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்



**திருமதி லீலாவதி இராசையா**

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி இராசையா 24.04.2012 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற இந்திரன் மற்றும் சுமதி, கண்ணன், சங்கர் ஆகியோரின் அன்பு தாயும், சண்முகதாஸ் (ராசு - சாந்தி சலூன் - நல்லூர்), செல்வமலர், நவந்தினி, இன்பராணி ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரதீப் (பாபு), பிரசோபா, பிரசாந், அனிசீயா, தனுசியா, நிரோசன், சனித்தா, அனித்தா, சபேசன், சுபாஸ் (கட்டார்) ஆகியோரின் பேர்த்தியும், அஸ்வினின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. சண்முகதாஸ் (மருமகன்),
ச. சுமதி (மகள்)

Hunters
Trusted Quality Since 1911

ஹன்டர் அன்ட் கம்பனி பிஎல்சி

மூன்று நாள் சேல்

சர்வதேச புகழ்பெற்ற தயரிப்பு வகைகள் குறைக்கப்பட்ட விலைகளில் வீட்டு மற்றும் தோட்ட தயாரிப்புகள், கைத்தொழில் மற்றும் மென் பொறியியல் தயாரிப்புகள், சைக்கிள்கள், உபகரணங்கள்



2012 ஏப்ரல் 26, 27, 28
காலை 9 - மாலை 7

at the following showroom

யாழ்ப்பாணம்
320 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை: 021-4923112.

## வேலைக்கு ஆள்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் கடை ஒன்றுக்கு வாகனத்தில் சென்று பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவியாளர்கள் மற்றும் களஞ்சியக் காப்பாளர் தேவை.

தொடர்பு - 0776681670

## கட்டட வேலைகள் செய்தல்

கட்டடம் கட்டுதல், மாபின் பதித்தல், ரெரோசோ, பிளம்பிங், பெயின்ரிங் .... தரமாகச் செய்யப்படும்.
[illegible]
அச்சுவேலி - 0771391623

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## டியு குணசேகராவின் அர்த்தமுள்ள யோசனை அரங்கேறுமா...?

இலங்கை - இந் நாட்டு - அரசு, புதுடில்லியை விட தமிழகத்துடனான ராஜீக உறவுகளை ஊக்குவிக்க வேண்டும்; வளர்க்க வேண்டும்.

சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் இதுவரை சிந்திக்காத, நினைத்துப் பார்க்காத, புதிய கருத்தை, மூத்த அமைச்சரும், தெற்கின் மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவருமான டியு குணசேகரா வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஆட்சி நடத்திய எந்த அரசாங்கமும் இப்போதைய அரசாங்கமும் கூட, எமது நாட்டுக்கு மிக மிக அருகில் உள்ள தமிழகத்துடன் நெருங்கிய, சிறந்த உறவை வளர்ப்பதில் ஆர்வமோ அக்கறையோ காட்டவில்லை. அது குறித்துச் சிந்திக்கவில்லை, நினைத்தும் பார்க்கவில்லை.--

வடக்கில் வாழும் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கும் மொழி, கலாசார உறவுத் தொடர்புகள் மட்டுமின்றி, வாழ்வியலின் பல துறைகளிலும் மிக நெருக்கமான தொப்புள் கொடி உறவு உண்டு என்பதனை எமது அரசுகள் கணக்கில் எடுக்கவில்லை, பொருட்படுத்தவே இல்லை -- என்றும் அமைச்சர் டியு குணசேகரா கவலை தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கும் இடையேயான தூரம் முப்பத்தியிரண்டு கி.மீற்றர்கள் மட்டுமே என்ற பூகோள அமைப்பைத் தானும் இலங்கை அரசுகள் கண்டுகொள்ளவில்லை. அகில உலக மட்டத்தில், உலக மயமாக்கல் சார்ந்த செல்நெறியின் பிரகாரம், அதன் யதார்த்தம் குறித்து இனிமேலும் புறக்கணித்துவிட முடியாது.

இலங்கை அரசு வருங்காலத்திலேனும் தமிழக அரசுடனும் ராஜீக உறவுகளை ஏற்படுத்தி வளர்க்கவேண்டும் -- என்றும் மூத்த அமைச்சர் யோசனை வழங்கியுள்ளார்.

ஐம்பதுகளில், வல்வெட்டித்துறையில் இருந்து புறப்பட்டு 45 நிமிட நேரத்தில் தமிழகத்தின் கோடிக்கரையைத் தொடும் அளவுக்கு இருதரப்பு நெருக்கம் இருந்தது.

அமைச்சர் டியு குணசேகராவின் கருத்து நிலையை, இப்போது பதவியில் அமர்ந்துள்ள அரசோ, இந்த நாட்டின் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகளாகவே வைத்திருக்க வேண்டும் என்ற அரசியல் 'சித்தாந்தத்தை' அழுங்குப் பிடியாகக் கொண்டிருக்கும், தமிழர் விரோத, இன வெறிச் சகதிக்குள் மூழ்கியுள்ள அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் ஒருபோதும் காதில் போட்டுக்கொள்ள மாட்டா. தமது செவியில் நாசகாரமான அமிலத்தை டியு குணசேகரா ஊற்றியிருக்கிறார் என்று இன்றைய தினமே எக்காளம் போட ஆரம்பித்து விடுவார்கள்.

அத்துடன் நிற்காது, டியுவின் கருத்து தேசத் துரோகமானது. அவரை அமைச்சர் பதவியிலிருந்து இறக்கிச் சிறையில் அடைத்து விசாரணை நடத்த வேண்டும் - என்று கோஷமிட்டு ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி, (தம்புள்ளவில் முஸ்லிம் மக்களின் பள்ளிவாசலைத் தகர்க்க முயல்வது போன்று) இனக்கலவரத்துக்குத் தூபம் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய பிறப்புரிமைகளை வழங்குவதற்கு விருப்பமின்றி, தனது பெரும்பான்மைப் பலம் என்ற இரும்புக் கரத்தை அதீத பலத்துடன் உயர்த்திக் குத்துவதற்கு ஒப்ப எகிறிக்கொண்டிருக்கும் இனவாதிகள், அரசாங்கத்தைப் புறக்கணித்து, சட்டம் ஒழுங்கைத் தமது கையில் எடுத்தாலும் புதினமில்லை!!

பெரும்பான்மையினர் ஆட்சி என்றால் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கி ஆள்வதே என்பதனைத் தமது தாரக மந்திரமாகக் கொண்டு, இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், பல தடவைகள் இங்கு பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறியமை இப்போது ''வரலாறு'' ஆகிவிட்டது.

தமிழகம், இந்நாட்டின் வடதிசையில் அருகே இருப்பதால் அந்த மாநிலத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கக் கூடாது, அது எப்போதுமே ஆகாது என்ற கடும் கோட்பாடு எந்த விதத்திலும் மாற்றமுற வாய்ப்பில்லை.

ஆகையால் அமைச்சர் டியு குணசேகராவின் ஆலோசனை - தமிழகத்துடனான உறவுகளை இலங்கை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்ற பெறுமதியான யோசனை - சிங்கள அரசியல் வாதிகள் அனைவருக்கும் கோபமூட்டும் ஒன்றாகவே அமையும், மாறும்.

சிங்கள மக்களுக்கென உலகில் உள்ள ஒரேஒரு நாடு இது. இங்கு தமிழர்களைச் சம அந்தஸ்து வழங்கி உயர்த்தி விட்டால், இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களும், இனிமேல் அரங்கேற்றுவதற்கென வடக்கு, கிழக்கில் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை மறுப்பு உட்பட ஏனையவையும் பஸ்மமாகிவிடலாம் என்ற எண்ணமே சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலில் தோன்றும்.

ஈழத் தமிழ் மக்களின் மண்ணும், மொழியும், கலாசாரமும், வரலாறும் தேய்மானமுறக்கூடாது என்று ஓங்கி ஒலித்த தந்தை செல்வாவின் நினைவு நாளான இன்று, அமைச்சர் டியு குணசேகராவின் கருத்துக்கு கொழும்பு அரசு சிறிதேனும் செவி சாய்க்குமா என்பது பதில் இல்லாத வினாவாக, புதிராகவே தெற்கில் தொங்கி நிற்கும்.

புதிய கருத்துக்கள், நல்ல கருத்துக்களை அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், நியாய சிந்தை உள்ளவர்கள், நாட்டு நலன் கருதுவோர் காலத்துக்குக்காலம் முன் வைத்தாலும், அவை ஆட்சிக் கட்டிலில் உள்ளவர்களால் உள்வாங்கப்படுவது, செயற்படுத்தப்படுவது அரிதிலும் அரிது. மூத்த அமைச்சர் டியு குணசேகராவின் அர்த்தமுள்ள யோசனைக்கும் அதே நிலைமையே, தலைவிதியே வந்து சேரும் என்று நம்பலாம். அவ்வளவே!

# துமிந்த தங்கியுள்ள வைத்தியசாலை அறைச் செலவு மட்டும் ரூ.6 கோடி

கொழும்பு, ஏப்.26

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிகிச்சை பெற்று வரும் சிங்கப்பூர் 'மௌண்ட் எலிஸ பெத்' வைத்தியசாலை அறைக்கான கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ள தொகை 6 கோடி 20 லட்சம் ரூபாவைக் கடந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும், இதுவரை அவருக்குச் சிகிச்சைகளை வழங்கிய மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கு உள்ளாக்கியுள்ள வைத்திய நிபுணர்களின் கட்டணங்கள் மருந்து வகைகளுக்குச் செலவாகியுள்ள தொகை என்பன இதில் உள்ளடக்கப்படவில்லை.

மேற்படி தொகையுடன் சிகிச்சைகளுக்கான செலவாக துமிந்த சில்வாவினால் மிகப்பெரிய பணத் தொகை ஒன்றைச் செலுத்த வேண்டி ஏற்படும் எனத் தெரியவருகிறது.

துமிந்த சில்வா தரப்பிலிருந்து கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய, அவர் இன்று வரை 'மௌண்ட் எலிஸபெத்' வைத்தியசாலையின் விசேட நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறும் அறையொன்றிலேயே தங்கியுள்ளார். இந்த அறைக்கு நாளொன்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை 3ஆயிரத்து 460 சிங்கப்பூர் டொலர்களாகும் இது இலங்கை ரூபாவில் 3 லட்சத்து 64 ஆயிரத்து 758 ரூபாவாகும்.

துமிந்த சில்வா சிகிச்சைக்காக கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி 'மௌண்ட் எலிஸபெத்' வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதற்கமைய கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி வரை 170 நாள்கள் அவர் மேற்படி வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளார். அவர் இன்னும் சில காலம் அங்கு தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-22)

## சிறைச்சாலை நிர்வாகத்தில் தண்டனைக் கைதிகளுக்கு இடம்

கொழும்பு, ஏப்.26

நீண்ட காலத் தண்டனைகளை அனுபவித்து வரும் பெரும் எண்ணிக்கையான சிறைக் கைதிகள் சிறைச்சாலைகளின் சில நிர்வாக வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிறைச்சாலைகளில் கணினி இயக்குநர்கள், எழுது வினைஞர்கள், அலுவலக உதவியாளர்கள் போன்ற கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக சிறைச்சாலைகளில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக சிறைக் கைதிகளை இந்தப் பணிகளில் ஈடுபடுத்த நேர்ந்துள்ளதாகவும் சிறைச் சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை சிறைச்சாலையில் மாத்திரம் இவ்வாறு 25 இற்கு மேற்பட்டவர்கள் ஒழுக்காற்றுப் பிரிவு, சிறைக்கைதிகளைப் பதிவு செய்யும் பிரிவு, சிறைக்கைதிகளை இடம் மாற்றும் பிரிவு மற்றும் கைதிகளைத் தடுத்து வைக்கும் பிரிவு ஆகியவற்றில் கருமமாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒரு சில சிறைக் கைதிகள் உயரதிகாரிகளின் அலுவலகங்களில் கணினிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் விடுமுறையில் செல்லும்போது, அவர்களது கடமைகளையும் கவனித்துக் கொள்வது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-22)

## ஒய்வூதிய உரிமை கோரல் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்துக்கு உரிமை கோரும் திகதி இந்த ஆண்டின் இறுதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச அதிபர் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத காரணங்கள் மற்றும் இயற்கை அழிவுகளால் உயரிழந்த, உரித்துடைய அரச அலுவலர்களுக்காக இறுதியாக வழங்கப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஒய்வூதியத்தைப் பெறமுடியும்.

தற்காலிக பதவியிலுள்ளவர்கள் பயங்கரவாதக் காரணங்கள் மற்றும் இயற்கை அழிவுகளின் மூலம் உயிரிழக்கையில் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைப் பிள்ளைகள் ஒய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். 26 வயதுக்குக் குறைந்த அனாதைப் பிள்ளைகள் இருபாலாரும் விவாகத்தைக் கருத்தில் கொள்ளாது ஒய்வூதியம் பெறலாம். நிரந்தர ஒய்வூதிய உரித்துடைய ஒருவர் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பினும் ஒய்வூதிய உரிமையை இழக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அவரின் இறப்பின் பின்னர் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஒய்வூதிய உரித்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதுவரை காலமும் விதவைகள், அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்துக்கு விருப்புரிமை தெரிவிக்க விருப்பமுடையவர்கள் தாங்கள் கடைசியாக வேலை செய்த திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலமான வேண்டுகோள்களை 31.12.2012 இற்கு முன்னர் ஒய்வூதியப் பணிப்பாளர், ஒய்வூதிய திணைக்களம், மாளிகாவத்தை செயலகம், கொழும்பு -10 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். என்று கூறப்பட்டுள்ளது.

(ம-5)

## தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்தத் திட்டம்

சுன்னாகம், ஏப்.26

பாடசாலை மட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் பாடசாலை மட்டத்தில் கணினி வன்பொருள் வலையமைப்புத் தீர்வு அணிகளை உருவாக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

8, 9, 10 ஆம் தரங்களில் இருந்து இரு மாணவர்கள் வீதம் 6 பேர் கொண்டதாக இந்த வன்பொருள் அணி செயற்படவுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்படுவர்களுக்கு ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வலய, மாகாண தொழில்நுட்ப இணைப்பாளர்களால் விசேட பயிற்சிகளும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] தெரிவு செய்யப்பட்ட இரு ஆசிரியர்களை [illegible] கணினி வன்பொருள் வலையமைப்பு தீர்வு அணி செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-38)

## தந்தை செல்வா நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஏப்.23

தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவுநாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுக ரும் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சொல்லின் செல்வர் செல்லையா இராசதுரை (வயது 83) இதில் நினைவுரை நிகழ்த்தவுள்ளார்.

செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச் சார்ய சுவாமிகள், அருட் கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகள், அருட் தந்தை எம்.வி.இ.ரவிச்சந்திரன் அடி கள், மௌலவி இபுறகிம் முகமது பாஹிர் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

வரவேற்புரையை அறங்காவல் குழுவைச் சேர்ந்த பெ. கனகசபாபதியும் நன்றி உரையை அறங்காவல் குழு வின் செயலாளர் ச.சத்திய சீலனும் நிகழ்த்துவர்.

முன்னதாக அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

(ம-7)

## ஏற்றுமதிக்கு பயிரிடப்படவுள்ள விசேட நெல் ரகங்கள்

கொழும்பு, ஏப்.26

தெரிவு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் 10 ஆயிரம் ஹெக்ரயர் வயலில் ஏற்றுமதிக்கு என்று விசேட நெல் ரகங்கள் பயிர் செய்யப்படவுள்ளன.

விவசாய அமைச்சு இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலனறுவை, மன்னர், அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எதிர் வரும் சிறுபோகத்தில் பயிர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதே வேளை விசேட -நெல் வகைகளை விவசாயிகளுக்குச் சலுகை விலைகளில் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிப்பான செய்திக்காகச் சென்றோம் கசப்பு அனுபவம் மட்டுமே கிடைத்தது

## டக்ளஸின் நடவடிக்கை குறித்து முல்லை. தொண்டராசிரியர்கள் விசனம்

முல்லைத்தீவு, ஏப்.26

இனிப்பான செய்தியை அமைச்சர் தருவாரென்ற நம்பிக்கையுடன் சென்ற முல்லைத்தீவு தொண்டராசிரியர்களுக்கு கசப்பான அனுபவமே கிடைத்தது.

கொட்டும் மழைக்கு மத்தியில் கைக் குழந்தைகள் சகிதம் வந்திருந்த தொண்டராசிரியர்களிடம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ''எனது கரத்தைப் பலப்படுத்துங்கள்'' என்று கூறி வழமைபோல அரசியல் பிரசாரம் செய்ததால் தொண்டர் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் கொதித்துப் போயுள்ளனர்.

அமைச்சருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் முள்ளியவளையில் கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர்களை கலந்து கொண்டனர்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடத்த சந்திப்பில் இவர்களுக்கு விரைவில் நியமனம் பெற்றுத் தருவேன் என்று டக்ளஸ் தெரிவித்திருந்தார். அதனால் இம்முறை அது பற்றி அறிவிக்கத்தான் வந்திருக்கிறார் என்ற நம்பிக்கையில் தொண்டர் ஆசிரியர்கள் வந்திருந்தனர்.

சுமார் 130 தொண்டராசிரியர்கள் கலந்துகொண்ட இந்த சந்திப்பின்போது அமைச்சர் அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்குப் பதிலாகத் தனதுகரத்தைப் பலப்படுத்தும்படியும் அவ்வாறு பலப்படுத்தி உழைப்பவர்களுக்கே நியமனம் வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

''அமைச்சர் தனது கரத்தைப் பலப்படுத்துமாறு ஒவ்வொரு சந்திப்பின்போதும் கேட்கிறாரே தவிர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் எம்மை ஏமாற்றி வருகிறார்'' என சந்திப்பில் கலந்துகொண்ட தொண்டராசிரியர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

> ''அமைச்சர் தனது கரத்தைப் பலப்படுத்துமாறு ஒவ்வொரு சந்திப்பின்போதும் கேட்கிறாரே தவிர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் எம்மை ஏமாற்றி வருகிறார்'' என சந்திப்பில் கலந்துகொண்ட தொண்டராசிரியர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது அமைச்சர், ''இனி நான் உங்களைச் சந்திக்கும் போது மனத்துக்கு மகிழ்ச்சியான செய்தியுடன் சந்திப்பேன்'' எனக் கூறியிருந்தார் என்று அவர் நினைவு கூர்ந்தார்.

''இந்த நிலையில் நியமனம் வழங்கப்படுகிறது என்ற இனிப்பான செய்தியையே அமைச்சர் அறிவிக்க இருக்கிறார் என நம்பியே அமைச்சரின் அழைப்பை ஏற்று இந்த முறை சந்திப்பில் கலந்துகொண்டோம். ஆனால் ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. ஏன் இவர் எமது உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார் இல்லை'' என்றார்கள் அவர்கள்.

தொண்டராசிரியர்கள் பலர் தமது கைக்குழந்தைகளுடன், நேற்றுப் பெய்த கடும் மழைக்கு மத்தியிலும் சந்திப்பில் கலந்துகொண்ட போதும் சுமார் இரண்டரை மணி நேரம் அமைச்சர் அவர்களைக் காக்க வைத்திருந்தார். (க-3)

### இப்பிடியும் நடந்தது

முள்ளியவளை,ஏப்.26

முள்ளியவளை துயிலும் இல்லப் பகுதியில் காணப்பட்ட மரங்கள் சிலவற்றுக்கு வெள்ளைத் துணி கட்டிய அதிசய சம்பவம் இந்தப் பகுதி மக்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் துயிலும் இல்லப் பகுதியில் அசோகா மற்றும் தேமா பூ மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் பஸ் ஒன்றில் வந்திறங்கிய 40 தொடக்கம் 50 வரையான பெரும்பான்மை இன மக்கள் இந்தக் காணிக்குள் புகுந்தனர். பின்னர் அங்கு காணப்பட்ட அசோகா மற்றும் தேமா மரங்களைச் சுற்றி வெள்ளைத் துணியைக் கட்டி வைத்தனர். இதனைப் பலர் படம் பிடித்தும் கொண்டனர்.

இந்தச் செயல் இந்தப் பகுதி மக்களிடையே கேள்விகளை எழும்பியுள்ளது. இங்கு என்ன நடக்கிறது என்பது புரியாமல் இங்குள்ள மக்கள் கலக்கத்துடன் காணப்படுகின்றனர். (க-433)

### வவுனியா வடக்கில் பெருமளவு மண் விற்பனை

நெடுங்கேணி,ஏப்.26

வவுனியா வடக்கில் பெருமளவு மண் அகழப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் இந்தப் பகுதி மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பிரதேசத்துக்குட்பட்ட புதூர்ப் பகுதியில் கோயிலுக்கருகிலுள்ள ஒரு ஏக்கர் சுற்றளவுள்ள பிரதேசத்தில் மண் அகழப்பட்டு குவிக்கப்பட்டுள்ளது. பின்னர் வெளிமாவட்டங்களுக்கு விற்பனையும் செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு முறையிட்ட போதிலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. கனிமவளத் திணைக்களத்தின் அனுமதியுடன் இந்த மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-435)



மன்னார் நானாட்டான் ராசமடு காட்டுப் பகுதியில் பிடிபட்ட 12 அடி நீளமான மலைப் பாம்புடன் இளைஞர்கள் சிலர் காணப்படுகின்றனர். (12)

## வவுனியா வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் போதியளவில்லை

வவுனியா,ஏப்.26

வவுனியா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் வவுனியா பொது வைத்தியசாலை, செட்டிகுளம் வைத்தியசாலை, நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை, பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலை ஆகியவை காணப்படுகின்றன.

இந்த வைத்தியசாலைகளுக்கு 16 வைத்தியர்கள் தேவையாகவுள்ள போதும் தற்போது 9 வைத்தியர்களே சேவையாற்றுகின்றனர்.

> வைத்தியசாலைகளுக்கு 16 வைத்தியர்கள் தேவையாகவுள்ள போதும் தற்போது 9 வைத்தியர்களே சேவையாற்றுகின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் 7 வைத்தியர்கள் தேவையாகவுள்ள போதும் தற்போது 5 வைத்தியர்களும், செட்டிகுளம் வைத்தியசாலையில் 5 வைத்தியர்களுக்குப் பதிலாக 4 வைத்தியர்களுமே கடமையாற்றி வருகின்றனர்.

ஏனைய பிரதேச வைத்தியசாலைகளான பூவரசங்குளம், நெடுங்கேணி வைத்தியசாலைகளுக்குத் தலா 2 வைத்தியர்கள் தேவையாகவுள்ளபோதும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்தப் பிரதேச வைத்தியசாலைகளுக்குக் குறைந்தது ஒரு வைத்தியரையாவது நியமிக்க வேண்டும். ஆனால் இது தொடர்பாகப் பல தடவைகள் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தியபோதும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (க-400)

## வேலிகள் அமைக்கப்படுவதால் குளக்கட்டுகளுக்குப் பாதிப்பு

முல்லைத்தீவு,ஏப்.26

முல்லைத்தீவில் குள அணைக்கட்டுக்களுக்கு அருகில் வேலிகள் அமைக்கப்படுவதால் பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

இங்கு மீளக்குடியமர்ந்த பலர் குளங்களின் அணைக்கட்டுக்களுக்கு அருகில் வேலிகளை அமைத்துக் காணிகளைப் பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மண் அரிப்புக்கள் ஏற்பட்டுக் குளங்களின் அணைகள் பாதிப்படையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் வேலிகளுக்கு நடப்படும் மரங்கள் பெரிதாக வளரும் போதும் அணைக்கட்டுக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் சிலர் குளத்தின் நீரேந்து பகுதியையும் ஆக்கிரமிப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

> எதிர்காலத்தில் குளங்களுக்கும், அணைக் கட்டுக்களுக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் குளங்களுக்கும், அணைக் கட்டுக்களுக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

கமக்கார அமைப்பினர், கமநலச்சேவை நிலையத்தினர் ஆகியோர் விரைந்து நடவடிக்கை எடுத்து இந்தச் சட்ட விரோதச் செயல்களை நிறுத்த வேண்டுமென இந்தப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-500)

## வீடுகள் வழங்குவதில் கிளாலியில் பாகுபாடு

கிளிநொச்சி,ஏப்.26

கிளிநொச்சி, கிளாலிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வாழ்ந்து வருகின்றன.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம் பெயர்ந்த இவர்கள் 13 ஆண்டுகளுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

தற்போது மேலும் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

> 13 ஆண்டுகளுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இதில் 95 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொண்டுவிட்டு வேறு இடங்களுக்குச் சென்ற குடும்பங்களுக்கும், பொருத்தமற்ற குடும்பங்களுக்கும் மேற்படி வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தாங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதாகவும் வீடுகள் கிடைக்காதவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## ஜெயபுரத்தில் பொலித்தீன் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

அக்கராயன், ஏப்.26

கிளிநொச்சி ஜெயபுரத்தில் பொலித்தீன் ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

ஜெயபுரம் இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு ம.லூக்யோன் அடிகளார் தலைமையில் இந்தச் செயற்பாடு இடம்பெறுகிறது. சூழலில் பாதிப்புக்களை ஏற்படுத்திய பொருள்களில் பொலித்தீன் முக்கிய ஒன்றாகக் காணப்படுகிறது. இதனால் பொலித்தீன் பாவனை ஜெயபுரத்தில் முற்றாக ஒழிக்கப்பட்டு வருகிறது.

பொது மக்கள், மாணவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஜெயபுரம் கிராமத்தின் சகல பகுதிகளிலும் பொலித்தீன் பொருள்கள் தீயிட்டு எரிக்கப்படுகின்றன.

பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் பொலித்தீன் பாவனை மற்றும் அதனால் ஏற்படும் தீய விளைவுகள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே முன்னுதாரணமாக இங்கு இந்தச் செயற்பாடு இடம்பெறுகிறது.

மரங்கள் அழிக்கப்பட்டு சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வரும் நிலையில் சூழலைப் பாதுகாக்கும் வகையில் ஜெயபுரத்தில் இடம்பெற்று வரும் பொலித்தீன் அழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஏனைய கிராமங்களும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என சூழல் ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரின் துப்பாக்கியை பறிக்க முயன்ற இருவர்

யாழ்ப்பாணம், ஏப். 26

பொலிஸாரின் கைத் துப்பாக்கியைப் பறிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும் யாழ். நீதிமன்றினால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். நகரில் வியாபார நிலையம் ஒன்றில் மது போதையில் நின்று பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தபோதும் அதனைத் தடுக்க அங்கு சென்ற யாழ். பொலிஸார் ஒருவரின் கைத் துப்பாக்கியைப் பறிக்க இவர்கள் முயற்சித்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து திருநகரைச் சேர்ந்த இருவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மது போதையில் நின்றிருந்ததனால் அவ்வாறு செயற்பட்டதாக விசாரணையின் போது இருவரும் தெரிவித்திருந்தனர். (த-4)

# கல்லுண்டாய் உப்பளத்தால் உவராகிறது நிலத்தடி நீர்

### கவலையடைகின்றனர் அந்தப் பகுதி மக்கள்

**யாழ்.மாநகர சபை பகுதிகளிலுள்ள மலக்கழிவுகளை இங்கு கொண்டு வந்து சுத்திகரிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.**

வலி.தென்மேற்கு, ஏப்.26

கல்லுண்டாய்ப் பகுதியில் அமைக்கப்பட்ட உப்பளத்தால் அருகாமையிலுள்ள வயல் நிலங்கள், குடியிருப்புக் காணிகள் நாளுக்கு நாள் உவராக மாறி வருகின்றன. அத்துடன் குடிதண்ணீர் கிணறுகளும் உவராக மாறி வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் பெரும் பணச் செலவில் குழாய் மூலம் குடிதண்ணீரைப் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

எனவே கடலுக்குச் செல்லும் மழை நீரை கல்லுண்டாய்ப் பிரதேசத்தில் தடுத்து நிறுத்தி நன்னீர்த் தேக்கம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு நவாலி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவாலி, ஆனைக்கோட்டை பொது அமைப்புக்களின் ஒன்றிய ஒருங்கிணைப்புக் குழுவின் முன் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல வருடங்களுக்கு முன் கல்லுண்டாய் பகுதியில் அமைக்கப்பட்ட உப்பளத்தால் கடல் நீரின் உவர்த் தன்மை கிராமங்களை நோக்கிப் பரவ ஆரம்பித்துள்ளது. இதன் பாதிப்பை முதலில் விவசாயச் செய்கையிலேயே உணரக் கூடியதாக உள்ளது. இதனைத் தடுப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையால் அடுத்த கட்டமாக அத்தியாவசியத் தேவையான நிலத்தடி நீரிலும் உவர் பரவத் தொடங்கியுள்ளது.

இதனால் தூர இடங்களிலிருந்து குழாய் மூலம் குடிதண்ணீரைக் கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

உவரைத் தடுப்பதற்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான திட்டங்களும் இது வரை தயாரிக்கப்படவில்லை. இந்தப் பாதிப்பிலிருந்து நாம் மீள வேண்டுமானால் உவரின் அடர்த்தியைக் காலப்போக்கில் குறைக்கக் கூடிய வகையில் கடலில் கலக்கும் மழை நீரை கல்லுண்டாய் பகுதியில் தேக்கி வைக்கக் கூடிய நன்னீர்த் தேக்கமொன்றை அமைக்க வேண்டும்.

இதேவேளை, யாழ். மாநகர சபை பகுதிகளிலுள்ள மலக்கழிவுகளை இங்கு கொண்டு வந்து சுத்திகரிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கு அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் நலன் கருத்தி இதனை ஆழமாக ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

திண்மக் கழிவுகள் மற்றும் மலக் கழிவுகள் கல்லுண்டாய்ப் பகுதியில் கொட்டப்படுவதுடன் எரியூட்டப்பட்டும் வருகின்றன. இதனால் விவசாயிகள் வயல்களில் வேலை செய்ய முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

இதனால் இந்தப் பகுதியில் உள்ள ஆலயத்தின் புனிதத் தன்மைக்கும் பெரும் பங்கம் ஏற்படுகின்றது. அருகாமையிலுள்ள வீடுகளிலும் இலையான்கள் அதிகரித்து உள்ளன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

கல்லுண்டாய் பிரதேசத்தில் இரவோடு இரவாக ஊரிமண் அகழ்ந்தெடுக்கப்படுவதால் காலப்போக்கில் எமது விவசாய நிலங்கள் கடலில் மூழ்கும் அபாயமும் உள்ளது.- என்றுள்ளது. (ம-115)

## சந்தேகத்தில் இருவர் கைது

வடமராட்சி, ஏப்.26

மினி பஸ்ஸில் 90 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் காணாமல் போனமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் குறித்த பஸ்ஸில் பயணம் செய்த புத்தளத்தைச் சேர்ந்த தாயையும் மகளையும் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறையில் உள்ள வங்கி ஒன்றில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை மீட்பதற்கு 90 ஆயிரம் ரூபா பணத்துடன்வியாபாரிமூலைச் சந்தியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்வதற்கு மினி பஸ்ஸில் பெண் ருவர் ஏறிச் சென்றுள்ளார். இதன்போது அவரது பணம் காணாமல் போய் பின்னர் பஸ்ஸுக்குள் சிதறிய நிலையில் ஆயிரத்து 500 ரூபா குறைந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அந்த மினிபஸ்ஸில் பயணம் செய்த புத்தளத்தைச் சேர்ந்த தாயையும் மகளையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இரு பெண்களும் பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரனின் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (ம-8)

## ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 5 பேருக்கு நேற்று யாழ். நீதிமன்றம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

காப்புறுதிப் பத்திரம், தலைக்கவசம் இன்றியும் ஏனைய வாகனங்களின் போக்குவரத்துக்கு இடையூறாகவும் வாகனம் செலுத்திய ஐவரையும் யாழ். பொலிஸார் கைது செய்து நீதிவான் மா. கணேசராஜாவிடம் முன்னிலைப்படுத்தினர்.

ஐவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான குடும்பஸ்தர் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்.26

விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் அவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான பிறிதொரு குற்றச்சாட்டில் இருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கொன்று இருப்பதால் அந்த வழக்குத் தீர்ப்புக்காக அவர் தடுப்பில் உள்ளார்.

நாவிதன் வெளி, கல்முனை, அம்பாறையைச் சேர்ந்த கோபாலசிங்கம் இளங்கோ (வயது-38) என்ற குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டிருந்தார்.

1990-1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் போர் ஆயுதப் பயிற்சி, போர் பொறிமுறைப் பயிற்சி என்பவற்றைப் பெற்றுக் கொண்டார் என்று குற்றஞ்சாட்டி ஓமந்தையில் வைத்து 2009 ஆம் ஆண்டு மே 16ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணையில் இருந்து வந்தது.

சந்தேக நபருக்கு எதிராக அவரின் வாக்குமூலத்தை தவிர வேறு எந்த ஆதாரமும் இருக்கவில்லை. விசாரணையின்போது அவர் வழங்கியதாகக் கூறப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது. அதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். (த-4)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 'ஸ்கானிங்' பரிசோதனை

தென்மராட்சி, ஏப்.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 'ஸ்கான்' பரிசோதனை அதி சிறப்பு வைத்திய நிபுணரின் சேவை கிடைத்துள்ளது.

மாதத்தில் இரு நாள்கள் 'ஸ்கான்' சேவை இடம்பெறவுள்ளது. இதனால் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு 'ஸ்கான்' பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படும் பல்வேறு நோயாளர்கள் நன்மையடையவுள்ளனர். 'ஸ்கான்' பரிசோதனைக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து 50 இற்கும் மேற்பட்டோர் மாதத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**'ஸ்கான்' பரிசோதனைக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து 50 இற்கும் மேற்பட்டோர் மாதத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலிருந்து பெருமளவு நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதையடுத்து 'ஸ்கான்' சிகிச்சைப் பிரிவு அதிசிறப்பு வைத்திய நிபுணர் வைத்தியக் கலாநிதி நிர்மலன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்கத் தாமாக முன்வந்தார்.

இதனையடுத்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதி ராஜாவுடன் தொடர்புகொண்டதுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு 'ஸ்கானர்' இயந்திரத்தையும் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் 'ஸ்கானிங்' கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்றைய கிளினிக்கில் வெளிநோயாளர் பிரிவு வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களுக்கும் விடுதிகளில் தங்கியிருந்த கர்ப்பிணிகள் உட்பட நோயாளர்களும் 'ஸ்கான்' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த அதிசிறப்பு வைத்திய நிபுணர் போன்று யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் கண், காது, இதயம் போன்ற சிகிச்சைப் பிரிவுகளின் வைத்திய நிபுணர்களும் தாமாக முன்வந்து மனிதாபிமான அடிப்படையில் சாவக்சேரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதிச் சேவையையும் வழங்க முன்வர வேண்டுமென நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-9)

## மண்டைதீவு உவர் தடுப்பணை நிர்மாணப் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஏப்.26

உவர் நீர் தடுப்பணைத் திட்டத்தின் கீழ் மண்டைதீவு உவர் நீர் தடுப்பணை நிர்மாண வேலைகள் நிறைவடைந்துள்ளன என்று மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஐந்து இடங்களில் உவர் நீர் தடுப்பணை அமைக்கும் வேலைத் திட்டம் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்ட 80 மில்லியன் ரூபா நிதியில் இருந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு, காரைநகர், நெடுந்தீவு, புங்குடுதீவு, அராலி, பொன்னாலை ஆகிய பகுதிகளில் உள்ள தடுப்பணைகளை நிர்மாணிக்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.

இவற்றில் மண்டைதீவு உவர்நீர்தடுப்பணைவேலைத் திட்டம் பூர்த்தியடைந்துள்ளது.

ஏனைய நான்கு திட்டங்களும் நிறைவுபெறும் நிலையில் உள்ளன என்று மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-3)

## தென்மராட்சியில் தினமும் மணல் திருட்டு அதிகரிப்பு

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஏப்.26

தென்மராட்சி பிரதேசத்தின் எழுதுமட்டுவாழ், மிருசுவில், வரணி போன்ற இடங்களில் தினமும் அதிக எண்ணிக்கையான வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோதமாக வாகனங்களில் ஏற்றப்படும் மணல் உள் வீதியூடாக வரணி சந்தைப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களுக்குக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.


எழுதுமட்டுவாழ், மிருசுவில் பகுதிகளில் தென்னந் தோட்டங்களிலிருந்தும், வயல் நிலங்களிலிருந்தும் பெருமளவு மணல் இரவ பகலாக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றது.

இதனைத் தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி தப்புமா?

## கிலானி மீதான அவமதிப்பு வழக்கின் தீர்ப்பு விரைவில்



இஸ்லாமாபாத், ஏப்.26

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் எதிர்வரும் நாள்களில் தீர்ப்பு வழங்கவுள்ளது. இதில் அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டால், அவர் பதவியை இழப்பதுடன் சிறைக்கும் செல்வார்.

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மீது முன்பு ஒரு ஊழல் வழக்கு இருந்தது. அவர் பல கோடி ஊழல் செய்து அதை சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது பற்றி சுவிற்சர்லாந்திலும் விசாரணை நடந்தது.

இதன்பின், முஷாரப் அதிபரானதும் அவசரச் சட்டத்தின் மூலம் ஊழல் வழக்குகளில் சிக்கியவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இதில் சர்தாரி மீதான வழக்கும் முடிக்கப்பட்டது.

இந்த நிலையில், முஷாரப் கொண்டு வந்த சட்டத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது. மேலும், சர்தாரி மீதான ஊழல் வழக்கு விசாரணையை தொடர சுவிற்சர்லாந்துக்குக் கடிதம் அனுப்புமாறு பிரதமர் கிலானிக்கு உத்தரவிட்டது. ஆனால், கிலானி இதை செயல்படுத்த வில்லை. இதனால், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்து உயர் நீதிமன்றம் விசாரித்தது.

இதையடுத்து, நீதிமன்றத்தில் கிலானி முன்னிலையாகி, பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டப்படி, அதிபருக்கு வழக்குகளில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் கூறினார்.

இந்த வழக்கின் இறுதி விசாரணை, நீதிபதி நாசிர் உல் முல்க் தலைமையிலான 7 நீதிபதிகள் முன்பாக நேற்றுமுன்தினம் நடந்தது. கிலானியின் சட்டத்தரணி ஆசான், அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை என வாதாடினார். இதைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பை வரும் 26ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

இந்த வழக்கில் கிலானி குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டால், அவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும். இதனால், அவருக்கு பிரதமர் பதவியில் நீடிக்கத் தகுதி இழந்து, பதவியும் பறிபோகும்.

# அமெரிக்காவில் தொடரும் மர்மக் கொலைகள்

நியூயோர்க், ஏப்.26


அமெரிக்காவின் டல்லாஸ் மாகாணத்தில் இந்தியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் இறந்துள்ளார்.

இது குறித்த விசாரணையை நடத்திய பொலிஸ் அதிகாரி தெரிவித்ததாவது:- அமெரிக்காவின் டல்லாஸ் பகுதியில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தைச் சேர்ந்த நிகில் கர்ணம் என்ற 28 வயது இளைஞர் தனியாக வசித்து வந்தார். இந்த நிலையில் அவர் தங்கியிருந்த வீட்டில் இருந்து கடந்த 21ஆம் திகதி முதல் துர்நாற்றம் வருவதாக அருகில் வசிப்போர் பொலிஸில் புகார் செய்தனர். அதனால் அவரது வீடு சோதனையிடப்பட்டது.

இதில் கர்ணம் 10 தினங்களுக்கு முன்னரே இறந்துவிட்டார் என்று விசாரணையில் தெரியவந்தது. இது குறித்து வடக்கு அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு தகவல் அளிக்கப்பட்டது. ''கர்ணம் இறப்புக் குறித்து அவரது பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாள்களில் உடலைச் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும். இது கொலையா மற்றும் தற்கொலையா என்று எந்த முடிவும் எடுக்கவில்லை'' என்று இந்தியத் தூதரகப் பேச்சாளர் கூறினார்.

கடந்த ஒரு வாரத்தில் அமெரிக்காவில் இறந்த இரண்டாவது இந்தியர் இவர். கடந்த 19ஆம்திகதி போஸ்டன் பல்கலைக்கழகத்தில் படித்து வந்த சேஷாத்திரி ராவ் என்ற மாணவனும் மர்மமான முறையில் இறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனச் சுரங்க விபத்தில் 9 பேர் பரிதாபச் சாவு



பீஜிங், ஏப்.26

சீனாவின் வடக்கில் மொங்கோலியாப் பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் சுரங்கத் தொழிலாளர்கள் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 16 பேர் படுகாயம் அடைந்தனர். மேலும் பலர் சுரங்க இடிபாடுகளுக்குள் சிக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சுரங்க விபத்தில் சிக்கி 1973 தொழிலாளர்கள் சீனாவில் உயிரிழந்திருக்கின்றனர்.

# மரதன் ஓட்டத்தில் பெண் உயிரிழப்பு



லண்டனில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் திடீரென்று மயங்கி விழுந்த கிளாரா ஸ்கொயர்ஸ் என்ற 30 வயது பெண் உயிரிழந்தார்.

தற்போது இந்தப் பெண்ணிற்காக பலரும் நிதி திரட்டி வருகின்றனர். பலரும் நன்கொடை அளித்துள்ளனர். இந்த நிதித் தொகை 20,000 பவுண்ஸூக்கு மேல் திரளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிளாராவின் தாயார் சில்லா கடந்த 24 ஆண்டுகளாக சமூக சேவைகள் செய்து வந்தார்.

எனவே தற்போது திரட்டப்படும் நிதித் தொகை, அவரது குடும்பத்தினரின் சம்மதத்தோடு பொதுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்று இந்த ஒலிம்பிக் போட்டியை நடத்திய கேத்தரின் கூறியுள்ளார்.

கடந்த 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மரதன் ஓட்டப் போட்டியில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 22.06.1946

மறைவு 27.03.2012



அமரர்

## வேலுப்பிள்ளை நாகேஸ்வரி (பேபி)

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
இனிய வாழ்வு தந்த தெய்வமே!
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த உங்கள்
சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்
என்றும் இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அம்மா...

கடந்த 27.03.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் வேலுப்பிள்ளை நாகேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.04.2012 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அவரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.04.2012)வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 316/5, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணுப் பரிசோதனைக்குத் தயார்

## வடகொரியா தெரிவிப்பு; சீனாவின் ஆதரவும் கிடைக்கிறது

பீஜிங்,ஏப்.26


அணுப்பரிசோதனையை விரைவில் நடத்த தாம் தயாராகியுள்ளதாக வட கொரியா தெரிவித்துள்ளது. இதற்கு சீனா மறைமுக ஆதரவு வழங்கியுள்ளது.

மூன்றாவது அணுப் பரிசோதனைக்கான தயார்படுத்தல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக பயோயெங் மற்றும் பீஜிங் ஆகியன குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

தோல்வியில் நிறைவடைந்த தமது ஏவுகணைப் பரிசோதனைக்கு சர்வதேச நாடுகள் வெளியிட்ட கண்டனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் வட கொரியா இந்த அணுப் பரிசோதனையை நடத்தவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தடைகளையும் எதிர்த்து மூன்றாவது முறையாக வட கொரியா அணுப்பரிசோதனையை நடத்தவுள்ளதாக ரொய்ட்டர் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக வடகொரியா இவ்வாறான அணுப் பரிசோதனையொன்றை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உயர் யுரேனிய செறிவூட்டலுடன் கூடிய அணு இயந்திரத்தை முதல் முறையாக இந்தப் பரிசோதனையில் பயன்படுத்தலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

உயர் யுரேனிய செறிவூட்டலுடன் கூடிய அணு இயந்திரத்தை முதல் முறையாக இந்தப் பரிசோதனையில் பயன்படுத்தலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான அணுப் பரிசோதனைகள் வடகொரியாவுக்கு எதிரான அழுத்தங்கள் மற்றும் தடைகளை அதிகரிப்பதுடன், தனிமைப் படுத்தப்பட்ட நாடாக அதனை மாற்றிவிடும் என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் வட கொரியாவுடன் தொடர்ந்தும் நெருங்கிய உறவுகளைப் பேணவுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. சர்ச்சைக்குரிய ஏவுகணைத் திட்டம் குறித்து விமர்சனங்கள் வெளியிடப் பட்டுள்ள நிலையில், சீன அதிபர் ஹு ஜிந்தா ஓ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பீஜிங்கில் வட கொரியப் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற சந்திப்பை அடுத்து சீன அதிபர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அண்மையில் வட கொரியா ஆரம்பத்திருந்த ஏவுகணைத் திட்டத்துக்கு சீனா ஒத்துழைப்பு வழங்கியதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. எல்லைப் பகுதியில் தென் கொரியாவும், வட கொரியாவும் சர்ச்சைகளில் ஈடு பட்டுவருகின்றன.

அமெரிக்கா, தென் கொரியாவுக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவிக்கும் நிலையில், சீனா வட கொரியாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றது.

# யூதக் குடியேற்றங்களை அங்கீகரித்தது இஸ்ரேல்



மத்திய கிழக்கின் மேற்குக் கரையில் மூன்று யூதக் குடியேற்றப் பகுதிகளுக்கு இஸ்ரேலிய அரசு சட்ட அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுமார் எண்ணூறு பேர் வரை தங்கியுள்ள இந்தக் குடியேற்றப் பகுதிகள் 1990 களிலேயே அமையப் பெற்றிருந்தன என்றாலும், இவ்வளவு காலமும் அவை உத்தியோகபூர்வ ஒப்புதல் இல்லாமல் இருந்து வந்தன. இஸ்ரேலிய அரசின் முடிவை பாலஸ்தீனர்கள் கண்டித்துளனர்.

கடந்த இருபது ஆண்டுகளில் முதல் தடவையாகப் புதிய யூதக் குடியிருப்புகளை இஸ்ரேல் உருவாக்கியுள்ளது என்ற குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது.

பாலஸ்தீன நிலப்பரப்பில் அமைந்திருக்கக்கூடிய அனைத்து யூதக் குடியிருப்புகளும் -அவற்றுக்கு இஸ்ரேலிய அரசின் ஒப்புதல் இருந்தாலும்கூட - சர்வதேச சமூகம் அவற்றை சட்டவிரோத குடியேற்றங்களாகவே கருதுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் தான் இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் 2010 ஆம் ஆண்டு முதல் முடங்கி யுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"தங்களுக்கு சமாதானம் வேண்டுமா அல்லது குடியேற்ற பகுதிகள் வேண்டுமா என்பதை இஸ்ரேல் தீர்மானித்துக் கொள்ளட்டும், ஆனால் இரண்டும் அவர்களுக்கு ஒரு சேரக் கிடைக்காது" எனப் பாலஸ்தீனத் தரப்பின் தலைமைப் பேச்சாளர் சயேப் எரகாத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் குடியேற விரும்பும் 2 கோடி சீன இளைஞர்கள்

பீஜிங்,ஏப்.26

அமெரிக்காவில் குடியேறுவது குறித்து கோல் அப் என்ற அமைப்பு 151 நாடுகளை சேர்ந்தவர்களிடம் ஆய்வு நடத்தியது. அதில், உலகின் மொத்த இளைஞர்களில் 15 சதவீதம் அதாவது 64 கோடி பேர் வெளிநாடுகளில் குடியேற விருப்பம் தெரிவித்தனர். குறிப்பாக, அமெரிக்காவில் குடியேற அதிகமானோர் விரும்புகின்றனர்.

அமெரிக்காவில் குடியேற அதிகபட்சமாக சீனர்கள் 2.2 கோடி பேர், 1.5 கோடி நைஜீரியர்கள், 1 கோடி இந்தியர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் எதிரொலியாக, சீனாவில் இருந்து திறமையான இளைஞர்கள் வெளியேற முயற்சிப்பதை சீன அரசு தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நிபுணர்கள் தெரிவித்தனர்.



சோமாலியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டு கலவரங்களின்போது பொதுமக்கள் மீது அந்த நாட்டுக் கடற்கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடுகளை நடத்துகின்றனர்.

# 300 சாரதிகளுக்குத் தடை

பீஜிங்,ஏப்.26

சீனாவில், போக்குவரத்து விதிமுறையை பல முறை மீறிய, 300 சாரதிகளுக்கு வாழ்நாள் முழுக்க வாகனங்களை இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீன தலைநகர் பீஜிங் கில், 50 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் இயங்குகின்றன. போக்குவரத்து விதிமுறையை அடிக்கடி மீறினால், அவர்கள் வாகனங்கள் செலுத்த தடை விதிக்க வழி செய்யும் சட்டம், சீனாவில் 2004இல் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத் தின்படி, இதுவரை 300 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்று, சீன அரசு தெரிவித்துள்ளது.

# முஷாரப்பை நாடு கடத்தாது பிரிட்டன்

லண்டன்,ஏப்.26

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப்பை பாகிஸ்தான் அதிகாரிகளிடம்தான் ஒப்படைக்கப் போவதில்லை என பிரிட்டன் அரசு உறுதியாகத் தெரிவித்துள்ளது.

பிரிட்டன்அரசைப்பொறுத்தவரை மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படும் நாடுகளுக்குத் தனிநபர்களைத்தான் நாடு கடத்துவதில்லை என்பதுடன் இத்தகைய கோரிக்கைகள் குறித்துத் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்குமுன் தனது நீதிமுறைகளுக்கூடாக அது குறித்துப் பரிசீலிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளது.



முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கொலை தொடர்பாக விசாரிப்பதற்குப் பர்வேஸ் முஷாரப் தேவைப்படுவதாக இண்டர்போலுக்கு ஊடாக செவ்வறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே பிரிட்டனின் சமஷ்டி புலனாய்வு முகவரகம் (எவ்.ஐ.ஏ.) இந்த மறுப்பை வெளியிட்டுள்ளது.

# மாலியில் பெண் கடத்தல்

மாலி,ஏப்.26

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் மாலியில் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணை அன்சார் தீன் என்ற இஸ்லாமிய அமைப்பு தற்போது கடத்தியிருப்பதாக ஏ.எவ்.பி. நிறுவனம்செய்தி வெளியிட்டுள்ளது.

அன்சார் தீன் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் பிரெஞ்சு வானொலியிடம் இந்தக் கடத்தலை ஒப்புக் கொண்டார்.

கடந்த திங்கட்கிழமை சுவிஸ் நியூஸ் ஏஜென்சி வெளியிட்ட அறிக்கையில் ஒரு வாரத்திற்கு முன்பு மாலி நாட்டின் தலைநகரான திம்புக்துவில் சுவிஸ் பெண் ஒருவரைக் கடத்திய கடத் தல் காரரிடமிருந்து அவரை மீட்பதற்குஅரசுமுயற்சிஎடுத்துவருவதாகக் கூறப்பட் டுள்ளது.

"அல்குவைதாவின் வடக்கு ஆபிரிக்காவின் கிளையாகத் திகழும் அக்மியின் துணை ஒப்பந்த காரராகச் செயல்படும் ஒரு தனியார் இராணுவ அமைப்பு சுவிஸ் பெண்ணைக் கடத்தியிருக்கிறது" என்று திம்புக்து நகர பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

# மீண்டும் ஆட்சியில் புடின்



மொஸ்கோ,ஏப்.26

ரஷ்யாவின் அதிபராக விளாடிமிர் புடின் மே 7ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். எனவே, கட்சித் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகுகிறார்.

ரஷ்ய அதிபராக ஏற்கனவே 2 முறை பதவி வகித்தவர் விளாடிமிர் புடின். கடந்த முறைத் தேர்த லில் 3ஆவது முறை அதிபராக ரஷ்ய அரசியல் சட்டம் இடம் அளிக்காததால் தனது நம்பிக்கை பெற்ற மெத்த தேவை அதிபராக்கினார். 2 முறைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்ற விதியை சட்டத் திருத்தம் மூலம் ரத்துச் செய்தார்.

இதையடுத்து சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் விளாடிமிர் புடின் ஆளும் கட்சியான ஒன்றிணைந்த ரஷ்யா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் 7ஆம் திகதி அதிபராகப் பொறுப்பேற்கிறார். ஆளும் கட்சியின் தலைவராக இப்போதுள்ள புடின், அதிலிருந்து விலகி மெத்த தேவை தலைவராக்க முடிவு செய்துள்ளார்.

எனவே, அதிபர் பதவி ஏற்கும் முன், கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகப் போவதாக புடின் நேற்றுமுன்தினம் அறிவித்தார். "கட்சி சார்பற்றவராக அதிபர் இருக்க வேண்டியது அவசியம். எனினும், இதை அரசியல் சட்டம் தடுக்கவில்லை. எல்லா கட்சிகளையும் ஒருங்கிணைத்து செல்ல வேண்டியுள்ளதால் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்யவுள்ளேன்" என்றார் அவர்.

# முதியோருக்கான கார் கண்டுபிடிப்பு

லண்டன்,ஏப்.26

எந்தச் சாலையில் பாதுகாப்பாகச் செல்லலாம் என்று முதியோர்களுக்கு வழி காட்டும் வகையில் புதிய தொழில் நுட்ப கார் ஒன்றைஇங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். முதியோரை இலக்காக கொண்டு நியூ ஈஸ்ட்டில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தக் காரை உருவாக்கியுள்ளனர். அது குறித்து, பேராசிரியர் பல்பலைதி கருத்துத் தெரிவிக்கையில், 60 வயதைக் கடந்த முதியோர்கள் காரை ஓட்டிச் செல்லும்போது, பார்வைக் குறைவு, உடல் நடுக்கம் போன்றவற்றால் அதிகம் சிரமப்படுவார்கள். மேலும், அவர்களில் சிலர் மற்றவர்கள் உதவியின்றி தனிமையில் இருப்பார்கள். இதனால், கார் பயணம் அவர்களுக்கு சவுகரியமாக அமையாது. இதை கருத்தில்கொண்டு, அவர்களுக்காக நவீன தொழில் நுட்பத்தில் புதிய கார் உருவாக்கப்பட்டது.

'கிரேனி நேவ்' என பெயரிட் டுள்ள இந்தக் காரில் கப்பலில் பயன்படுத்தப் படும் வழிகாட்டி கருவிகள், இரவு நேர பயணத்துக்கு ஏதுவான உள்கட்டமைப்பு என்பன விசேடமாகப் வேக அளவீட்டுக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், மிதமான வேகத்தில் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதில் உள்ள தொழில் நுட்பங்கள் மூலம், நகரில் நெரிசல் இல்லாத சாலையை அறிந்து பாதுகாப்பாகச் செல்ல லாம்.

முதியோருக்காக உருவாக்கப்பட்ட புதிய காரை செலுத்திப் பார்த்த 80 வயது சாரதிகள், இதில் உள்ள அம்சங்கள் ஆச்சரியம் அளிக்கின்றன என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகத் சிங்கின் நூற்றாண்டை முன்னிட்டு ரூ. 5 நாணயம்



சுதந்திர போராட்ட வீரர் பகத் சிங் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அவரது உருவம் பொறிக்கப் பட்ட புதிய ஐந்து ரூபா நாணயம் வெளியிடப்படவுள் ளதாக மத்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

பகத் சிங் நூற்றாண்டு விழாவையொட்டி, வெளி யிடப்படவுள்ள ஐந்து ரூபா நாணயத்தின் ஒரு புறத் தில், பகத் சிங் உருவமும் மறுபுறத்தின் வலது புறத் தில் ஷாஹித் பகத் சிங் நூற்றாண்டு விழா என்று ஆங் கிலத்தில் எழுதப்பட்டு இருக்கும்.

உருவப் படத்தின் கீழே, 1907-2007 என்ற சுவதேச எண் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த நாணயம், இந்திய நாணயச் சட்டம் 1906 இன்படி தொடர்ந்து செல்லத்தக்கது.

# இந்தியா - சீனா - ஜப்பான் போட்டியால் ஆசியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி தெரிவிப்பு

டில்லி, ஏப்.26

இராணுவ ரீதியாக சீனா, இந்தியா மற்றும் ஜப்பானுக் கும் இடையே ஒரு போட்டி சூழல் நிலவுவது ஆசியாவின் பாதுகாப்புக்கு நிச்சயமாக பாதிப்பு ஏற்படலாம் என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி தெரிவித்துள் ளார்.



தலைநகர் புதுடில்லியில் முப்படைத் தளபதிகளின் மாநாட்டில் பாதுகாப்பு அமைச் சர் ஏ.கே.அந்தோணி கலந்து கொண்டு பேசினார்.

மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தான் மற்றும் ஆப் கானிஸ்தான் பிராந்தியத் தில், இராணுவ ரீதியாகவும், பாது காப்பு ரீதியாகவும் ஏற் படும் மாற்றங்கள் இந்தியா வின் பாதுகாப்புச் சூழலில் தாக் கத்தை ஏற்படுத்தும். எனவே, இந்தப் பிராந்திய நிலவரங் களை எமது இராணுவத்தினர் கவனிக்க வேண் டும்.

பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் தன் பலத்தை நிரூபிக்கும் வகை யில் சீனா செயற்படுகிறது.

இராணுவ ரீதியாக சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் இடையே ஒரு போட்டியான சூழ்நிலை நிலவுகிறது.

இதனால் ஆசியாவின் பாது காப்புச் சூழலில் நிச்சயமாக பாதிப்பு ஏற்படலாம். இந்த நிலவரங்கள் எல்லாம் முப் படையினருக்கும் சவாலாக அமையலாம். எனவே சீனா விடயத்தில் நாம் விழிப்பாக இருந்து எமது பணிகளை செம் மையாகச் செய்ய வேண்டும்.

சைபர் குற்றங்களைப் பொறுத்த வரையில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசி யம் ஆகும். இணையத்தளம் மூலம் தூண்டப்படும் பயங் கரவாத அச்சுறுத்தல்களை குறைப் பதில் மிகவும் விழிப் புடன் இருக்க வேண்டும்.

அதேபோல் தகவல் தொழி நுட்பங்களை பயங்கரவாதி கள் தவறாகப் பயன்படுத்துவ தையும் தடுக்க வேண்டும்.

இராணுவத் தளபாடங் களை கொள் முதல் செய்வ தில் உள்ள தாமதங்களை தவிர்க்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை களை எடுத்து வருகிறது.

இராணுவத் தேவையைக் கருத்தில் கொண்டு, இராணு வம் சாா்ந்த பொதுத் துறை நிறுவனங்களும், தளபாடத் தொழிற்சாலை வாரியங்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண் டும்- என்றார் அவர்.


## பள்ளத்தில் பஸ் கவிழ்ந்தது 44 பேர் காயம்

கரூர், ஏப்.26

கரூர் அருகே, அரச பஸ் பள்ளத்தில் கவிழ்ந்ததால், குழந்தைகள் உட்பட 44 பக் தர்கள் படுகாயமடைந்த னர்.

நாமக்கல் மாவட்டம், சி. பள்ளத்துரைச் சேர்ந்த பக் தர்கள், பழநிக்குச் சென்று விட்டுத்திரும்பிய அரசபஸ்ஸே கடந்த திங்கட் கிழமை இரவு விபத்துள்ளானது.

பஸ்ஸில் பயணம் செய்த, குழந்தைகள் 5பேர் உட்பட 44 பேர் படுகாயம் அடைந் தனர். அவர்கள் அனை வரும் கரூர் அமராவதி மருத் துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டனர். (வ)



நாடாளுமன்றத்தின் இரண்டாவது கட்ட பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் நாளான நேற்று முன்தினம் தெலுங்கானா ஆதரவுகோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வாசலில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## புதுக்கோட்டையில் இடைத்தேர்தல்

புதுக்கோட்டை,ஏப்.26


இந்தியாவில் 4 மாநிலங் களுக்கு எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி இடைத்தேர் தல் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் அறி வித்துள்ளது.

தமிழகத்தில் புதுக் கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்தப் படும்.

இதையடுத்து வேட்பு மனுத் தாக்கல் எதிர்வரும் மே 18 ஆம் திகதி ஆரம்பித்து மே 25 ஆம் திகதியில் நிறைவு பெறும். தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக் கள் மே 26 ஆம் திகதி பரிசீ லனை செய்யப்படும் என்றும், வேட்பு மனுத் தாக்கலை திரும்பப் பெற மே 26ஆம் திகதி கடைசி நாள் என்றும் தேர்தல் ஆணையம் அறி வித்துள்ளது.

இடைத்தேர்தலில் பதி வாகும் வாக்குகள் எதிர் வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி எண்ணப்படும்.(வ)

## இந்திய நுட்பத்தில் மட்டுமே உருவான செய்மதி விண்ணுக்கு



சென்னை,ஏப்.26

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (இஸ்ரோ) இந்திய தொழில் நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி முதன்முறை தயாரித்த ரிசாட்,1 என்ற ராடார் செயற் கைக் கோள் இன்று அதி காலை விண்ணில் செலுத் தப்படவுள்ளது.

1,858 கிலோ எடை கொண்ட ரிசாட்,1 செயற் கைக்கோள், பி.எஸ்.எல். விசி-19 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டா சதீஸ் தவான் விண்வெளி ஏவு தளத்தில் இருந்து இன்று அதிகாலை 5.47 மணிக்கு விண்ணில் செலுத்தப் பட வுள்ளது. இதற்கான, 71 மணி நேரக்கணிப்பு நேற்றுமுன் தினம் காலை 6.47 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த செயற்கைக்கோள் பூமியில் இருந்து 536 கிலோ மீற்றர் சுற்றுவட்டப்பாதை யில் நிலை நிறுத்தப்படும். இந்த செயற் கைக்கோள் கடந்த 20 ஆம் திகதியே விண்ணில் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந் தது. அதன்பின், செயற் கைக்கோளை விண்ணில் ஏவும் திகதியை இஸ்ரோ மாற் றியது குறிப்பிடத்தக்கது.

ரிசாட்,1 செயற்கைகோள் வேளாண்மை, நீர்வள நிர் வாகம் உள்பட பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படுகிறது. எந்தவகை யான காலநிலையானாலும், மேக மூட்டமாக இருந்தா லும், பூமியின் நிலப்பரப்பை துல்லியமாகப் படம் பிடித்து அனுப்பும் திறன் கொண் டது. செயற்கைக் கோளில் சிபாண்ட் எஸ்.ஏ.ஆர்.பேலோடு எனப்படும் நவீன கருவி பொருத்தப்பட்டுள்ளது. இத னால், படங்கள் அனைத்தும் துல்லியமாகவும், தெளிவா கவும் இருக்கும். (வ)

### 2ஜி முறைகேடு வழக்கு:

## சாதிக் பாட்சா வழக்கை முடிக்கிறது சி.பி.ஐ.



முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசாவின் நண்பர் சாதிக் பாட்சாவின் தற்கொலை குறித்து விசாரணை நடத்தி வந்த மத்திய புலனாய்வுத் துறை விரைவில் தனது அறிக்கையை தாக்கல் செய்யவுள்ளது.

2ஜி அலைவரிசை முறைகேடு விவகாரத்தில் மத்திய புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் ஆ.ராசாவின் நண்பர் சாதிக் பாட்ஷா தற்கொலை செய்து கொண்டார். அவர் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தனது வீட் டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கினார்.

இந்நிலையில் சாதிக் பாட்சாவின் மரணம் குறித்து பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டதால், இது குறித்து புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கில் புலனாய்வுத் துறை தனது விசாரணையை குறிப்பிட்டளவுக்கு முடித்துள்ள தாகவும் தனது அறிக்கையை தாக்கல் செய்யவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

சாதிக் பாட்சாவின் இறப்பில் எந்த சந்தேகத்துக்கும் இட மில்லை என்றும் அது தற்கொலைதான் என புலனாய்வுத்துறை முடிவுக்கு வந்துள்ளதாகவும் சாதிக் பாட்சாவின் வழக்கை மூடவுள்ளதாகவும் தகவல் தெரிவிக்கின்றன. (வ)

## புதுடில்லி நாடாளுமன்றத்தை கலக்கிய தனித்தெலுங்கானா

### காங்கிரஸ் எம்.பிக்கள் 7 பேர் தற்காலிக நீக்கம்

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை தொடர் பாக அமளியில் ஈடுபட்ட 8 காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மக்கள வையில் இருந்து 4 நாள்க ளுக்கு தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டனர்.

நீண்ட நாள்கள் கழித்து நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் மக்களவைக் கூட்டம் ஆரம்பமாகியது. இதன்போது எதிர்க்கட்சிகள் நாட்டின் பிரச்சினைகளை விவாதத்திற்காக முன் வைத் தனர்.

முதலாவதாக ஆந்திரா வில் தெலுங்கானாவைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனித் தெலுங்கானா கோரிக் கையை விவாதத்துக்கு வைத்து கூச்சலிட்டனர்.

இதனால் நேற்று முன் தினம் மக்களவை இரு முறை ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் பட்ஜெட் கூட்டத்தொடர் முடியும் வரை அமளியில் ஈடுபட்ட வர்கள் அனைவரையும் தற் காலிக பணிநீக்கம் செய்ய ... தெரிவித்தது.

ஆனால் அடையாள தண் டனையாக 4 நாள்களுக்கு மட்டும் அவர்களை பணிநீக் கம் செய்யுமாறு கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்தது.

**கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பிக்களுக்கான பணி நீக்க பரிந்துரையை சமாஜ்வாடி, பா.ஜ.க., ஐக்கிய ஜனதா தளம், அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆதரித்தனர்.**

இதை சமாஜ்வாடி, பா.ஜ.க., ஐக்கிய ஜனதா தளம், அ.தி.மு.க. உறுப்பி னர்கள் ஆதரித்தனர். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் 8 பேரும் 4 நாள்களுக்கு பணி நீக்கம் செய்யப்பட்டனர். (வ)

## பன்றிக் காய்ச்சலால் 57 பேர் உயிரிழப்பு

டில்லி,ஏப்.26

இந்தியாவில் பன்றிக் காய்ச்சல் நோய்க்கு 57 பேர் வரை உயிரிழந்தனர் என்று நாடாளுமன்றத்தில் தெரி விக்கப்பட்டது.

“ஆந்திரா, கர்நாடகா, மகா ராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் எச்1 என்1 எனப்படும் பன் றிக்காய்ச்சல் நோயால் மக் கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த 18 ஆம் திகதி வரை சுமார் 20 பேர் மகாராஷ்டிரா மாநிலத்தில் உயிரிழந்தனர். அதிகபட்சமாக நாடு முழுவ தும் சுமார் 463 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். ராஜஸ் தான், ஆந்திராவில் 12 பேர் உயிரிழந்தனர். ராஜஸ்தா னில் 107 பேரும், ஆந்திரா வில் 112 பேரும் பாதிக்கப் பட் டுள்ளனர்''-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(5)

இன்னும் பிறக்காத நாளைய பொழுதுக்காகக் கவலைப் பட்டு உங்கள் ஆற்றலை வீணடிக்காதீர்கள் என்கிறார் ஆஸ்லர். உங்கள் அறிவையும் ஆர்வத்தையும் பயன்படுத்தி இன்றைய வேலையைச் சிறப்பாகச் செய்யுங்கள். அதுவே உங்கள் எதிர்காலத்தை மதிப்புமிக்கதாக்கிவிடும்.

'இன்றைய ரொட்டிக்காகப் பிரார்த்தியுங்கள் என்பார் இயேசு. ஏனென்றால் அதை மட்டுமே நாம் உண்ண முடியும்.

''நாளையைப் பற்றிச் சிந்திக்காதீர்கள்'' என்கிறார் இயேசு. நாளையைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்ற பொருளிலேயே அவர் அதனைக் குறிப்பிட்டது. 'Take no thought for the tomorrow' என்ற அந்த வாசகம், இன்று 'Take no anxiety for the tomorrow' என்று தெளிவாகவே (அநாவசிய குழப்பங்களைத் தவிர்க்க) பைபிளில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நாளையைப் பற்றித் திட்டமிடுங்கள். நாளையைப் பற்றிய கவலை இல்லாமல்.

கப்பல் மூழ்குவதை உங்களால் தடுக்க முடியாது. ஆனால் நீங்கள் மூழ்காமல் இருக்க முடியும்.

நல்ல சிந்தனை, கெட்ட சிந்தனை-இவை ஒன்றுக் கொன்று வேறுபடும். அமைதிக்கு வழி காண்பது நல்ல சிந்தனை. போருக்கு வழி வகுப்பது கெட்ட சிந்தனை. நல்ல சிந்தனை ஆக்கபூர்வமான எதிர்காலத்துக்குத் திட்டமிடும், மோசமான சிந்தனையோ நேற்றைய கசப்புக்களையும் வருத்தங்களையும் இன்றைய பொழுதில் கொண்டுவரப் பார்க்கும், தீய சிந்தனை மன இறுக்கத்தையும் நரம்புகளின் இயக்கத்தில் சீரழிவையும் உண்டுபண்ணும்.

### அவருக்குப் பிடித்த வாசகம்

அது இரண்டாம் உலகப் பெரும் போர் மூண்டிருந்த சமயம் தன் எதிர்காலம் பற்றிய கவலையில் தூக்கத்தை இழந்தார் ஒருவர். நள்ளிரவில் படுக்கையை விட்டு எழுந்து, நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டு தன்னையே ஓவியமாக வரைவார் அவர். இத்தனைக்கும் ஓவியக் கலை பற்றி எதுவுமே தெரியாது அவருக்கு. ஆனால் தன்னை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கவலைகளில் இருந்து விடுபடவே அந்த முயற்சியை அவர் மேற்கொண்டது. அவருடைய பெயர் ஆர்தர் ஹேய்ஸ் சல்ஸ் பெர்கர். கேள்விப்பட்ட மாதிரி இல்லையே என்பீர்கள். அவர்தான் உலகப் புகழ் பெற்ற அமெரிக்க, 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் உரிமையாளர். அவருக்குப் பிடித்த வாசகம், ''ஓரடியை எடுத்து வைப்பதற்கான வெளிச்சத்தைக் கொடு'' என்பதுதான்.

### கைவிளக்கின் ஒளி

உங்கள் கைவிளக்கின் ஒளி அடுத்த அடியை எடுத்து வைக்கப் போதுமானதாயிருக்கும். அந்த மங்கலான வெளிச்சத்தில் தொலைதூரக் காட்சிகள் எப்படித் தெரியும் என்று கவலைப்படாதீர்கள்.

### ஜென் (Zen) கதை ஒன்று

குருவைக்காண தொலைதூரத்தில் இருந்து வருகின்றான் சீடன். அவரிடம் கொஞ்ச காலத்துக்கு முன்வரை தங்கியிருந்து பயின்றவன் தற்போது வேற்றூரில் வசிப்பவன். அன்று முழுவதும் அவருடைய மடத்தில் உண்டு இளைப்பாறி அவரோடு உரையாடினான்.

முன்னிரவில் அங்கிருந்து புறப்பட்டான். குரு லாந்தர் விளக்கொன்றை அவன் கையில் தந்தார். அது மங்கிய ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தது. ''நீ இருண்ட பாதையில் போகிறாய். இந்த விளக்கின் ஒளியைக் கொண்டு பத்தடி தூரத்தில் இருப்பதை உன்னால் பார்க்க முடியாது. ஆனால் இந்த வெளிச்சம் நீ அடுத்த அடியை எடுத்து வைக்கப் போதுமானதாயிருக்கும்'' என்றார் குரு.

கண்ணுக்குத் தெரியாதவைகளை எண்ணிக் கவலைப் படாதீர்கள். கவலையில் உங்கள் நம்பிக்கையைச் சிதையவிடாதீர்கள். கைவிளக்கின் துணையோடு (நம்பிக்கை) நடந்து செல்லுங்கள். இருண்ட கானகத்தையே கடந்துவிடலாம்.

### வெளியே வாருங்கள்

நேற்று என்பது மீண்டும் வரப்போவதில்லை. நேற்றைய வாழ்க்கையையும் நாம் திரும்பவும் வாழப் போவதில்லை.

ஒரு பூ மலர்ந்தது. அதன் வாசம் காற்றில் பரவியது. அந்தப் பூ உதிர்ந்தது. காற்றில் கலந்திருந்த வாசமும் ஒரேயடியாய் மறைந்து போனது. ஒவ்வொரு நாளும் இப்படித்தான் வந்து போகிறது. இதில் நாம் இழந்தவைகளுக்காகவும் நம்மை விட்டுப் பிரிந்தவைகளுக்காகவும் ஏன் வருந்தி நிற்பது?

மனம் ஒன்றும் குப்பைத் தொட்டியல்ல, வேண்டாதவைகளை போட்டு நிரப்பிக் கொண்டிருப்பதற்கு. அது நல்ல நட்பைப் போற்றுவதாகவும் வெற்றிகளை அசை போடுவதாகவும் இனிய தருணங்களை நினைவு கூர்வதாகவும் இருக்க வேண்டும். வெறுப்பை, கசப்பை, தோல்வியை, துன்பத்தைச் சுமப்பதாக இருக்கக் கூடாது.

''நேற்றைய தோல்விக்காகவோ
இழந்து விட்ட பொருளுக்காகவோ
பிரிந்து விட்ட உறவுக்காகவோ
இன்று வருந்தி என்ன ஆகப்போகிறது
கவலைகளின் எண்ணிக்கை தான் கூடும்''

-சி.எஸ்.தேவநாதன்

(தொடரும்)

# மின்னியல் ஊடகங்களின் வருகையால் அச்சு நூல்கள் அருகி வருகின்றன

## தேசிய கலை, இலக்கியப் பேரவையின் செயலாளர் கவலை

சிறு சிறு அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தொழிற்பட வேண்டும். இலக்கியங்களில் தன்னிறைவு காண வேண்டும். ஈழத்து எழுத்தாளர்கள் மாதத்தில் ஒரு தடவை ஒன்று சேர்ந்து நூல்களைப் பற்றி கலந்துரையாட வேண்டும். இதற்கு எழுத்தாளர் பண்பாட்டு நிதியம் எனப் பெயர் வைத்தல் சாலப் பொருத்தமாகும்.

யாழ்ப்பாணம்,ஏப்.26

இலத்திரனியல் ஊடகங்களின் வருகையால் அச்சு நூல்களின் நிலை பரிதாபகரமாக மாறி விட்டது. ஆங்காங்கே நூல்களை வெளியிடுவோர்கூட நினை வஞ்சலிக்கு, புத்தகம் அடித்துக் கொடுப்பது போல வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறு தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் சோ.தேவராஜா தெரிவித்தார்.

பேராசிரியர் சி.சிவசேகரம் எழுதிய 'குழந்தையும் தேசமும்' என்னும் நூல் அறிமுக விழா யாழ்ப்பாணம் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சவால்கள் நிறைந்த கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போர் நெருக்கடி காலங்களில் எழுதப்பட்ட நூல்கள் பெறுமதி மிக்கவை. தமிழரின் இருப்புக்களை அவை நிறுத்தி உள்ளன.

இன்று எழுத்தாளர்கள் மத்தியில் மட்டும்தான் எழுத்துக்கள், இலக்கியங்கள் பேசப்படுகின்றன. இன்னும் சிறிது காலம் சென்றால் ஈழத்து எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் இல்லாது போவதற்கு வாய்ப்பு உண்டு. இதை நினைத்தால் பெரும் கவலையாக உள்ளது.

சிறு சிறு அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தொழிற்படவேண்டும். இலக்கியங்களில் தன்னிறைவு காண வேண்டும். ஈழத்து எழுத்தாளர்கள் மாதத்தில் ஒரு தடவை ஆயினும் ஒன்று சேர்ந்து நூல்களைப் பற்றி கலந்துரையாட வேண்டும். இதற்கு 'எழுத்தாளர் பண்பாட்டு நிதியம்' எனப் பெயர் வைத்தல் சாலப் பொருத்தமாகும்.

தமிழ் மொழியின் பெருமை பற்றி பொது மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

நூல் வெளியீடு என்பது இன்றைய காலப் பகுதியில் விளம்பரம், வியாபாரம் என்ற நிலை தாண்டி, விருந்தோம்பல் பண்புக்கும் வந்துள்ளது. வெகுசன மக்கள் மத்தியில் பல இலக்கிய பிரமாக்கள் உள்ளனர். அவர்களை மூத்த எழுத்தாளர்கள் வளர்த்தெடுக்க முன்வர வேண்டும்.- என்றார். (எ-13)

# சில சிறுவர் இல்லங்களின் செயல் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது

## யாழ். அரச அதிபர் விசனம்

சிறுவர் இல்லங்கள் சிலவற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு நடப்பதை அனுமதிக்க முடியாது.

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ். மாவட்டத்திலுள்ள சில சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகள் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக இருக்கிறது என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். நாகவிகாரையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் விருந்தினர் உரை நிகழ்த்தும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பணம் பெறும் முயற்சிக்காக நடத்தப்படும் சிறுவர் இல்லங்கள் சிலவற்றின் செயற்பாடுகள் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன. இல்லங்கள் சிலவற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு நடப்பதை அனுமதிக்க முடியாது.

யாழ். மாவட்டத்தில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சிறுவர் இல்லங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது பிரதேசத்தில் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் எதிர் காலம் சிறந்து விளங்கும் என்பது உண்மை.

சமூகத்தில் நாளைய தலைவராக சிறுவர்கள் உள்ளதால் அவர்களின் வளர்ச்சியில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அனைத்து சிறுவர் இல்லங்களின் கடமையாகும்.- என்றார்.

(எ-3)

# வடக்கு கடற்படை தளபதிக்கு ஆய்வுப் பட்டம்



யாழ்ப்பாணம்,ஏப்.26

வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ண சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு மற்றும் போர்த் திறனியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் (எம்பில்) பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அவர் இந்தத் துறையில் அதி சிறப்புச் சித்தி பெற்றுள்ளார்.

இதற்கான பட்டமளிப்பு விழா கடந்த 21 ஆம் திகதி புதுடில்லி தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் இருந்து கடற்படைத் தளபதி விஜேகுணரட்ண தனது பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

(த)

# வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஏப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் வருமாறு:-

### இசை தனி பிரிவு - 2

முதலாமிடம் - க.ரதன், கொடிகாமம் திநாவுக்கரசு ம.வி, இரண்டாமிடம்- வே.நிலக்ஷன், உசன் இராமநாதன் ம.வி, மூன்றாமிடம் - ர.திலக்ஷன், மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்.

### இசை தனி- பிரிவு 3

முதலாமிடம்- ந.கானப்பிரியா சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - செ.துஷானி மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், மூன்றாமிடம்- உ.சுரெப்தா வரணி ம.வி.

### இசை தனி- பிரிவு- 4

முதலாமிடம்- ஏ.சஜிந்தா சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- செ.ஜெனிஸ்ரா, யா/ உசன் இராமநாதன் ம.வி, மூன்றாமிடம் -வி.மதர்சினி - யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தி.

### இசை தனி - பிரிவு -5

முதலாமிடம் - சிவ அகிலா, யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி, இரண்டாமிடம் - நி.சிவரஞ்சினி, யா/ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, மூன்றாமிடம்- பா.நிரோஷா, யா/ சாவ.டிறிபேக்கல்லூரி. (தொடரும்) (எ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.26

கலாசார திணைக்களத்தால் கலைத்துறையில் உன்னத பங்களிப்புச் செய்துள்ள இதுவரையில் கௌரவிக்கப்படாத கலைஞர்களைத் தெரிவு செய்து கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 30 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார். விண்ணப்ப முடிவு திகதி 30.05.2012 ஆகும்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பான் கீ-மூனின் கருத்து வெளிப்படுத்தும் செய்தி

இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான மிகச் சரியான நேரம் இதுவே என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ – மூன் மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தி இருக்கிறார். ''இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவாகவும் நீதியாகவும் தீர்வு காண்பதற்கான சரியான தருணம் இதுதான்'' என்றிருக்கிறார் பான்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு மீது இதே காரணத்துக்காகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சரியாக ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் பான் கீ-மூனின் கருத்து வெளிவந்துள்ளது. அதுவும் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தக் கருத்துக்களை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்பது கேள்விக்குரியதே. ஏற்கனவே மனித உரிமைகள் சபைத் தீர்மானம் குறித்தும் அரசு இதுவரை போதிய நடவடிக்கைகள் எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஐ.நா. தீர்மானம், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்துப் பக்கச்சார்பற்ற சுயாதீனமான வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்தி இருந்தது.

இந்த ஒரு மாத காலப்பகுதியில் அதற்கான எந்த ஆக்கபூர்வமான பணிகளையும் அரசு செய்ததாகவோ அல்லது செய்வதற்கான எண்ணத்தைக் கொண்டிருப்பதாகவோ தெரியவில்லை. பதிலாக, ஐ.நா. மற்றும் மேற்கு நாடுகளுக்கு எதிரான உணர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் கிளப்புவதையும் தீர்மானத்துக்கு எதிரான வீராவேச முழக்கங்களை வெளியிடுவதிலுமே அரசு இதுவரை காலமும் காலத்தைக் கழித்தது.

இப்போது பிரச்சினையை அதிலிருந்து திருப்பி மதங்களுக்கு இடையிலான பிளவை, சிக்கலை உருவாக்கி அதில் குளிர் காய்ந்தபடி ஐ.நா. தீர்மானம் மீதிருந்த மக்களின் கவனக் குவிப்பைக் கலைத்திருக்கிறது. ஆனால் அதற்கு எதிரான கருத்துக்கள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட சிங்கள இன உணர்வை தம்புள்ள விகாரை மூலமாக மேலும் வளர்த்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்வதில் அரசு கவனமாக இருக்கிறது.

அரசின் இத்தகைய செயற்பாடுகளில் இருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. அது, நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நேர்மையான எண்ணமோ மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புச் சொல்லும் திட்டமோ அரசுக்கு இல்லை என்பதுதான். மக்களை உணர்ச்சி ஊட்டி அதில் அரசியல் குளிர் காய்வதற்கான முயற்சிகளை மட்டுமே அது எடுக்கும் என்று தெரிகின்றது.

அப்படி இருக்கும்போது பான் கீ-மூன் போன்றவர்களின் கருத்துக்களோ அறிவுரைகளோ இலங்கை அரசின் காதுகளிலோ மஹிந்த ராஜபக்ஷவின் காதுகளிலோ ஏறும் என்று எதிர்பார்க்க முடியாது.

சீனா, ரஷ்யா போன்ற மேற்குக்கு எதிரான நாடுகளின் ஆதரவுடன் ஐ.நாவை எதிர்கொள்ள முடியும் என்று நம்பும் இலங்கை அரசு, இத்தகைய ஆக்கபூர்வமான கருத்துக்களுக்குச் செவிசாய்க்கும் நிலைமை இப்போதில்லை. எனினும் பான் கீ-மூனின் கருத்து இந்தியாவுக்குப் புறப்பட முன்னர் வந்திருப்பது கவனத்துக்குரியது. இனிமேல் இந்த விடயத்தில் இந்தியாவுக்கே கணிசமான பங்கிருக்கிறது என்பதை அது உணர்த்துகிறது.

# மக்களுக்கு விளங்காத சட்டங்கள்

■ *தமிழில்: வீயெஸ்ரி*



மேர்வின் சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை இடைநிறுத்தப்பட்டுள்ளது.- சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர்.

✱ ஒலி எழுப்பி அமைதியைக் குலைக்கும் பாண் விற்பனையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - சுற்றுச் சூழல் அதிகார சபை.

✱ பாகிஸ்தானில் வருடமொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் திராவக வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். - பத்திரிகைச் செய்தி.

மேற்கண்ட செய்திகள் வெவ்வேறு விதமானவையேயாயினும், அவற்றின் உள்ளார்த்தம் ஏமாற்று என்பதே. அதாவது சட்டத்தை முறைப்படி நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஏமாற்றேயாகும். சண்டித்தனம் செய்யும் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகச் சட்ட ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுவதில்லை. மேர்வின் அரச ஊழியர்களைப் பிடித்து மரத்துடன் கட்டி வைத்தாலும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்தினாலும் அவரைச் சட்டம் பாதுகாக்கும்.

பாகிஸ்தான் நாட்டுப் பெண்கள் தமது கணவர்மாரை மதிக்காவிட்டால் அவர்கள் திராவக வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகலாம். அவர்களைத் தாக்கிய அவர்களது கணவர்மார் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வர்.

ஆனால் அதிகாலைவேளை 'ஹோர்ண்' சத்தம் எழுப்பிப் பாண் விற்பனையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி உரத்துச் சத்தமெழுப்புவதற்குத் தடை. வீடுகளில் தூக்கத்தில் இருப்போருக்கு சத்தம் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதல்ல அதற்கு காரணம். பஸ் வண்டிகளும் கூட உரத்து 'ஹோர்ண்' எழும்புவதற்குத் தடை விதிக்கப்படவுள்ளதாம். இன்னும் கொஞ்சக் காலம் போனால் உரத்துச் சிரிப்பது கூடத் தடை செய்யப்படலாம். ஆனாலும் எது தான் வந்தாலும் மேர்வின் சில்வாக்கள் வசதி வாய்ப்புகளுடன் வாழ வாய்ப்புக் கிட்டும்.

சட்ட திட்டங்கள் ஒருவருக்கு ஒருமாதிரியும், மற்றொருவருக்கு வேறொரு விதத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய உள்ள ஒரே மார்க்கம், அவரவர் ராஜபக்ஷ குடும்பத்தவர்களுடன் எந்த அளவுக்கு நெருங்கியவர்களாய் உள்ளனர் என்பதை வைத்துத் தீர்மானிப்பதாகும்.

முன்னைய காலத்தில் முதன் முதலாக நாட்டு மக்களது தேவைகள், மற்றும் பாதுகாப்புக் கருதி நாட்டின் சமூக சட்டங்கள் வகுக்கப்படவில்லை. முதலில் அந்தந்த நாடுகளை ஆட்சி செய்தவர்களே சமூகச் சட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தினர். தமது அதிகாரத்தைத் தக்க வைக்கவும், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவுமே அவர்கள் சட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினர். முதன் முதலில் நாட்டு மக்களின் நன்மை கருதி சட்டங்கள் வகுக்கப்பட்டமை கிறீஸ் நாட்டிலேயே ஆகும். பின்னர் ரோம நாட்டு ஆட்சியாளர்களால் அவை மேலும் விரிவுபடுத்தப்பட்டன. ஆரம்பத்தில் நாட்டு மக்களது உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திய ஜப்பான், இந்தியா மற்றும் வேறு பல ஆசிய நாடுகளில், முன்னர் இருந்த சட்ட நடைமுறைகள், ஒன்றில் ஆட்சியாளர்களால் அல்லது மதத் தலைமைத்துவங்களால் உருவாக்கப்பட்டவையே. பின்னர் ஐரோப்பிய சட்ட நடைமுறைகள் ஆசிய நாடுகளில் அறிமுகமாகின. எமது நாட்டுச் சட்ட நடைமுறைகளும் ரோம நாட்டு மற்றும் பிரித்தானிய சட்டங்களையொற்றி உருவாக்கப்பட்டவையே. அந்த வகையில் அவை ஆட்சியாளர்களுக்குப் பாதுகாப்பளிக்காது நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவையாக அமைந்தன.

எமது நாட்டு சட்டதிட்டங்கள் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்திலேயே பாதிப்புக்கு உள்ளாக நேர்ந்தது. இதனால் ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் சட்ட திட்டங்கள் மாற்றம் கண்டன. சிறிமாவோவின் ஆட்சிக்காலத்தில் அரசியல் எதிரிகளைப் பழிவாங்க அந்தச் சட்டங்கள் பயன்பட்டன. அவருக்குப் பின் வந்த ஆட்சியாளர்களும் அதே விதத்தில் சட்டங்களைக் கையாண்டனர். அந்த வகையில் இன்றைய ஆட்சியாளர்களும் உங்களதோ, அல்லது எமதோ உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்காது, ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தமது விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலேயே சட்டங்களைக் கையாள்கின்றனர். அந்த வகையில் சட்டக் கோவையில் இருந்து ஒரு போதும் பயன்படுத்தப்படாத சட்ட விதிகளைப் பயன்படுத்தித் தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குகின்றனர். அதேவேளை ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களின் தவறுகளை மறைத்து உரிய சட்ட விதிகளைப் பயன்படுத்தாது தவிர்த்து அவர்களைப் பாதுகாக்கின்றனர். இதனாலேயே மேர்வின் சில்வா மீது எவராலும் கை வைக்க இயலாது போகிறது. துமிந்த சில்வா மீது குற்ற விசாரணை மேற்கொள்வது தவிர்க்கப்படுகிறது. தேவையானால் துமிந்தா சில்வா, மற்றும் பாரத லக்ஸ்மன் ஆகியோர் மீது ஐ.தே.கட்சிக்காரர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் சாட்சிகளைச் சோடித்து முடிப்பர்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் பொது மக்கள் மத்தியில் சட்டங்கள் குறித்த தெளிவு இல்லாதிருத்தலே ஆகும். முன்னர் அரசுகளின் ஆட்சிக்காலத்தில் நிலவிய சட்டங்கள் போன்றே இன்றைய சட்டங்களையும் நாட்டு மக்கள் கருதுகின்றனர். சட்டத்தை உருவாக்கும் அரசர்களே அதனை நடைமுறைப்படுத்துவதாகவும்,பொலிஸார் அத்தகைய அரசர்களின் கையாள்கள் தான் என்ற ரீதியிலேயே பொதுமக்கள் நோக்குகின்றனர். பொலிஸார் அரசின் கையாள்களல்ல, சட்டத்தின் பாதுகாவலர்களே என்பது பொதுமக்களுக்குத் தெரிவதில்லை. இதனாலேயே ஆட்சியாளர்களால் தமது தேவைக்கு ஏற்ற விதத்தில் சட்டத்தை மீற முடிகிறது; இல்லையேல் சட்டவிதிகளை மாற்றியமைக்க முடிகிறது.

இன்று சட்டத்தின் நியாயம் குறிப்பிட்ட ஒரு நாட்டினுள் மட்டுமே பாதுகாக்கப்படும் விதத்தில் மட்டுப்படுத்தப்படவில்லை. இன்று சர்வதேச ரீதியில் கடைக்கொள்ளப்பட வேண்டிய அளவிலான சட்டங்கள் உள்ளன. அவை மனித உரிமைகளைப் பேணுவதை அடிப்படையாகக் கொண்டவை. உலகின் நாகரிகமடைந்த சமூகங்கள் அத்தகைய உலகளாவிய ரீதியிலான பொதுச் சட்டங்களுக்கு ஏற்ப செயற்பட இணங்கியுள்ளன. நியாயமான விதத்தில் சட்டங்கள் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என ஐ.நா.சபை கேள்வி எழுப்ப முடிவதும் இதனாலேயே ஆகும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நடை முறைப்படுத்தப்படாதிருப்பதைக் கண்டித்து உலக அரங்கில் விமர்சிக்கப்பட முடிவதற்கும் இதுவே காரணம். நியாயமான விதத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பின் பொதுமக்கள் அந்தச் சட்டங்களுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை. மேர்வின் சில்வாவுக்கும், துமிந்த சில்வாவுக்கும் ஒரு சட்டம், ஐஸ்கிரீம், மற்றும் பாண் விற்பனையாளர்களுக்கு பிறிதொரு சட்டம் என நடைமுறைப்படுத்தப்படுமானால் பொது மக்கள் ஒரு போதும் சட்டத்துக்கு மதிப்பளிக்கப் போவதில்லை. மாறாக சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ள மேர்வினும், துமிந்தவும் மேற்கொண்ட அணுகுமுறை போன்று தாமும் செயற்பட விளைவர். அதாவது, அரசு பக்கம் சாய்ந்து அரசினால் வழங்கப்படும் பாதுகாப்புப் போர்வைக்குள் தாம் மறைந்து கொள்ள முயல்வர். அவ்விதம் அரசின் தீவிர ஆதரவாளர்களாக மாறினால் விரும்பிய, முறையற்ற செயற்பாடுகளை பாதிப்பு ஏதுமின்றி மேற்கொள்ள இயலுமென்பதைப் பொதுமக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். அத்தகைய பாதுகாப்புப் போர்வைக்குள் புகுந்து கொண்டு நியாயமற்ற விதத்தில் செயற்பட்டாலும் சட்டத்தைப் பரிகசிக்க, எள்ளி நகையாட இயலுமென்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனாலும் சட்டத்துக்கு இவ்விதம் சவால் விடுக்க முடிந்தாலும் அதனால் பாதிக்கப்படப் போவது நாட்டின் ஒட்டு மொத்தப் பொதுமக்களே என்பதை அந்தத்தரப்பினர் உணர்ந்து கொள்வதில்லை. இவை குறித்து நாட்டு மக்களுக்குப் புரிய வைத்து அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த இன்று பலமுள்ள எதிர்க்கட்சி ஒன்று தானும் இல்லை என்பது தான் பரிதாபகரமான நிலை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்தடுப்பு கோட்பாட்டில் அக்கினி - V

எஸ்.எஸ்.திருச்செந்தூரன்
*முதுநிலை மாணவன்
சர்வதேச உறவுகள்
தொடர்பான கற்கை*

ஆசிய பிராந்தியத்தில் வல்லரசுகளாக அறியப்படும் இந்தியா பாகிஸ்தான், சீனா, வடகொரியா போன்ற நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் அண்மைக்காலத்தில் தீவிரம் அடைந்து வருகின்றன. இதனை முன் கூட்டியே சமாளிக்க வேண்டிய நிலைக்கு சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளும் தள்ளப்பட்டுள்ளன என்பதே அண்மையில் இந்தியா பரிசோதித்த அக்கினி V ஏவுகணைப் பரிசோதைனையூடாகச் சொல்லப்பட்ட செய்தி. அதாவது எப்போதும் இராணுவ ரீதியிலான சமநிலையை கூட்டிக் காட்டுவதற்கான போட்டியில் ஈடுபடும் குறித்த இரு நாடுகளும் மறுபடியும் தம்மை வல்லரசு நிலையில் நிறுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகத்தான் ஆயுதப் பரிசோதனைகள் அமைகின்றன. இந்த முறை இந்தியா முந்திக் கொண்டுள்ளது. அக்கினி V ஏவுகணையின் ஊடாக சீனாவுடன் அணு ஆயுதம் முத்தடுப்பு நடவடிக்கை என்ற நோக்கத்தை அடைந்து கொள்ள இந்தியா முயற்சித்திருக்கின்றது. அதாவது அணுஆயுத முன்தடுப்பு (Nuclear Detrence) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இந்தியா சீனாவுடன் பொருத மேற்கொண்ட முயற்சியாக இது பார்க்கப்படுகின்றது.

இந்தக் கோட்பாடு 1956 களில் அமெரிக்காவினால் அறிமுகம் செய்யப்பட்டது.

அதாவது ஐரோப்பிய நாடுகள் வல்லரசுப் போட்டிக்கான ஆரம்கட்டத்தில் இருக்கையில் இந்தக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. அணுஆயுத அச்சுறுத்தல்கள் அல்லது ஆபத்துக்களை முன் கூட்டியே தடுத்து கொள்ளல் அல்லது தவிர்த்துக் கொள்ளுவதே அணு ஆயுத முன்தடுப்பு ஆகும். இதனை 1945 - 1989 பனிப் போர் காலத்தில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையில் இந்தக் கோட்பாடு மிகச்சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டது. அந்தக் குறித்த இரு நாடுகளும் காலத்தில் அணுகுண்டுகள், அணுகுண்டுவீச்சு விமானங்கள், அணுகுண்டுவீச்சு ஏவுகணைகள், அணுகுண்டு வீச்சு ஏவுகணை கொண்ட நீர்மூழ்கிக்கப்பல்கள் என தமது அணுஆயுத பலத்தைப் போட்டிபோட்டு அதிகரித்துக் கொண்டதனால் இந்தக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்தது. இப்போது வரலாறு ஆசியா பக்கம் திரும்பியுள்ளதால் மேற்கின் இராணுவ ரீதியிலான ஆரம்ப கட்ட கோட்பாடுகள் இங்கு செல்லுபடியாகின்றன. அதற்கான தேவையும் எழுந்திருக்கின்றது.

> "இப்போது வரலாறு ஆசியா பக்கம் திரும்பியுள்ளதால் மேற்கின் இராணுவ ரீதியிலான ஆரம்ப கட்ட கோட்பாடுகள் இங்கு செல்லுபடியாகின்றன.

அணுஆயுத முன்தடுப்பின் அவசியம் இந்தியா, சீனாவுக்கும் இடையில் மிக நீண்ட காலமாக நிலவிவருகின்றது. காரணம் இவ்விரு நாடுகளுமே அணுஆயத வல்லமை என்பதோடு மட்டுமல்லாது இவ்விருநாடுகளும் தீராத முரண்பாடு உடையனவாகும். 1962 ஆம் ஆண்டு இந்தியா - சீனா யுத்தம் இரு நாடுகளும் அணுஆயுத பலத்தினை அதிகரிக்க உடனடிக் காரணியாக அமைந்தது. அக்கினி V எவ்வாறாக இரு நாடுகளுக்கும் இடையில் அணு ஆயுத முன்தடுப்பினை ஏற்படுத்தப் போகின்றது

இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளும் அணுகுண்டுகள், அணுகுண்டுவீச்சு விமானங்கள், அணுகுண்டு ஏவுகணைகள், அணுகுண்டு ஏவுகணை தாங்கிய அணுநீர்முழ்கிக்கப்பல் என்பவற்றைக் கொண்டு காணப்படுகின்றன. ஆனால் மேற்சொன்ன விடயங்களில் இந்தியாவிலும் பார்க்க பன்மடங்கு சக்தி வாய்ந்ததாகவே சீனா காணப்படுகிறது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்டவற்றுள் அணுகுண்டு ஏவுகணைகள் முக்கிய இடம் பெறுகின்றன. 2002 ஆம் ஆண்டில் சீனா 15000km தூரம் ஏவுதிறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை தயாரித்தது. அத்தோடு மத்தியதரத் தூர ஏவுதிறன் கொண்ட அதாவது 3500km தூரம் ஏவுதிறன் கொண்ட 15 இற்கு மேற்பட்ட ஏவுகணைகளை சீனா கொண்டுள்ளது. இவற்றில் சிலவற்றை சீனா திபேத் பகுதிகளில் இந்தியாவின் டெல்லி, மும்பை நகரங்களை இலக்காகக் கொண்டு நிலை நிறுத்தியுள்ளது. அன்றிலிருந்து இந்தியா சீனாவிடம் கொண்ட அச்சமே அக்கினி V நோக்கி இந்தியாவினை தீவிரமாக நகர்த்தியது. அக்கினி V பரிசோதனைக்கு முன்னர் இந்தியாவிடம் காணப்பட்ட அக்கினி IV 3500km தூரம் வீச்சும் கொண்டதாகும். இதனால் சீனாவின் முழுப்பகுதியையும் தாக்கும் திறன் கொண்டிருக்கவில்லை. அக்கினி V ஒட்டுமொத்த சீனாவையே தாக்கும் திறன் கொண்டதாகும். கடந்தவாரம் இந்தியா தனது அதிதூரம் பாயும் ஏவுகணைமூலம் சீனாவை அச்சுறுத்திப் பார்த்தது. இதன் பிரதிபலிப்பை சீனாவின் உயர் மட்டங்கள் உடனடியாகப் பிரதிபலித்தன.ஆசியாவில் இனியும் தமக்கிடையில் முறிவுகள் இருக்கக் கூடாதென சீன வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருந்தார்.

அக்கினி V ஏவுகணை ஊடாக இந்தியா சீனாவின் செல்வாக்கினை ஆசியாவில் குறைத்துவிட்டது. அக்கினி V ஏவுகணை இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தினை உலகிற்கு உணர்த்துகின்றது. இராணுவத்தின் நவீனமயமாக்கலின் குறிகாட்டியாக அக்கினி V ஏவுகணை திகழ்கின்றது என்று பலராலும் அக்கினி V ஏவுகணை பற்றி பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான விளக்கங்கள் முன்வைக்கப்படினும் சர்வதேச அரசியல் பார்வையில் இந்தியா சீனாவிற்கிடையிலான அணுஆயுத அச்சுறுத்தலை முன்தடுப்பதற்கான நடவடிக்கையாகவே அக்கினி V அமைகின்றது.

# இலங்கைத் தமிழுரை தேசிய இனமாக்கிய தந்தை செல்வா

சி.வி.விவேகானந்தன்
*சட்டத்தரணி*

தந்தை செல்வாவின் 35 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். கடவுளிடம் தமிழர்களை ஒப்படைத்துச் சென்ற அரசியல் மேதை அவர்.

அன்னவரின் செயல்களால் இலங்கைத் தமிழ் மக்களிடம் தேசிய உணர்ச்சியை ஆழப்பதிய வைத்தார்.

பண்டா-செல்வா உடன்படிக்கை மூலம் இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம் என்பதனை தந்தை செல்வா அடையாளப்படுத்தியுள்ளார். ஒரு நாட்டில் ஓர் தேசிய இனமும் இருக்கலாம். ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய இனங்களும் இருக்கலாம்.

தேசிய இனம் என்ற சொற்தொடருக்கு தனி நாடு என்ற அர்த்தம் கொடுப்பது தவறு. சமஷ்டி, இணைப்பாட்சி என்றால் தனி ஆட்சியல்ல, சமஷ்டிக்கு எவ்வாறு தனி நாடு என்ற அர்த்தம் கொடுப்பது தவறானதோ, அவ்வாறே தேசிய இனம் என்பதற்கும் தனி நாடு உடைய மக்களுக்குத் தான் உரித்தாகும் என்பதுவும் தவறாகும்.

ஒரு நாட்டின் இறைமைக்கு குந்தகமில்லாமல், எதுவித பாதிப்புமில்லாமல் தேசிய உணர்வை வெளிப்படுத்திக்கொள்ளலாம். இதற்கு இந்தியாவே உதாரணம்.

இலங்கையில் இலங்கைத் தமிழர் தாங்கள் இந்த நாட்டின் தேசிய இனம் என்ற கருத்தை முன்வைக்கின்றனர். வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்ட சமஷ்டி வேண்டுமென விரும்புகின்றனர். அரசியல் அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டுமென விரும்புகின்றனர். இவைகள் எல்லாம் தந்தை செல்வாவின் சிந்தனையால், செயற்பாட்டால் ஏற்பட்டவையே.

வரலாற்று ரீதியில் இலங்கைத் தமிழர்கள் பண்டைய காலம் தொட்டே வாழ்கின்றனர் என்பதனை பல ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. விஜயனோடு ஆரம்பமாகும் சிங்களவர்களின் வரலாற்றுக்கு முன்பே தமிழர்கள் இலங்கையின் வடமேல் பகுதியில் வாழ்ந்தனர் என்பதை மகாவம்சமும் அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. (பழைய பதிப்பு மகாவம்சம்.59,60 ஆவது பக்கங்களைப் பார்க்கவும்).

1918 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி அன்றைய சிங்களத் தலைவர்கள் கொழும்பு நகரில் தமிழர் ஒருவர் தெரிவு செய்யக் கூடியதாக தொகுதியை உருவாக்குவதற்கு எழுத்து மூலம் வாக்குறுதியைக் கொடுத்தனர்.பின்னர் அந்த வாக்குறுதியைக் கைவிட்டனர்.கைவிட்டதற்கான காரணத்தை வெளிப்படையாகவே கூறினர். (The Tamils, like the Sinhalese and unlike any people of the island were in themselves a majority community and as such had reason neither to be clased with the minorities nor to stand in need of any safeguards) இந்தத் தீவில் வதியும் மற்றைய மக்களைப் போலல்லாது, தமிழர்கள் சிங்களவர்களைப் போல் தாங்களாகவே பெரும்பான்மைச் சமூகத்தினர்களாகத் திகழ்கின்றனர்.அதனால் அவர்களை மற்றைய சிறுபான்மை இனத் தவர்களுடன் சேர்த்து,சிறுபான்மையினத்தவர் என வகுப்பதற்கு எதுவித காரணமும் இல்லை.அல்லது ஏதாவது பாதுகாப்பு தேவைப் படும் நிலையிலும் அவர்கள் இல்லை. அப்போது தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவர் என்பதை சிங்களவர்கள் ஏற்றிருந்தனர்.

பேராசிரியர் கே.எம்.டி சில்வா ஒரு வரலாற்று அறிஞர் ஆவார். அன்னார் தனது ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.( In the political jargon of the day, there were two majority communities, the Sinhalese and the Tamils and minorities were the smaller racial groups. The situation changed fundamentally after 1922 when instead of two majority communities and the minorities, there was one majority community- the Sinhalesee- the Tamils now regarding themselves Increasingly as a minority community. It has remained so ever sinece)

அன்றைய அரசியல் சொற்சிலம்பத்தில் சிங்களவர்களும் தமிழர்களும் இரண்டு பெரும்பான்மைச் சமூகங்களாக இருந்தனர். சிறிய குழுமங்களாக இருந்தவர்கள் தான் சிறுபான்மையினராகும். 1922 ஆம் ஆண்டுக்குப் பின் அடிப்படையே மாறியது. இரண்டு பொரும்பான்மை சமூகங்கள், சிறுபான்மையினர் என்ற நிலைக்குப் பதிலாக, சிங்களவர் பெரும்பான்மைச் சமூகமாகினர்.

தமிழர்களை சிறுபான்மையாக்கிக் கொண்டனர். 1948 ஆம் ஆண்டிலேயே இலங்கைத் தமிழின எதிர்காலம் என்ற கட்டுரையின் மூலம் தமிழர்கள் மீண்டும் தேசிய இனமாக உயிர்த்தெழ வேண்டுமென தந்தை செல்வா கனவு கண்டார்.

## மகா வம்சத்தில் வரும் குறிப்பு

But the ministers, whose minds were eagerly bent upon the 48
consecrating of their lord, and who, although the means
were difficult, had overcome all anxious fears about the matter, 49
sent people, eltrusted with many precious gifts, jewels, pearls,
and so forth, to the city of Madhurā [1] in southern (India), to 50
woo the daughter of the Pandu king for their lord, devoted
(as they were) to their ruler; and they also (sent to woo)

[1] Now Madura, in the south of the Madras Presidency.

60 *Mahāvaṃsa* VII. 59

Mahātittha; for that very reason is that landing-place known as Mahātittha.[1]

[1] I. e. 'the great landing-place'; now Mantota opposite the island Manaar.

அதற்கான அடித்தளத்தை பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை மூலம் கட்டியெழுப்பி, ஒளியேற்றி விட்டார்.

முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமே பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை மூலம் முஸ்லிம்களுக்கு ஒரு பிராந்திய சபை உருவாக்கப்பட்டது. அந்த உடன்படிக்கைப் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் கட்டாயமாக இரண்டு பிராந்திய சபைகள் (Regional Councils) இருக்க வேண்டும் .ஒன்று தமிழர்களுக்கு. மற்றையது முஸ்லிம்களுக்கு. பிராந்திய சபை வழங்குவதன் மூலம் அவர்கள் தனிப்பட்ட தேசிய இனம் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டது. தந்தை தனது உடன்படிக்கையின் மூலம் முஸ்லிம்களுக்கும் தேசிய இன அந்தஸ்தை பட்டும் படாமலும் உருவாக்கி விட்டார். இலங்கை மூன்று தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை தந்தை வெளிப்படுத்தியுள்ளார்.

விடுபட்ட தேசிய உணர்வை உயிர்த்தெழச் செய்தவர் தந்தையே. இது தந்தை எங்களுக்கு அளித்த அரும்பெரும் செல்வமாகும். அதனை நாம் கட்டிக்காக்கக் கடமைப்பட்டுள்ளோம்.அவரது 35 ஆவது சிரார்த்த தினத்தில் தேசிய இன அந்தஸ்துக்காக உழைத்திட உறுதிபூண்போம். ✱

## நிந்தனை செய்தார், நீ தவவேள்வி செய்தாய் ஐயா!

காந்தியை நாம் கண்டோமில்லை
கனிமொழி கேட்டோமில்லை
அந்தமில் பக்தி பூண்டோமன்றி
அவரடி பணிந்தோமில்லை
வந்தனை செய்கின்றோமன்றி
வாழ்ந்திட அவரைக் காணோம்
எந்தை எம் செல்வநாயகத்தில்
இவரது சாயல் கண்டோம்
நந்தமிழ் இனத்தைக் காக்க
நாயகன் உதித்தானிங்கு
சொந்தமாம் உடைமை எல்லாம்
சோர்வின்றி விலைக்கு விற்று
வந்த நற் பணத்தைக் கொண்டு
வகுத்தனன் திட்டமொன்று
சொந்த மண் பறிபோனால்
செத்திடும் நம் இனமேயென்று
முந்தியே தமிழரசுக் கட்சி கண்டு
முழுதுமாய் அதனைக் காத்து
வந்த பேர் இன்னல் போக்க
வகுத்தனன் புதிய பாதை
அந்தமில் அடிஉதைகள் வாங்கி
அண்ணல் நீ ஈழக்காந்தியாகி
நிந்தனை செய்தார் முன்பு
நீ தவவேள்வி செய்தாய்
செந்தமிழ்த் தாயாள் தந்த
தீந்தமிழ்த் திராவிடனே
எந்தையே ஈசா நீதான் இனி
எம்மவரைக் காக்க வேண்டும்
அந்த உன் வார்த்தை கேட்டோம்
ஆரினி எமக்குதவ வல்லார்?

*விகடகவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

எந்த ஒரு கருவியும் இயங்கவேண்டும் என்றால், அதற்கு ஓர் எரிபொருள் தேவைப்படுகிறது. கார் ஓட வேண்டுமானால், அதற்கு எரிபொருளாக பெற்றோலோ டீசலோ தேவை. ஒரு ரயில் ஓட வேண்டுமானால், அதற்கு டீசலோ அல்லது மின்சக்தியோ கண்டிப்பாகத் தேவை. மின்சக்தி என்கிற எரிபொருள் இல்லாமல், எந்த ஓர் இயந்திரத்தையும் ஒருபோதும் இயக்கமுடியாது.

மனித உடம்புக்குள்ளும் இத்தகைய இயந்திரங்கள் நிறைய உள்ளன. இதயம், குடல், நுரையீரல், கல்லீரல் போன்றவை எல்லாம், மனித உடலுக்குள் ஓய்வு ஒழிச்சலின்றி இடைவிடாமல் செயற்படக்கூடிய நுட்பமான இயந்திரங்கள். இந்த இயந்திரங்கள் எல்லாம் வேலை செய்வதற்குத் தேவையான எரிபொருளை அவ்வப்போது நாமும் நிரப்ப வேண்டியிருக்கிறது. அந்த எரிபொருள்தான், நாம் உண்ணும் உணவு.

இதில் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவென்றால் நமக்குள்ளே செயல்படும் இயந்திரங்களுக்குத் தேவையான இந்த எரிபொருள்தான், நம்மையே எரிக்கிற பொருளாகவும் மாறிவிடுகிறது. மரணத்தை நோக்கி விரைவாக நம்மை இழுத்துச் செல்கிறது. அதாவது, நாம் இயங்குவதற்காக எடுத்துக்கொள்கிற உணவுப் பொருள்கள் பல சமயங்களில், நாம் இறந்து போவதற்குக் காரணமாகவும் அமைந்து விடுகின்றன என்பது பரிதாபத்துக்குரிய உண்மை.

எதை உண்ணவேண்டும், எப்போது உண்ண வேண்டும், எப்படி உண்ண வேண்டும், எதற்காக உண்ண வேண்டும் என்கிற தெளிவு நம்மிடத்தில் இல்லாதபோது, மரணம் நம்முடைய வீட்டுக்கதவை தட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்து விடுகிறது.

''அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு'' என்பது தமிழ் பழமொழி. இது என்ன சாதாரண பழ மொழியா? இதன் அர்த்தம் என்ன?பால் என்பது, அமிர்தம் போன்ற ஓர் உணவு. குழந்தை பிறந்தவுடன் சராசரியாக இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அதற்குப் பிரதான உணவாக இருப்பது பால் தான். அந்தக் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவித சத்துக்களையும் தரக்கூடிய ஆற்றல் அந்தப் பாலுக்கு உண்டு. அதே சமயத்தில், இந்த உணவை குழந்தைக்கு அளவாகத் தரும் போது, அது நன்றாக வளர்கிறது. அளவுக்கு மீறி அதைக் கொடுத்து விட்டால், செரிமானம் ஆகாமல், குடலில் புளித்துப் போய்த் தங்கி, வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் உண்டாகின்றன.

ஆக, அளவுக்கு மீறிய உணவினால், குழந்தையின் ஆரோக்கியம் கெட்டு, அதன் வளர்ச்சியே தடைப்பட்டு விடுகிறது. பெரியவர்கள் இந்தப் பாலை அதிகமாக உட்கொண்டால், அது கொழுப்பாக மாறி அங்கேயே தங்கிவிடுகிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக விஷமாக மாறத் தொடங்குகிறது.

உணவு சாப்பிடும் விடயத்தில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான 'கொள்வனவு' இருக்கும் அதாவது, உணவின் அளவு என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று, பிறவியிலேயே ஒருவருக்கு இயல்பாக அமைந்த விடுகிற குடல் மற்றும் இதர உறுப்புகள், இரண்டாவது,ஒருவர் வெளிப்படுத்தக் கூடிய உழைப்பின் திறனுக்கேற்ப, அவருடைய ஜீரண சக்தி மற்றவரிடமிருந்து மாறுபடும்.

யானையைப் போலப் பூனை தின்ன முடியுமா? அப்படியே தின்றாலும் ஜீரணம் ஆகுமா? அதைப் போல, வயல் வெளிகளில் ஏர் பிடித்துப் பகலெல்லாம் பாடுபடும் ஒரு விவசாயி சாப்பிடும் உணவின் அளவுக்கு இணையாக, ஒரு கோடீஸ்வரர் குளிரூட்டப்பட்ட அறையில் அமர்ந்து சாப்பிட முடியுமா?

பகல் முழுவதும் சுட்டெரிக்கும் வெயிலில், வியர்வை சிந்த உழைக்கும் கட்டடத் தொழிலாளர்கள், ஓட்டப் பந்தயம், கால்பந்து, நீச்சல் போன்ற விளையாட்டு வீரர்கள் ஆகியோருக்கு இருக்கக்கூடிய ஜீரண சக்தி, ஒரே நாற்காலியில் எட்டு மணி நேரம் அமர்ந்து பணியாற்றக்கூடியவர்களுக்கு ஒருபோதும் அமையாது.

சிலபேருக்கு அதிகம் சாப்பிட வேண்டும் என்பது வாழ்க்கையின் ஒரே இலட்சியமாக இருக்கிறது. இதை விடக் கெடுதலான ஒரு விடயம் வேறு எதுவும் இல்லை. இப்படிப்பட்டவர்கள், ஆரோக்கியமாக, நீண்டகாலம் வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை.

கல்யாணப் பந்தியில் ஒருவர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அங்கே, பரிமாறிக் கொண்டிருந்தவர், அவரை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று கூறினார். ''போன பந்தியில் உட்கார்ந்த அதே இடத்தில் இப்போது மீண்டும் உட்கார்ந்து தொலைத்து விட்டேன். அதனால்தான் உங்களுக்கு ஞாபகம் வந்து விட்டது'' என்றார் சாப்பிடுகிறவர். பரிமாறுகிறவர் கேட்டார், ''அடுத்த பந்தியிலும் உட்காருகின்ற எண்ணம் உண்டா?'' அது நீங்கள் பரிமாறுவதைப் பொறுத்தது, இதை நீங்கள் ஒன்றும் பெரிதாக வெளியிலே காட்டிக் கொள்ளவேண்டாம். நீங்களும் நானும் ஒரே மாதிரிதான். உமக்கு ஞாபகசக்தி ஜாஸ்தி, எனக்கு ஜீரண சக்தி அதிகம் அவ்வளவுதான் என்றார்.



வயிறு நிறையச் சாப்பிடுவதால், எவரும் ஆரோக்கியத்தோடு இருக்க முடியாது. எப்போது ,எப்படி எதைச் சாப்பிட வேண்டும் என்கிற எச்சரிக்கையோடு சாப்பிட்டால் தான் மனிதன் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

சுகி.சிவம்

# அழிவுகளிலிருந்து மீண்டு இப்போது வளமாக இயங்கும் வேலணை சரஸ்வதி



லக்ஸ்மன்

ஆரம்பகாலம் முதல் 1990ஆம் ஆண்டு வரை இந்தப் பிரதேசத்தின் கல்வியில் தனக்கே உரிய பங்களிப்பை சிறந்த முறையில் வழங்கி வந்த வேலணை சரஸ்வதி வித்தியாலயம் 1991 இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம் பெயர, தனது செயற்பாடுகளில் பின்னடைவும் வளங்களில் பெரிய அளவு தாக்கத்தையும் எதிர்நோக்கியது. எனினும் 1996 இல் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்து இன்று வரை தனது பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டைத் தொடர்கிறது.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேலணை வங்களாவடியிலும் சாட்டியிலும் அமெரிக்கன் மிஷன் மற்றும் கத்தோலிக்கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு கல்வித்துறைக்கு மெருகூட்டினாலும் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து மதமாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. இதனால் சைவப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வந்த வேலணை கிராம மக்கள் சைவ சமயச் சூழலில் சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தனர். எனினும் சைவசமயச் சூழலில் கல்வி பெற அவர்கள் நாவலரால் நிறுவப்பட்ட வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கே செல்ல வேண்டிய நிலை இருந்தது. இதனால் அந்தப் பகுதிப்பிள்ளைகள் எதிர்நோக்கும் சிரமங்களை அவதானித்த வைத்திலிங்கம் விஜயரத்தினம் என்பவர் அங்கு ஒரு சைவப் பாடசாலையை நிறுவ வேண்டும் என எண்ணினார். அவரது விருப்பத்தைத் தெரிந்து கொண்ட கிராம மக்கள் நகரின் பிரபல வர்த்தகராக இருந்த சோமசுந்தரம், மூத்ததம்பி, சதாசிவம் உதவி தபாலதிபராக இருந்த வைத்திலிங்கம், கிளாக்கர் நாகலிங்கம் ஆகியோரின் உதவியைப் பெற்று 1925 ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளில் வங்களாவடியில் விஜயரத்தினத்தின் சொந்தக் காணியில் சைவப் பாடசாலைக்கான அடிக்கல் நட்டனர். அப்போது யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த டபிள்யூ ஏ.கோப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

பாடசாலை உருவாக மணலாறில் தொழில் செய்த காரண கர்த்தாவான விஜயரத்தினம் அங்குள்ள தனது நண்பர்கள், உறவினர்களதும் உதவிகளைப் பெற்றிருந்தார். பாடசாலை கட்டுமானப் பணியில் ஊர்மக்கள் தமது பங்களிப்பை வழங்கி மன நிறைவு பெற பாடசாலையும் துரிதமாக கட்டுமானப் பணிகளை முடித்துக் கொண்டது.

1926 இல் பாடசாலைக் கட்டடம் முழுமையாக நிறைவு செய்யப்பட்டதுடன் தேவையான வளங்களையும் தேடிக் கொண்டது. இந்தப் பாடசாலையில் இருந்த வளங்கள் போன்று வேலணை பிரதேசத்தில் வேறு எந்தப் பாடசாலையிலும் அக்காலத்தில் வளங்கள் இருந்ததில்லை என வங்களாப்பகுதியினர் கூறுகின்றனர்.

1927ஆம் ஆண்டு தைப்பூசத்தினத்தன்று வேலணை சரஸ்வதி வித்தியாலயம் என்ற பெயருடன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. சைவமும் தமிழும் போன்று ஆரம்பம் தொட்டே ஆங்கிலக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப வகுப்பு தொடக்கம் புகுமுக வகுப்பு வரை கல்வி போதிக்கப்பட்டு வந்தது. எனினும் புகுமுக வகுப்பு ரத்துச் செய்யப்பட்டு சாதாரண தரம் (எஸ்.எஸ்.சி)வகுப்பு வரை நடத்தப்பட்டது. 1950 களில் வேலணை மத்திய கல்லூரி அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடியதாக வளம் அதிகரித்ததைத் தொடர்ந்து 8 ஆம் வகுப்புவரை குறைக்கப்பட்டு 1927 இல் கல்வி மறுசீரமைப்பில் கனிஷ்ட மகாவித்தியாலய தரத்தில் இயங்கத் தொடங்கியது. 1927 இல் ஆரம்ப வகுப்பு முதல் க.பொ.த.சாதாரண வகுப்பு வரையான மகாவித்தியாலயமாக இயங்கி வருகின்றது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் 1932 ஆம் ஆண்டு வரை முகாமையாளராக விஜயரத்தினமே பணியில் இருந்தார். 1932 இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1960இல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.

இதன் அதிபர்களாக நாகலிங்கம் காசிப்பிள்ளை பண்டிதர் மருதையினர் சபாபதி, அ.செல்லையா போன்ற ஆரம்ப காலம் தொட்டு கடமையில் இருந்தவர்களின் அர்ப்பணிப்பு மிக்க கற்பித்தல் நடவடிக்கையில் அதன் கல்வித் தரம் உன்னத நிலையைத் தொட்டிருந்தது. செல்லையா அதிபராக 35 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். அவரை பெரியவாத்தியார் என்றே மாணவர்கள் பெற்றோர்கள் அழைத்தனர் என்கிறார்கள் வேலணை மக்கள். அவரைத் தொடர்ந்து அ.பொன்னுத்துரை, க.சீவரத்தினம், சுப்பிரமணியம், கனகசபாபதி, பொ.நடராசா, ஆ.அருமைநாயகம், பாஸ்கரன் கி.சத்திய பாலன் ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர். இவர்களுக்கு உள்ளூர், வெளியூர் ஆசிரியர்கள் உதவியாக இருந்து பாடசாலையின் கல்வித்தர மேம்பாட்டுக்கும் சிறப்புக்கும் உறுதுணை செய்துள்ளனர். தற்போது அதிபராகப் பணியாற்றுபவர் திருமதி பஞ்சலிங்கம் நந்தினி. 2009 ஆம் ஆண்டில் இவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

> 1927ஆம் ஆண்டு தைப்பூசத்தினத்தன்று வேலணை சரஸ்வதி வித்தியாலயம் என்ற பெயருடன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. சைவமும் தமிழும் போன்று ஆரம்பம் தொட்டே ஆங்கிலக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

புலமைப்பரிசில் பரீட்சையில் 70 முதல் 80 வீதமான மாணவர்களும் க.பொ.த.சாதாரண தரத்தில் விஞ்ஞானத்தில் 50 வீதமும் கணிதத்தில் 44 வீதமும் வரையிலான சித்திகள் கிடைத்தன. எனினும் இப்போது அது சிறிது குறைவாகக் காணப்படுகின்றது. அதற்கு பாடரீதியான ஆசிரியர் இன்மைதான் முக்கிய காரணமாகும். தற்சமயம் அதிபருடன் 15 ஆசிரியர்களும் 178 மாணவர்களும் உள்ளன.

1991 இல் இடம் பெயர்ந்த போது யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இந்தப்பாடசாலை இயங்கியது. இடப்பெயர்வுகள் காரணமாக மாணவர் வரவும் அப்போது குறைவாகவே காணப்பட்டது.

திண்ணைப்பள்ளிக் கூடம் குரு சிஷ்ய முறையிலான கல்வி என்ற நிலையில் இருந்த வந்த இந்தப் பிரதேசத்தில் முறைசார்ந்த பாடசாலை இல்லை என்ற கவலையைப் போக்க இந்தப் பாடசாலையின் ஆரம்பமும் ஒரு காரணமாக இருந்துள்ளது. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்திட்டங்களை உள்ளடக்கப்பட்ட பத்துப் பாடசாலைகளில் இதுவும் உள்ளடங்குகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மாகாண நிர்வாக அலகு முஸ்லிம்களுக்கு அவசியம்

## ஹசன் அலி வலியுறுத்து

எருவில், ஏப்.26

முஸ்லிம் மக்களுக்கு தனி மாகாண நிர்வாக அலகு அவசியம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிர்வாக அலகு சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தென் கிழக்கு மாகாணம் என்ற பெயரில் ஓர் மாகாண அலகு உருவாக்கப்படவேண்டும்.



**இந்த நிர்வாக அலகு சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்படவேண்டும்.**

இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தைப் போன்றதொரு நிர்வாக அலகு முஸ்லிம்களுக்கும் தேவைப்படுகின்றது.

கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக சேவைகள், புனர்வாழ்வு, வீடமைப்பு, பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புப் பதிவுகள், சொத்து பறிமுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தைத் தாண்டிய அதிகார அலகு ஒன்றையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோருகிறது.- என்றார். (ச)

## தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு வழங்காவிட்டால் ஆர்ப்பாட்டம்

### ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்

நுவரெலியா, ஏப்.26

செனன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் தொழில் பிரச்சினைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை அழைத்து தொழில் அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக மே தினத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டிவரும் என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பில் உள்ள தொழில் ஆணையாளர் பேல் வீரசிங்கவைச் சந்தித்து நேற்றுமுன்தினம் முறையிட்டபோதே அதன் பொதுச் செயலாளர் முரளி ரகுநாதன் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹற்றனில் உள்ள செனன் தோட்டத்தில் பணியாற்றுபவர்கள் ஒப்பந்தங்களில் கூறப்பட்டுள்ள அளவுகளைக் காட்டிலும் அதிக கொழுந்தினைப் பறிக்க வேண்டுமெனக் கோரி தோட்ட நிர்வாகம் வலியுறுத்தியதைத் தொடர்ந்து அங்கு பணியாற்றுகின்ற பெரும்பாலான பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தொழிலாளர்களுக்கு கடந்த பெப்ரவரி மாதம் முதல் உரிய சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

எதிர்வரும் மே தினத்துக்கு முன்பாக இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படாவிட்டால் எதிர்ப்புப் போராட்டத்தினை தொழில் அமைச்சுக்கு முன்பாக நடத்த வேண்டியிருக்கும் - என்றார். (ச)

## சேற்றுக்குடாவில் வீடு உடைத்து திருட்டு


எருவில்,ஏப்.26

மட்டக்களப்பு, சேற்றுக்குடா பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீடொன்று உடைக்கப்பட்டு நான்கரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 50,000 ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

இல.49, விபுலானந்தா வீதி, சேற்றுக்குடாவில் அமைந்துள்ள வீடொன்றிலேயே இந்தத் திருட்டுச் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மாலை கணவர் நுவரெலியா சென்றுள்ளார். இரவு தனது பிள்ளையுடன் தான் தாய் வீட்டுக்குச் சென்ற பின்னரே திருட்டு இடம்பெற்றுள்ளதாக வீட்டுக்காரப் பெண்மணி தெரிவித்துள்ளார். வீட்டில் சத்தம் கேட்பதாக அயல் வீட்டார் கணவருக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கணவர் தனக்கு தெரியப்படுத்தினார். உடனடியாக நான் வீட்டுக்குச் சென்று பார்த்த போது வீடு உடைக்கப்பட்டு பணமும் நகைகளும் திருடப்பட்டிருந்தன என்றார் அவர். (ச-31)



சவூதி அரேபியாவுக்குச் சென்ற கல்முனை முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் ஜித்தாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் இரண்டாம் நிலை அதிகாரி டாக்டர் உதுமாலெப்பையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

## கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு

### கொள்வனவு செய்வதில் நிறுவனங்கள் அக்கறையில்லை

கிழக்கு மாகாணத்தின் பால் உற்பத்தி தற்போது அதிகரித்துள்ள நிலையில் அதனை கொள்வனவு செய்கின்ற நிறுவனங்கள் கொள்வனவு அளவை அதிகரிப்பதில் அக்கறை கொள்வதில்லை என்று கிழக்கு மாகாண பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்களின் பிரமுகர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மாவின் விலையுடன் ஒப்படுகின்ற போது உள்ளூர் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பால்மாவின் உற்பத்திச் செலவு அதிகரித்துக் காணப்படுகின்றது என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தப் பிரச்சினை முதலமைச்சர் மற்றும் மாகாண கால்நடை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து உடனடியாக கொள்கை ரீதியிலான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

## சானக ஜலப் பெருமவை கைது செய்ய உத்தரவு

கண்டி,ஏப்.26

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் சானக ஜலப் பெருமவை கைது செய்யுமாறு கண்டி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

நிதி மோசடி தொடர்பில் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கண்டி பிரபல பாடசாலை ஒன்றில் தனது பிள்ளையை சேர்த்து விடுவதாக வாக்குறுதி அளித்து சானக ஜலப் பெரும தன்னிடம் நிதி பெற்றுக் கொண்டு மோசடி செய்துள்ளார் என்று பெண் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு மாகாண சபை உறுப்பினருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து மத்திய மாகாண விசேட விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்ததை அடுத்து நீதிமன்றம் அவரைக் கைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அம்பாறையில் கைக்குண்டு மீட்பு

அம்பாறை, ஏப்.26


அம்பாறை, மகாஓயா பிரதேசத்தில் வீதி புனரமைப்பு பணியின் போது நிலத்தில் மறைத்து வைக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலையில் மீட்கப்பட்டது என்று மாகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

மகா ஓயா, சுடுதண்ணீர் கிணறு வீதியை புனரமைப்பதற்காக வீதியை தொழிலாளர்கள் தோண்டும்போது நிலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பொதி ஒன்றைக் கண்டு அதனைப் பிரித்த போது அதற்குள் கைக்குண்டு ஒன்று இருந்தது. இதனையடுத்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் வந்து கைக்குண்டை மீட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை மகா ஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கடலரிப்பால் வீடுகள் சேதம்



மாரவில, ஏப்.26

தற்போது பெய்துவரும் பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக மாராவில, தூவவத்தை பிரதேசத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் கரையோரத்தில் இருந்த வீடுகள் சில சேதமடைந்தன. இந்தப் பிரதேசத்தில் 500 மீற்றர் தூரம் வரையான நிலப்பரப்பு கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட இந்த கடலரிப்பு காரணமாக இரண்டு சிறிய கத்தோலிக்க தேவாலயங்கள், 15 வீடுகள் சேதமடைந்தன. இருபது தென்னை மரங்கள் வீழ்ந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே இந்தியக் குழுவினரைச் சந்திக்கவில்லை

### யோகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

கிழக்கு மாகாண மக்களின் உணர்வலைகளுக்கு மதிப்பளிப்பதற்கும், அவர்களிடமிருந்து பரவலாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் காரணமாகவும், மட்டு. மாவட்டத்திலுள்ள புத்திஜீவிகள் பலரின் ஆலோசனையினாலுமே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்புகளில் தாம் கலந்து கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்ட [illegible] யில் நடைபெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கட்சியால் அறிவிக்கப்பட்டது. அவ்வேளை நாங்கள் மூவரும் மாவட்டத்திலேயே தங்கியிருந்தோம். சந்திப்புக்கு முதல் நாள் இது பற்றி எமக்கு அறிவிக்கப்பட்டது.

[illegible] நாம் கலந்து [illegible]ட்டாலும் எமது தலைவர் இரா.சம்பந்தன் சம்பூர் மக்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்வு உட்பட எமது மக்களின் பிரச்சினைகளை விரிவாகக் கூறியிருக்கின்றார். இந்திய நாடாளுமன்றக் குழுவில் கிழக்கு மாகாணம் சார்பாகக் கதைக்க வேண்டிய விடயங்களை நாங்கள் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவினருக்குத் தெரிவித்திருந்தோம்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினர் மத்திய மற்றும் மாகாண அமைச்சர்கள் சகிதம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்துள்ளனர்.

ஆனால் இந்தச் சந்திப்புகளில் மக்கள் தமது பிரச்சினைகளை சுதந்திரமாக எடுத்துக் கூறவில்லை. கிழக்கு மாகாணத்துக்கான இவர்களின் வருகை ஒரு கண்துடைப்பாகவே உள்ளது. ஒரு சில மணி நேரங்களை உள்ளடக்கியதாக இந்த வருகை அமைந்தது. அதுவும் இந்தியாவின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொள்வதாகவே அமைந்தது.

இந்த மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்துப் பிரச்சினைகளைக் கேட்டறியவில்லை. அவர்களின் வாழ்க்கை எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறியவில்லை. அதுமட்டுமின்றி, சமூக - சமய அமைப்பு பிரதிநிதிகளைக் கூட இவர்கள் சந்திக்கவில்லை -என்றார். (சு-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** பணத்தை எதிர்பார்த்து, எதிர் பார்த்து ஒவ்வொரு காரியங்களையும் மேற் கொள்ளவேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம்ஏற்படும். உற்சாகமாக காணப்படுவர். முக்கிய நபர் ஒருவரின் சந்திப்புகள் இருக்கும்.

**இடபம்:** சில வெற்றிகள், உங்களை உள்ளூர சந்தோஷப்படுத்தியப்போதும், ஏனைய பணி களை தெளிவாகச் செய்யவேண்டும் என்ற, கவலை மேலோங்கி இருக்கும். குழந்தைக ளின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்புக்கு மாறான சூழ்நிலைதான் என்றபோதும், வழக்கமான பணிகளைப் பாதிப்பில்லாமல் செய்து முடிப்பீர்கள். நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறும். உழைப்பில் கடுமை காணப்படும். எதிர்பாராத பண வரவு ஒன்று வரும்.

**கடகம்:** தொழில் ரீதியான பிரச்சினைகள், சற்று அதிக யோசிக்க வைக்கும். மனம், ஒரு நிலையில் இல்லாமல் அலைபாயும். உற்சாகம், தெம்பு குறைந்து காணப்படும். சில நபர்களின், நட்புகளை தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் நிலவும்.

**சிங்கம்:** ஒரு பணி முடியும் என்று எண்ணிக் கொண்டிருப்பீர்கள். ஆனால், அதில் எதிர்பாராத இடையூறுகளால் தாமதப்படும். அரச உதவிகள் கிடைக்கும். பெரியோர் களின் சந்திப்பு பயன் தரும். நட்பு வட்டம் விரி வடையும்.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உற்றார், உறவினர், உங்களின் விருப் பம்போல நடந்து கொள்வர். வீட்டில் இருந்து தாமதமாகப் புறப்பட்டு, வாகனங்களில் வேகமாக செல்வீர்கள். சற்று விவேகத்துடனும் செயற்படுங்கள்.

**நாளை**

*சித்திரை 15 வெள்ளிக்கிழமை 27.04.2012*
*திதி: ஷஷ்டி மு.இ 10.35 வரை*
*நட்சத்திரம்: திருவாதிரை மு.ப 11.36 வரை*
*சுபநேரம்: 05.58- 07.28 வரை*
*ராகு காலம்: 10.28- 11.58 வரை*

**துலாம்:** ஒருசில விவகாரங்களில் சாதுரி யமாகத் தப்பித்துக்கொண்ட போதும், மனதில் பயம் கலந்திருக்கும். சில நபர்க ளின் மறைமுக சூழ்ச்சிகளைச் சமாளிப்பீர் கள். பெண்களால் நன்மைகள் பெறுவீர்கள். வியா பாரத்தில், போட்டிகள் அதிகம் யோசிக்க வைக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் நல்லபடியாக நடக்கும் என்று நினைத்த காரியம் அதற்கு, நேர்மாறாக நடந்து உங்களை சஞ்சலத்துக்கு ஆளாக்கலாம். செலவுகள் கட்டுக்கடங் காமல் இருக்கும். பண நெருக்கடி ஏற்படும். மாலையில் தெய்வ சிந்தனை அதிகமாக இருக்கும்.

**தனுசு:** தொழிலில் சற்று மந்தமான நிலைமை காணப்படும். சில விவகாரங் களில் சம்பந்தமில்லாத தலையீடுகளால், மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாகு வீர்கள். அலுவலகப் பணிகளில் பளு கூடும். வாகன வகையில் சிறுசெலவுகள் ஏற்படும்.

**மகரம்:** நண்பர்களால் நலம் பெறு வீர்கள். கூடவே, சில நபர்களை தக்கவைத் துக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் நிலவும். பொருள் சேர்வதற்கும் வாய்ப்பு கள் உண்டு. தொழிலில், அபிவிருத்தி காணப்படும். உடல் ஆரோக்கியம் சற்று யோசிக்க வைக்கும்.

**கும்பம்:** எந்தக் காரியத்திலும் விழிப் புணர்வுடன் செயற்படுவது அவசியம். எதிர்பார்த்த பணவரவு வரும். இல்லற துணையின் பொறுப்பற்ற வார்த்தைகள், அதிகம் யோசிக்க வைக்கும். பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். பிரயாண வாய்ப்பு ஒன்று உண்டு.

**மீனம்:** எந்த ஒரு காரியத்திலும் திறம்படச் செயற்பட்டு, பாராட்டுகளைப் பெறுவீர்கள். புதிய அறிமுகங்கள் ஏற்ப டும். பெற்றோரின் கருத்துக்கள், மனதில் அதிக சஞ்சலத்தை ஏற்படுத்தும். தொழில் ரீதியான தொடர்புகளை விரிவுப்படுத்திக் கொள்வீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | 8 | | | 6 | 2 | 4 |
| | | | 9 | | 2 | | 5 | |
| 4 | | | | | 3 | | | 7 |
| 2 | | 5 | 1 | 8 | | | | 9 |
| | | 8 | | | | 5 | | |
| 7 | | | | 3 | 4 | 2 | | 6 |
| 5 | | | 7 | | | | | 8 |
| | 2 | | 3 | | 8 | | | |
| 8 | 3 | 6 | | | 5 | 1 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 6 | 3 | 9 | 7 | 4 | 1 | 2 |
| 4 | 3 | 1 | 6 | 2 | 5 | 7 | 8 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 8 | 1 | 3 | 5 | 6 |
| 9 | 6 | 7 | 8 | 5 | 4 | 2 | 3 | 1 |
| 3 | 4 | 5 | 2 | 1 | 9 | 8 | 6 | 7 |
| 1 | 2 | 8 | 7 | 6 | 3 | 5 | 9 | 4 |
| 6 | 8 | 3 | 1 | 7 | 2 | 9 | 4 | 5 |
| 5 | 1 | 2 | 9 | 4 | 8 | 6 | 7 | 3 |
| 7 | 9 | 4 | 5 | 3 | 6 | 1 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் ‘தனி எண்’ என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான ‘நிகோலி’ இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## முத்தன் இராசேந்திரம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனி Gottingen ஐ வதிவிடமாகவும் கொண்ட முத்தன் இராசேந்திரம் கடந்த (18.04.2012) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் முத்தன் -தெய்வானை தம்பதியரின் மூத்த மகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பண்டாரி பொண்ணு- ராசம்மா அவர்களின் முறை மருமகனும், காலஞ்சென்ற செல்லப்பா கந்தையாவின் (சாமி) தம்பதியரின் ஒன்று விட்ட சகோதரனும், ராசு நாகம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரனும், மைத்துனரும், முத்தன் இராசேந்திரம் (அரச மருத்துவ மருந்து கலப்பாளர், முன்னாள் பையினல் ரேனிங்வேக்ஸ் முகாமையாளரும்), காலஞ்சென்ற வைரமுத்து தம்பதியரின் மகன் கணேஸ் (அமரர்) மற்றும் வைரமுத்து பொன்னையா (கொழும்பு), வைரமுத்து மகேஸ் வரனின் (மானிப்பாய்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதித்தகனக்கிரியைகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை நண் பகல் 12 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

முத்தன் சுந்தரமூர்த்தி (சகோதரன்) (J.P)
(M.S.Moorthy)
குடும்பத்தினர்
(முன்னாள் பையினால் ரேனிங் வேக்ஸ் உரிமையாளர்)

“முனீஸ்வரன் இல்லம்”
T.C.Lane, மானிப்பாய்.

(17299) (45.6. 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13+ தீர்வை தெரிவுக்குழுவுக்கு அரசு வெளிப்படுத்த வேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க கோருகிறார்

கொழும்பு, ஏப்.26

வடக்கு மக்களின் நெருக்கடி தொடர்பில் அரசு உத்தேசித்துள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெரிவுக்குழு ஊடாக வழங்கப்படும் தீர்விற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவளிக்கும். அடிப்படையோசனை ஒன்று இருக்குமாயின் அது பேச்சுக்கு சிறந்த அடித்தளமாக அமையும்.



தெரிவுக்குழு ஊடாக வழங்கப்படும் தீர்விற்கு ஐக்கிய தேசிய கட்சி முழு ஆதரவளிக்கும். 'அடிப் படை யோசனை ஒன்று இருக்குமாயின் அது பேச்சுக்கு சிறந்த அடித்தளமாக அமையும்.

13 பிளஸ் தொடர்பான கருத்துகளை தெளிவுபடுத்தினால் இதனை முன்கொண்டு செல்வதற்கு இலகுவாக இருக்கும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் செயற்படுத்தக் கூடிய பரிந்துரைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுமாயின் அதற்கு பூரண ஆதரவு வழங்கப்படும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்தக்கூடியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும்.

வெற்றிடமாகி இருக்கும் சபையில் உரையாற்றுவதை விடுத்து, அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்று தெளிவுபடுத்தி அந்த விடயங்களை எழுத்து மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

அதனைச் செய்யாது, வெற்று மேசையில் அமர்ந்து விருப்பு, வெறுப்புகளையும், கருத்துகளையும் கூறுங்கள் எனக் கோருவது முறையற்றது. தீர்வு காண முனைவது சிறந்தது. ஆனால் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் -என்றார். (ச)

## தந்தை செல்வா தினம் கொழும்பில் ஞாயிறன்று

### கூட்டமைப்பு எம்.பி. உட்பட 20 பேருக்கு விருது

கொழும்பு, ஏப்.26

தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வு விவேகானந்த சபை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளும் 20 பேருக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கவுள்ளோம் என்று தந்தை செல்வா நற்பணி மன்றம் தெரிவித்துள்ளது.

இவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான கலாநிதி நல்லையா குமரகுருபரன், ராஜேந்திரன், ராம் போன்ற அரசியல்வாதிகளையும், சமூக சேவையாளர்கள், அதிபர்கள், சமயப் பெரியோர் ஆகியோர் இவ்வாறு தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

தந்தை செல்வா நினைவு தின நிகழ்ச்சி குறித்து தந்தை செல்வா நற்பணி மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கண் பரிசோதனை செய்த 300 பேருக்கு கண்ணாடி வழங்கல், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பரீட்சையில் பங்குபற்றி கூடிய புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்கி கௌரவித்தல், தந்தை செல்வா விளையாட்டு கழகத்தால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கல், தந்தை செல்வா அறநெறி பாடசாலைக்கு ஒழுங்காக வந்த மாணவர்களை கௌரவித்தல்

அமரத்துவம் அடைந்த லயன் கேசவராஜா, மன்றத் தலைவர் டி.ஜி.அற்புதராஜா ஆகியோரின் ஞாபகார்த்த அரங்குகளில் இவர்கள்செய்த சேவையைநினைவு கூரல் ஆகிய நிகழ்வுகளும் இதன்போது நடைபெறும்.


அதேவேளை, அறநெறி பாடசாலை, பொன்பலவாணேசர் அறநெறிப் பாடசாலை, படுகொடுவத்த ஞான ஒளி அறநெறிப் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (ச)

## போலி வைத்தியர் பொலிஸாரிடம் சிக்கினார்

கொழும்பு, ஏப்.26

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதி ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இந்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுர்வேத வைத்தியர் என போலியான முறையில் தோன்றிய இந்திய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்ட இவரிடமிருந்து போலி ஆயுர்வேத மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. வெள்ளவத்தை பொலிஸார் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கையில் முதலாவது பனடோல் வில்லைகள் உற்பத்தி தொழிற்சாலை இரத்மலானையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொண்டு நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்கின்றார்.

## பொலிஸ் பொறுப்பதிகாரி தொடர்ந்தும் பூஸாவில்

கொழும்பு, ஏப்.26

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உதவி புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள கம்பஹா முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் குரேவை தொடர்ந்தும் பூசா முகாமில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார்.

சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டியுள்ளதாக குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை பூசா முகாமில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரபல உறுப்பினரான ரமேஸ் என்பவர் குறித்து தகவல் அறிந்திருந்தும் அதனை பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்காமல் மறைத்தார் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் குரே மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இலங்கையில் அதிகரிக்கும் தொலைபேசி பாவனை

கொழும்பு, ஏப்.26

இலங்கையில் இரண்டு கோடிக்கும் அதிகமான தொலைபேசி இணைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டின் நிறைவில் இலங்கையின் மொத்த தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை இரண்டு கோடி பத்தொன்பது லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் எண்ணிக்கை 17.3 மில்லியனாகக் காணப்பட்டது. இந்த எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் 18.3 மில்லியனால் உயர்வடைந்துள்ளது.

## பொன்சேகாவின் தண்டனை இன்றுடன் நிறைவடைகிறது

### மற்றைய வழக்குகளில் பிணை எடுக்க முயற்சி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை எஞ்சி இருக்கும் இரு வழக்குகளில் பிணையில் விடுவிக்க விரைவில்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

போர் நீதிமன்றினால் சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை இன்றுடன் நிறைவடைகின்றது. எனவே, சட்டத்தரணிகளின் ஊடாக சரத் பொன்சேகாவுக்கு பிணை பெற்றுக் கொடுக்க முயற்சி எடுக்கப்படும் என்று குறித்த கட்சி அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் ஊடாக பிணை மனுக்கள் முன்வைக்கப்பட உள்ளதாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார்.

குரோததத்தின் மூலம் குரோதத்தை தணிக்க முடியாது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அடுத்த வாரம் பிணை மனுத் தாக்கல் செய்யப்படும் என்று அவரது பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்தார். (ச)

## பொலிஸ் அதிகாரி கைது

கொழும்புத் துறைமுகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி போக்குவரத்து விதிமுறையில் தவறிழைத்த பாதுக்கை பகுதி நபர் ஒருவரை சட்டத்தின் முன் நிறுத்தாமல் அவரிடம் இருந்து பறிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரத்தை மீண்டும் வழங்க 1,500 ரூபாவை லஞ்சமாகப் பெற்றுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (ச)

## சிங்களவரைத் தூண்டி பள்ளிவாசல் உடைப்பு

### காணி அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

சிங்களவர்களை தூண்டிவிட்டு தம்புள்ளையில் பள்ளிவாசல் உடைக்கப்பட்டுள்ளது என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தம்புள்ளை ரஜமஹா விகாரை [illegible] குறித்து [illegible] கள் சிலருக்கு சட்ட ரீதியான அதிகாரம் உண்டு. பள்ளிவாசல் குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்க வேண்டும்.

எனினும் பௌத்தர்களை தூண்டி விட்டு அநாவசிய பிரச்சினை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை விரைவில் தீர்க்காவிட்டால் அழிவு ஏற்படும்.

நாட்டின் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

தம்புள்ளை பள்ளிவாசல் பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட்டு உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும். - என்றார். (ச)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு 2 மாதங்களில் அரச நியமனம்

### தொடர்பாடல் அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.26

வேலைவாய்ப்பற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் அரச துறையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று தொலைத் தொடர்புகள் மற்றும் தொடர்பாடல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கும் வேலைத் திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 23,698 பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.



6 மாத கால பயிற்சிக்கென அவர்கள் பிரதேச செயலகங்களில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பயிற்சிக்கு உட்படுத்தப்படாத பட்டதாரிகள் இன்னும் 6,000 பேர் நாடு முழுவதும் உள்ளனர். அவர்களுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் அரச நியமனம் வழங்கப்படும். இது குறித்து நிதி அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பு வெற்றியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**கதிரவேலு சுந்தரலிங்கம்**
(தேவராசா)
(முன்னாள் ஊழியர், சங்கானை ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)

மலர்வு
29★04★1946

உதிர்வு
27★03★2012

கடந்த (27.03.2012) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்ணாகம்
சுழிபுரம். (17050) (45-6-9) **குடும்பத்தினர்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 28.03.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி



அமரர்
**ஆசைப்பிள்ளை நாகரத்தினம்**

மண்ணுலகில் 25 . 05 . 1927
விண்ணுலகில் 28 . 03 . 2012

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஐ. சிவபாதசுந்தரம் (பச்சாய்) இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துக்கிருஷ்ணர் லேன்,
சுன்னாகம் **குடும்பத்தினர்**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 ★ 04 ★ 1938
மறைவு 26 ★ 04 ★ 2003

திதி : 26.04.2012

அமரர் **கனகசபை அரசரத்தினம்**
(ரிப்போட்டர்)

காலங்கள் கரைந்தாலும் வேரூன்றி
விழுதிட்ட உங்கள் நினைவுகள்
எங்கள் மனமெனும் இல்லறையில்
காலமெல்லாம் நீங்காது நிறைந்திட
வையத்துள் நாம் வாழும் காலங்களில்
நித்தமும் நினைத்தே வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மலர் தூவி பிரார்த்திக்கின்றோம்

Mrs. J. Arasaratnam
56, Tharndon Gardens,
Epsom, Surrey
KT190QW, U.K.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 26

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலங்குழாய் அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடத்தும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடர் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை ''இசை வடிவாகி நின்ற நாயகி'' எனும் தலைப்பில் தி. சிவதெட்சணாமூர்த்தி, நாளை வெள்ளிக்கிழமை ''விழிக்கே அருளுண்டு'' எனும் தலைப்பில் செ. குணபாலசிங்கம், நாளை மறுதினம் சனிக்கிழமை ''சேக்கிழார் தந்த செல்வம் பெரியபுராணம்'' எனும் தலைப்பில் ஏ. அனுசாந்தன் ஆகியோர் சொற்பொழிவை நிகழ்த்துவர். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் திருவிழா நாள்களில் ''சொல்லும் பொருளும் செல்லாப் பொருளும்'' எனும் தலைப்பில் இரா. கேதீசன், ''கன்மமும் வாழ்வும்'' எனும் தலைப்பில் பொ. சந்திரவேல், ''அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம்'' எனும் தலைப்பில் க. நித்தியதசீதரன், போற்றுவோம் தையலை' எனும் தலைப்பில் சி.சஜீவன், ஆர் பெறுவார் அச்சோவே'' எனும் தலைப்பில் கு. பாலசண்முகன் ஆகியோர் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளனர். (ம-14)

## காசநோய் தொடர்பான விழிப்புணர்வு

யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் யாழ். நகரப் பகுதிகளில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். கடற் கரை வீதியில் இயங்கி வரும் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் வீடியோ படக்காட்சிகளையும் யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் நடத்தியுள்ளனர். (வ-51)

## தென்னங்காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்திலுள்ள எருவன் பிள்ளையார் கோயில் அருகில் 19 பரப்பு 11 குளி விஸ்தீரணம் கொண்ட தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உள்ளது.

முன்பக்கம் கடை கட்ட வசதியும் உண்டு
**தொடர்பு: 077 630 1298**

## பழைய இரும்புப் பொருள்களின் ஏல விற்பனை

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலையில் உள்ள பழைய இரும்புப் பொருள்கள் 29.04.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் எடுப்பவர்கள் உடன் பணம் செலுத்தி அன்றைய தினமே அவற்றை அகற்ற வேண்டும்.

**சு. கணேசமூர்த்தி (தலைவர்)**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. வயதெல்லை இல்லை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு:- 077 3765628**

## மலிவு விற்பனை

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Sony Wega Flat TV கள் 21" - 25" - 13500/=, 29" - 17000/=, DVD - 3500/=, அம்பிளிபயர் - 12000/= 12" Box - 12,000/=, CD - ரேடியோ - கசெற் - 3000/=

தொடர்பு : 077 0440570
சோனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம்

## வாடகைக்கு

10 ½ அடி நீள பின் தட்டுடைய குறூகப் வாகனம் நாள்/மாத வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 0778447710**

## காணி விற்பனை

அல்லைப்பிட்டியில் தோட்டக் காணிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0715-360895**

## தேவை

கல்கிசையில் 3 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு 40-50 வயதுக்குட்பட்ட பெண் தேவை

தொடர்பு: 0715-360895

## தவறிவிட்டது

(23.04.2012) திங்கட்கிழமை இரவு திருகோணமலை - யாழ்ப்பாணம் நோக்கி சென்ற பஸ்சில் மகிலன் என்பவரின் அடையாளஅட்டையும் (922412480V) சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வேறு ஆவணங்களும் பேர்ஸ் உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் சேர்க்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
077 8023666, 021 3215878

C.C.T.M.S வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

## மணி விழா வாழ்த்து



60 ஆவது அகவை காணும்
(23.04.2012)
**உயர்திரு. மயில்வாகனம் நாகேஸ்வரன்**
( B.Com - H.N.D.A - A.A.T)
(உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர்)

மீசாலை மண் பெற்ற மேலான வித்தகனே பாசத்தின்
சிகரமே பார்போற்றும் உத்தமனே உதவிடும் கரங்களால்
உயர்ந்தவன் நீ சிரிப்பின் சிகரமே சிறப்புடனே
வாழ்ந்திருப்பாய் பல்லாண்டு

சேவைகள் தொடர வாழ்த்தும்
திரு. க. கமலேஸ்வரன் (பிரதம கணக்காளர் - கச்சேரி, மன்னார்)
திரு. சு. கணேசதாசன் (அதிபர் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், மற்றும் நண்பர்கள்

## அச்சுக் கலை பயிற்சி நெறி

திருகோணமலை சித்தானந்தா அக்கடமியின் இம் மாதத்திற்கான அச்சுக்கலைப் பயிற்சிநெறி யாழ்ப்பாணம் YMCA மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. இங்கு துணிகள், சாரி, சுரிதார், ரீ-சேர்ட், கண்ணாடி, பலகை என்பவற்றில் -30 விதமான முறைகளில் பலவித டிசைன்கள் மற்றும் வர்ணங்களில் பிறின்ரிங் செய்வதற்குப் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சியினைப் பயில்வதன் மூலம் தங்களது சொந்த பிறின்ரிங் தேவைகளை நிறைவேற்றுவதுடன் குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானத்தை வீட்டிலிருந்தபடியே ஈட்ட முடியும். பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

கட்டணம்: ரூபா. 1,000.00 காலம்: 28, 29 ஏப்ரல் (சனி, ஞாயிறு).

முற்பதிவு மற்றும் தொடர்புகளுக்கு:
**077-5132255, 071-9062847**

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் முன்னாள் பொருளாளர்
லயன்
**வைரமுத்து சுந்தரமூர்த்தி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடை கின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலகம்,
புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.

சாவகச்சேரி
லயன்ஸ் கழகம்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தாமோதரம்பிள்ளை யோகநாதன்**



திதி: அபரபக்க பஞ்சமி
(26.04.2012)

தோற்றம்
02★04★1937

மறைவு
14 ★04★2009

ஆண்டுகள் மூன்று ஆகிடினும்
ஆறவில்லை எம்துயரம் - அப்பா
நினைக்காத நாளில்லை
உங்கள் மாறாத அன்புதனை
தங்கள் ஆத்ம சாந்திவேண்டி எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (17344)(45.6.9)

மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் குளிரூட்டி வசதி

தென்மராட்சி, ஏப்.26

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு இரண்டு குளிரூட்டிகள் பொருத்தப் பட்டுள்ளன.

மேற்படி பிரிவில் ஏற்கனவே பொருத் தப்பட்டிருந்த குளிரூட்டி கள் பழுதடைந்ததையடுத்து புதிய குளிரூட்டிகள் பொருத்தப்பட்டுள் ளன. (வ-9)

# மஹிந்த அரசைத் தோற்கடிப்பதற்கு புலம்பெயர் தமிழரே ஒன்று திரள்க

## கனேடிய தமிழ் அரசியல் அவதானிகள் அறைகூவல்

**புலம்பெயர்ந்த நாடு களில் வாழும் ஈழத் தமிழர்கள் பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டு பல பிரிவுகளாக நிற்கின்றனர்.**

பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண் டிருந் தாலும் மஹிந் தவின் அரசைத் தோற்கடிக்க புலம் பெயர் தமிழ் மக்கள் ஒன்று பட வேண்டும் கனேடிய தமிழர் அரசியல் அவதானி கள் குழு மீண்டும் வேண்டு கோள் விடுத்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடு களில் வாழும் ஈழத் தமிழர் கள் பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டு பல பிரிவுகளாக நிற்கின் றனர். இந்தநிலை மாறா விட்டால் இலங்கையின் இனவாத அரசு இன்னும் அக்கிரமான செயல்களில் இறங்கி அங்கு நமது மக்களை முற்றாக அழித்து விடும்.

வேறுபட்ட கருத்துக் களை நாம் கொண்டிருந் தாலும் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் இயக் கத்துக்கு எமது மக்கள் வழங்கிய ஆதரவைப்போன்று எமது இந்த கோரிக்கைக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆதரவை வழங்கி அதற் குரிய வேலைத் திட்டங் களில் இணைந்து பணி யாற்ற வேண்டும்

இவ்வாறு கடந்த வாரம் கூடிய கனேடிய தமிழர் அரசியல் அவ தானி கள் குழுவின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு எதிர் வரும் நாள்களில் பல வேலைத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடை முறைப்படுத்துவது தொடர் பாக ஆராய்வது என்றும் தமது இந்த குழுவிற்கு உறுதியான ஒரு ஏற்ற பெய ரைச் சூட்டி அதன் மூலம் மக்கள் மத்தியில் வெளிப் படையாக பணியாற்று வது என்றும் தீர்மானித் துள்ளது. (வ)

## சமய சந்நிதிகளில்

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந் தாமணி விநாயகர் ஆலயத்தின் வருஜடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திரு விழா வும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.26

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளை யார் கோயிலின் வருடாந்த பெருந் திருவிழா இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் இத் திருவிழாவில் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் சனிக்கிழமை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

கெருடயம்பதி கோட்டச் சீமா முத்து மாரி யம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங் காரத் திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 2 ஆம் திகதி சங்காபிடேகமும் எதிர்வரும் 3 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-253)

# தெய்வீகத்தைப் புரிந்து கொள்வதிலுள்ள இடர்பாடு

ஒருமுறை விவேகானந்தர், இராமகிருஸ்ண பரமஹம்ச ரிடம் கேட்டார். 'நீங்கள் கடவுளைக் கண்டீர்களா?'' அதற்கு 'இராமகிருஸ்ணர் கடவுளைக் கண்டு கொண்டிருக்கிறேன். இந்தக் கணத்தில் கூட' என்றார்.

விவேகானந்தர் கேட்டார் ''எந்த உருவில்?'' அதற்கு இராமகிருஸ்ணர் ''உன்னுடைய இதே உருவில்'' என்று சொல்லி தனது சீடர்களைக்காட்டி இந்த பரமானந்தர் அந்த நித்தியானந்தர் எல்லோரும் கடவுளின் உருவங்கள் தான். நான் உங்கள் எல்லோரின் கடவுளின் உருவங்கள் தான். நான் உங்கள் எல்லோரின் உருவிலும் கடவுளைக் காண் கிறேன் என்றார். அந்த வார்த்தைகளின் தாற்பரியத்தை கிர கித்துக் கொள்ள முடியாத விவேகானந்தர் திரும்பவும் கேட் டார் சுவாமி நாங்கள் இறந்து போகிறவர்கள். நீங்கள் எப்படி எங்களைத் தெய்வீகம் என்று கருதிக் கொள்ளலாம்? அதற்கு இராமகிருஷ்ணர் சொன்னார். 'அடே முட்டாள் மனிதனே நீ ஒவ்வொருவரையும் உடம்பை மையமாகக் கொண்டு அதன் அடிப்படையில் பார்க்கிறாய். ஆனால் நான் ஒவ்வொருவரையும் ஆத்மாவை மையமாகக் கொண்டு பார்க்கிறேன். ஆகையால் எனக்கு எல்லாமே தெய்வீகமாகத் தெரிகிறது என்றார்.

நன்றி:
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

# வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட இலங்கையர்களுக்கு ஓய்வூதியம்

வெளிநாடு சென்றுள்ள, ஓய்வூதியம் பெறாத அனைத்து இலங்கையர்களுக்கும் ஓய் வூதியத்தைப் பெற்றுக் கொடுக்க சமூக காப்புறுதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து சமூக காப் புறுதிச் சபையின் பதில் தலைவர் மொன்டெகு சரத் சந்திர தெரிவித்ததாவது:-

வெளிநாடு சென்ற இலங் கையர்களுக்கான இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த வென தூதரகம், வெளி நாட்டு வேலை வாய்ப்புப் பிரதிநிதி களின் சங்கம், சேவை புரி வோர் சங்கம் உள்ளிட் டவை களின் உதவிகள் பெறப்பட வுள்ளன.

குவைத் மற்றும் சிங்கப் பூர் ஆகிய நாடுகளுக்கான வேலைத் திட்டம் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் வெளி நாடு சென்றுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் இந் தத்திட்டம் செயற்படுத்தப்பட வுள்ளது-என்றார் அவர். (வ)


# வீடு வாடகைக்கு



நல்லூர் கோயிலுக்கு அருகில் சங்கிலியன் வீதியில், சகல வசதி களும் கொண்ட 7 அறைகள், வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய அழகிய மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:
ந. சிவநேசன் (0014-164388509)
44/18, சங்கிலியன் வீதி, நல்லூர்.
021 222 9055, 075 6710381,
077 8543191, 077 6577499.

# O/L தகைமையுடன் பட்டதாரி ஆகும் வாய்ப்பினை வழங்கும்

# காமராசர் பல்கலைக்கழகம்
(மதுரை)



* தகைமை: O/Lஇல் 5 பாடம் சித்தி
* முதல் இரண்டு வருடங்களுக்கு அடிப்படை நிலைக் (FOUNDATION COURSE) கல்வியை தொடர வேண்டும்.
* முதல் வருடத்துக்கான PLUS I பரீட்சையானது மார்கழி மாதம் நடைபெறும்.
* இரண்டாம் வருடத்துக்கான PLUS II பரீட்சையானது அடுத்த வருட மார்கழியில் நடைபெறும்.
* இவற்றுக்குரிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
* இரண்டு வருட கற்கைநெறியை நிறைவு செய்தபின் மூன்று வருட கற்கை நெறியாக B.A, B.Sc, B.Com ஆகிய பட்டநெறிகளை நிறைவு செய்ய முடியும்.
* இக் கற்கைநெறிகளானவை இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
* A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களுக்கு அடிப்படைநிலை கல்வி (FOUNDATION COURSE) தேவையில்லை.
* BA இல் தமிழ், ஆங்கிலம், அரசியல், வரலாறு, சமூகவிஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்
* B.Com, B.Sc ஆகிய பட்டநெறிகளுக்கு பதிவினை மேற்கொள்ள முடியும்

இவற்றுக்குரிய விரிவுரைகள்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
* பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம்.
தொலைபேசி இல. 021 222 81 48.


புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் காலப் பிரிவு

முகம் தெரியாதவர்களாய்
கல்லூரியிலே ஒன்றாய் நாம்
எந்த வேறுபாடுமின்றி - பல
வருடங்களாய் நல்ல நண்பர்களாய்
துன்பம் மறந்து இன்பமாய்
சின்ன சின்ன சண்டைகள் செய்து
நம்மிடையே பல குறும்புகள் செய்து
ஒன்றாய் இருந்த நம்மை
கல்லூரிக் கால இறுதி
கை நீட்டி அழைக்கின்ற வேளை
பிரியப் போகின்றோம் என்னும்போது
ஒவ்வொரு நட்பின் இதயத்திலும்
ஒரு கணம் துடிக்க
மறுக்கிறது இதயம்
பிரிந்து சென்றாலும் ஒவ்வொரு
நட்பின் நினைவுகளுடனும்

*க.சுகந்தினி*
*யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*





## பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்கான காரணம் என்ன?



போரின் பின்னர் எம்மிடையே எஞ்சியிருப்பது கல்வி ஒன்றுதான். இந்தக் காலகட்டத்தில் அது ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் சமமான முறையிலேயே பாடசாலையில் கல்வியானது பயிற்றப்படுகிறது. ஆனாலும் ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சை பெறுபேறுகளின் படி பெண்களின் கல்வித் தரம் முன்னேறிக் காணப்பட ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

ஆண்கள் சிறுவயதில் இருந்தே மது அருந்துதல், புகைப்பிடித்தல், போதைப் பொருள் பாவனை, தொலைபேசிப் பாவனை, கணினியின் ஊடு இணையப் பாவனை போன்றவற்றை மேற்கொள்கின்றது மட்டுமல்லாமல் இவர்கள் விளையாட்டுத்துறைகளிலே ஆர்வம் கூடியவர்களாக இருக்கின்றனர். இதனால் இவர்கள் கல்வியைக் கற்கும் வீதம் குறைவடைகின்றது.

ஆனால் பெண்களோ அவ்வாறில்லை. இவர்கள் கல்வியையே உயிர்மூச்சாகக் கொண்டு தமது இலக்கை இலகுவாக அடைகின்றனர். ஆனால் ஆண்களால் அது முடிவதில்லை. இதற்குக் காரணம் மேலே குறிப்பிட்ட சிலவாகும். ஆண்களுக்குப் பொறுமை என்பது மிகக்குறைவாகவே காணப்படுகிறது.


ஆண், பெண் ஆகிய இருபாலாரும் கல்வி தவிர்ந்த ஏனைய சிந்தனைகளைத் தவிர்த்து அதனை நன்கு கற்றுத் தமக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நாட்டுக்கும் நற்பெயரை பெற்றுத்தர வேண்டும் என்று செயற்பட வேண்டும். கல்வியை நன்கு கற்காதவன் ஒருமுறை கற்று நன்றாய் வாழ்ந்தாலும் கல்வியை இளமையிலே கற்றுத் தேர்ந்தவர்கள் ஏற்கமாட்டார்கள் என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க நாங்கள் கல்வியில் முன்னேறிவிட்டோம் என்று பெண்களும் நாங்கள் தாழ்ந்துவிட்டோம் என்று ஆண்களும் கருதாது கல்வியை விரும்பிக் கற்று நாட்டில் நற்பிரஜையாகத் திகழ வேண்டும்.

விமர்சனப் பகுதி

சாரங்கா ரவிக்குமார், தரம்-11
யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



## மனிதனைத் தேடுகின்றன...



கனவுகள் தொடர்ந்து
கறையான்கள்
நினைவுகள் தொடர்ந்து
நிராசைகள் மௌனங்கள்
தாகங்கள் தொடர்ந்து விம்மல்கள்
விருப்புக்கள் தொடர்ந்து
விரக்திகள்
வாழ்க்கைச் செடியிலே
விதியின் பூக்கள் மீண்டும்
பூந்தளிர்க் கனவுகள்
புதுப்புது நினைவுகள்
விதியின் ஓரத்திலும்
விழாக்கால ராகம் பாடும்
நெஞ்சின் அலைகள்
ஓய்வதில்லை!
மனம் விசித்திரமானதுதான்
விலக விலகத்தான்
ஆசைப்படுகிறது.
மரணத்தின் சுவாசத்திலும்
ஏனோ மயங்குகிறது
எதையோ கேட்கிறது
எதற்காகவோ ஆசைப்படுகிறது
இறுதி யாத்திரையின்
முடிவான ஆசையிலும்
அந்தக் கண்கள்
கனவைச் சுமக்கின்றனவே
ஏன் தெரியுமா? அவை
மனிதனைத் தேடுகின்றன.

*பி.சித்திரா, சதுலை தெற்கு.*

## எச்சங்கள்

இருள் சூழ்ந்த தேசத்தில்
இன்னும்தான்
காணவில்லை
விடியலில் பிரதிபலிப்பை...!

புயல் சூழ்ந்த தென்றலாய்
நானும் தான்
தேடவில்லை
பூக்களின் புல்லரிப்பை

நீண்டு போன
பயணத்தின் எச்சங்களை
மாண்டுபோன
மனிதத்தின் எச்சங்களை
தேடித்தான்
போக வேண்டி இருக்கிறது
தொலைதூரமாய்...!

உறைந்து போன
அரிய தேடலை
உணர்ச்சி ததும்பும்
எழுச்சிப் பாடலை
உரைக்காமலே
அலைக் கழிக்கிறது காலம்

*தி.வைதேகி*



### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர் :-........................................

முகவரி :- ........................................

........................................

........................ திகதி ........................ கையொப்பம்

### விமர்சனம்

*அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன? உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.*

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்



வீடு கட்ட அத்திபாரம் பலமாக அமைய வேண்டியது போல மாணவர்களது வளர்ச்சியும் விருத்தியும் சரியாக அமைய வழிகாட்டப்பட வேண்டும். பிள்ளைகளின் வாழ்வில் பெற்றோர் முக்கிய பங்கு வகித்தாலும் மனிதத் தொடர்புகள் மூலம் சமூகமயமாதல் அனுபவம் ஏற்பட பாடசாலை சூழலே வழி வகுக்கின்றது. பிள்ளைகளின் உளவிருத்தி, உடல் விருத்தியில் பாடசாலையின் உயிரியல் பௌதீக சூழல்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றன.

உடல் சார்ந்த மன எழுச்சி சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த, அறிக்கை சார்ந்த, சமூகம் சார்ந்த விருத்திகளில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக வழி காட்டுபவை பாடசாலைகளே.

ஆசிரியர்கள் தமது மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப அன்பு, அரவணைப்புடன் ஒத்திசைவாக நடந்து கொள்வதன் மூலம் ஆற்றல்களையும் நற்பண்புகளையும் வெளிப்படுத்தத் தூண்ட வேண்டும்.

வழிகாட்டல் ஆசிரியர் பிள்ளைகள் அனைவரிடமும் நல்ல தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் அவரது சேவை எந்தவொரு பிள்ளைகளுக்கும் பயன் தரக் கூடும் என்ற அபிப்பிராயத்தைப் பிள்ளைகளிடம் உருவாக்க வேண்டும்.

எதிர்கால வாழ்க்கைக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் சக்தியை ஏற்படுத்துதல் என்ற விளக்கத்தைப் பெறும் வகையில் ஆசிரியர் செயற்பாடுகள் அமையும்போது மாணவர்கள் அதில் விருப்புடன் இணைவார்கள்.

*சி.அகல்யா, யா/ இந்து மகளிர் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Government Recognized + 2 Yrs
HND in Pharmacy
இலங்கை அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட அரச வேலை வாய்ப்பையும் தனியார் வேலை வாய்ப்பு,மேற்படிப்பையும் தரும் பகுதி நேரக்கற்கைநெறி
Entry Req : A/L Bio/Maths with 3 Passes
இரண்டு வருடகாலப்பயிற்சி நெறி.
பயிற்சிக் கட்டணம் : 150,000/=
Call : 0777302882
Find more www.kugroup.info
K.U Education,No 75,Temple Road,Jaffna

## மக்கள் வங்கி அறிவித்தல்

*மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **30.04.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.06.16** (சனிக்கிழமை) காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கேசன்துறை | மானிப்பாய் |
| யாழ். பிரதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| யாழ். கன்னாதிட்டி | கல்வியங்காடு |
| பருத்தித்துறை | இணுவில் |
| | புலோலி |

*அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் வங்கிக்கு உரிமை உள்ளது.*

*பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*
*2012.04.26*

## மரண அறிவித்தல்கள்

### Lion வைரமுத்து சுந்தரமூர்த்தி

(முன்னாள் பொருளாளர், சாவகச்சேரி Lions Club, Rtd forman Vayangoda Textile Corporation)



டச்சு வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.31,5/2 வென்டவெற் பிளேஸ், தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து சுந்தரமூர்த்தி 23.04.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சிதம்பரம்மா தம்பதியரின் அன்பு மகனும், சித்திராதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், நிமலன் (லண்டன்), சிவபாலன் (கனடா), கமலினி (சங்கானை), Dr. ஜெயந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிசாந்தி, கவிதா, ஈசன் (ஈசன் ஜுவல்லரி, சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனும், அஸ்வின், ஆரபி, ஆரூசன், பிரவீனா, கிசானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சண்முகதாசன் மற்றும் மகேஸ்வரிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை பி.ப. 1 மணியளவில் கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்லடி ஒழுங்கை,**
**சாவகச்சேரி.** (6,9,10)

**தகவல்:**
**சு. ஜெயந்தன் (மகன்),**
**நா.ஈசன் (மருமகன்), சாவகச்சேரி**

### வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை

(முன்னாள் பொருளாளர், ஏழாலை சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான தேர்த்திருப்பணிச் சபை)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், விழிசிட்டி ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை நேற்று (25.04. 2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-மீனாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-இரத்தினம் தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் (கொழும்பு), மகேஸ்வரன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகுலம், நளாயினி ஆகியோரின் மாமனாரும், மிதுன், கிசான், டிசான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விழிசிட்டி, ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.** (9)

## பெருமாள் கோயிலடியில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடி மற்றும் ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி லேன் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு வீடுகளிலிருந்து நேற்று அதிகாலை பணம், நகைகள், சைக்கிள் என்பன திருடப்பட்டுள்ளன.

இவை தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2 வீடுகளிலும் வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளைதிருட்டுக்கள் ஒரே நாளில் இடம்பெற்றுள்ளமை அந்தப் பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிறாம்பியடி லேனிலுள்ள வீட்டின் பழைய கதவு ஒன்றை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த சங்கிலி, கைத்தொலைபேசி மற்றும் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

பெருமாள் கோயிலடியில் உள்ள வீடு ஒன்றினுள் அங்கிருந்தவர்கள் உறக்கத்திலிருந்த நேரம் யன்னல் பிரித்து உள் நுழைந்தவர்கள் அங்கிருந்த 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசி என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவை தவிர கந்தர்மடம் அரசடி வீதியில் திங்கள் இரவு வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து முன்பக்கக் கதவு உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 22 பவுண் நகைகள், பணம், இலத்திரனியல் பொருள்கள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் அலுமாரிகளை உடைத்தும் தேடுதல் நடத்தியுள்ளனர். எனினும் இந்த மூன்று சம்பவங்கள் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இது குறித்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் தரப்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-4)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
25 ★ 07 ★ 1961

விண்ணில்
09 ★ 05 ★ 2008

அமரர்
### சின்னத்துரை பக்தகுணசீலன்
(விளாக்)
( உரிமையாளர் - பூங்கனிச்சோலை)

**விழுதுவிட்ட விருட்சமொன்று**
**வீழ்த்தப்பட்டு நான்காண்டு**
**வீணர்கள் வலையில் சிக்கி**
**விழ்ந்தனையோ எம் தெய்வமே**
**பூங்கனி வேந்தே உன் புன்சிரிப்பு**
**பூங்கனி வாசலில் மறைந்ததேன்**
**விண் ஏகிய தெய்வமே உனை**
**வணங்குகின்றோம் வாழ்நாள்வரை**

**பூங்கனிச்சோலை,**
**முடமாவடி.**

**மனைவி, பிள்ளைகள்**

## விண்ணக வாழ்வின் 3 ஆம் ஆண்டு நினைவில்

**மண்மகிழ**
**04.05.1969**

**கண் நெகிழ**
**28.04.2009**

அமரர்
### புஸ்பராசா உதயகுமார்
**(இந்திரன்)**



**திதி :**
**சித்திரை வளர் சதுர்த்தி**

நேற்று (25.04.2012) புதன்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆண்டுகள் மூன்று ஆயினவே - ஆயினும்
ஆறாத்துயர் இன்னும் ஓயவில்லை
நித்தம் புலம்புகின்றோம் - உன்
திருமுகத்தைக் காணாமல்
ஈசன் அடி சேர்த்து ஈடேறிவாழப்பிரார்த்திக்கும்

**தர்மபுரம் கிழக்கு,**
**தர்மபுரம், கிளிநொச்சி**

**பெற்றோர்,**
**மனைவி, பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Ford Lacer
5 Forweed. Eloy Wheel 12 - 1 x x x
Blue Colour Car விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 7144 130,
(17025) (45.6.9) 077 2683 602



## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971 ஆம் ஆண்டு அச்சுவினி 4ஆம் பாதம் 9இல் செவ்வாய் உயரம் 5 அடி 2'' MSC பட்டதாரி லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் லண்டனில் இருந்து வந்துள்ளார்) தொடர்பு : 0755495436.


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக
கணக்காளர் **ஆறுமுகம் கிரிதரன்**
அவர்களின் அன்புத் தந்தை

### முத்துக்குமாரு ஆறுமுகம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
(17457) (6,14,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச மின் பொறியியலாளர்
ச. ஞானகணேசன் அவர்களின்
அன்புத் தாய்


### திருமதி சிரோன்மணி சங்கரப்பிள்ளை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
07 ★ 03 ★ 1934



மறைவு
27 ★ 03 ★ 2012

அமரர்

### கார்த்திகேசு தேவேந்திரன்

(முன்னாள் பிரதம எழுதுவினைஞர்)

புன்சிரிப்பு தவழ்கின்ற பொன்முகம் தானெங்கே?
இன்சொல்லால் எமை வளர்த்த இனிய குரல் எங்கே?
துன்பமெமை அணுகாது துணையிருந்த கோயிலெங்கே?
அன்புடன் சுற்றத்தை அணைத்த குணக்குன்று எங்கே?

கடந்த (27.03.2012) அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்து எம்மை ஆற்றுப்படுத்தியோர்க்கும் பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் பல்வேறு வகைகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (26.04.2012) வியாழக்கிழமை அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

ஆலடி , உடுவில் (17026) (6,14,10)

## வாகனம் மோதி மாணவி படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 26

கூலர் வாகனம் மோதியதனால் பாடசாலை மாணவியின் இரண்டு கால்களும் முறிந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி அம்பனில் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவத்தில் அம்பன் கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த மனோகரன் மதீசா (வயது-11) என்ற மாணவியே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவர் சிவப்பிரகாசம் மகா வித்தியாலய மாணவியாவார்.

தனது அண்ணனுடன் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்தில் சிக்கிக் கொண்ட இவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காகப் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கூலர் வாகனத்தையும், சைக்கிளையும் பருத்தித்துறைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (த-4)

## பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 26

அனுமதிப்பத்திரமின்றி 9.6 கிராம் கஞ்சா போதைப் பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் நான்கு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை நபர், யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த கோபாலசாமி மகேந்திரராஜா (வயது-38) என்பவரே பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கக்கோரி அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

அதனைப் பரிசீலித்த நீதிபதி சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கினார்.

25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் செல்ல அனுமதி வழங்கினார்.

இது தவிர ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையிலும் சந்தேக நபர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (த-4)

## விதிகளை மீறியவர்களுக்கு அபராதம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 14 பேருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று 30 ஆயிரத்து 250 ரூபா அபராதம் விதித்தது.

இது தவிர பொது இடங்களில் குப்பை கொட்டிய மூவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் இவ்வாறு செயற்பட்டவர்களை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தினர்.

அனைவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டது. (த-4)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடுகள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் தேவைகளுக்காக சகல வசதிகளுடன் கூடிய வீடுகள் வாடகைக்கு தேவை.

1. விவசாய பீடத்தின் பாவனைக்கு (விவசாய பீடம், ஆடியபாதம் வீதி சுற்றாடலில்)
2. மாணவர்களின் விடுதியாக பயன்படுத்துவதற்கு (பல்கலைக்கழக சுற்றாடலில்)

வீட்டை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிர்வாகம், அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 11.05.2012ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விவசாய பீடத்துக்கான வீடு எனின் ''விவசாய பீடத்துக்கான வீடு'' எனவும், மாணவர்களின் விடுதிக்கான வீடு எனின் ''மாணவர்களின் விடுதிக்கான வீடு'' எனவும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
ஏல விற்பனை

## விஞ்ஞான, கலை மற்றும் மருத்துவ பீடம் ஆகியவற்றில் உள்ள பாவிக்கப்பட்ட பொருள்கள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருள்கள் 30.04.2012 திங்கட்கிழமை அன்று பின்வரும் நேரங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| விஞ்ஞான பீடம் | - முற்பகல் 9.30 - 10.30 |
| கலைப் பீடம் | - முற்பகல் 11.00 - 12.00 |
| மருத்துவ பீடம் | - பிற்பகல் 01.30 - 02.30 |

1. மின்சார உபகரணங்கள் (குளிரூட்டிகள், மின் விசிறிகள், மின்னடுப்பு முதலியன)
2. கணினியும் கணினிசார் உபகரணங்களும்
3. ஆய்வுகூட உபகரணங்கள்
4. தளபாடங்கள் (மேசைகள், கதிரைகள் முதலியன)
5. அலுவலக உபகரணங்கள்

மேற்படி பொருள்களை 27.04.2012 வெள்ளிக்கிழமை அன்று பின்வரும் நேரங்களில் அவ்வப் பீடங்களில் பார்வையிடலாம்.

| | |
|---|---|
| விஞ்ஞான பீடம் | - முற்பகல் 9.00 - 10.00 |
| கலைப் பீடம் | - முற்பகல் 10.00 - 11.00 |
| மருத்துவ பீடம் | - முற்பகல் 11.00 - 12.00 |

மேற்படி பொருள்கள் அவ்வத் திணைக்கள ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் வகைப்படுத்தப்பட்டு மொத்தமாகவே விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி பொருள்களை 30.04.2012 அன்று மாலை 4.30 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தல் வேண்டும்.

பதிவாளர்

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு ஆறுமுகம்



அளவெட்டி, செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும், கட்டுடை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு ஆறுமுகம் நேற்று (25.04. 2012) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- பகவதி தம்பதியினரின் அன்பு மருமகனும், சற்குணதேவியின் அன்புக் கணவரும், முகுந்தன் (ஜேர்மனி), கிரிதரன் (கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), கோகுலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினி (ஜேர்மனி), தேன்மொழி (ஆசிரியை, செங்குந்தா இந்துக்கல்லூரி), அமிர் தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், விதுஷன், அபிராம், அரோஷன், மதுஷன், அனுசாகர், வேணுஜன், சதுர்சன், சைந்தவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2012) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டுடை,
மானிப்பாய். (17456) (6,14,10)

தகவல்:
ஆ.கிரிதரன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு சுதந்திரமடைந்திருந்த காலத்தில் கிழக்கில் பெரும்பான்மையினம் இல்லை

## இன்று முற்றாக மாறிவிட்டது என்கிறார் சம்பந்தன் எம்.பி.



திருகோணமலை, ஏப்.26

தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் தந்தை செல்வாவைப் போல் வேறு எவரையும் தமிழ் மக்கள் தலைவராகக் கருதவில்லை; 35 வருடங்கள் கடந்தபோதும் தந்தை செல்வாவின் வழிகாட்டலை, கொள்கைகளைத்தான் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு உள்ளார்கள்; நாடு சுதந்திரம் அடைந்தபோது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் கூட கிழக்கில் தெரிவாகவில்லை; ஆனால் இன்று 5 பேர் உள்ளார்கள்; கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் இதற்குக் காரணமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத்தலைவர் தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை நினைவுக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

60 வருடகாலமாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. விடுதலைப் புலிகளைக் கூறி தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையில் இருந்து அரசு நழுவமுடியாது. நியாயமான தீர்வைத் தர முன்வர வேண்டும்.


சிங்களத் தலைவர்கள் தந்தை செல்வாவை மதித்தார்கள். முஸ்லிம் மக்களும் அவரை மதித்தார்கள். தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர். அவருடைய கொள்கைகள் தெளிவாக இருந்தன. சுயமரியாதையுடன் தாங்கள் வாழ்ந்த சரித்திர இடங்களில் பாதுகாப்புடன் அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களைப் பாதுகாக்கக் கூடிய சுயநிர்ணய உரிமையையும் தமிழ் மக்கள் பெற வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார்.

சமஷ்டி ஆட்சியைத் தந்தை செல்வா முதலில் முன்வைக்கவில்லை. கண்டிய சிங்களவர்கள்தான் 1928, 1930 ஆம் ஆண்டுகளில் இந்த முறையை முன்வைத்தார்கள். சுதந்திர இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழ் ஏனைய மக்கள் சுதந்திரமாக வாழ முடியாது என்று சமஷ்டி ஆட்சி மூலம் தீர்வு காணலாம் என்றார்கள். அதன் அடிப்படையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இது போன்று பல ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால்தான் ஆயுதப் போராட்டம் உருவாகியது. தந்தை செல்வா ஆயுதப் போராட்டத்தை ஒருபோதும் விரும்பவில்லை. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. சமாதானமாக தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சந்தர்ப்பம் கிடைத்து இருக்கிறது. ஆனால் இலங்கை அரசு இதுவரை அதற்கு முன்வரவில்லை.

ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பல நாடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கின. அந்த நாடுகளுக்கு இலங்கை அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததும் தேசியப் பிரச்சினை தீர்ந்தது என்று அரசு நினைத்தது. அதனால்தான் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை உருவானது. தற்போது தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்யலாம், எவருக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவை இல்லை என அரசு இருக்க முடியாது. இன்று தமிழர் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் ஒப்பந்தத்தை நிறைவேற்றி இருந்தால் சர்வதேசத்திடம் சென்றிருக்க வேண்டிய தேவை இன்று வந்திருக்காது- என்றார். (ச-40)



மட்டக்களப்பில் சித்திரைப் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர். (31)

## பிள்ளையார் ஆலயத்தை அகற்றுவது நியாயமா?

### முன்னாள் எம்.பி. துரைரெட்ணசிங்கம் கேள்வி

திருகோணமலை,ஏப்.26

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பௌத்த விகாரைகளை அமைத்துவரும் அரசு, திருகோணமலையில் சுமார் 60 வருட பழைமை வாய்ந்த பிள்ளையார் கோவிலை அகற்றச் சொல்வது எந்த வகையில் நியாயம்? இது அநியாயமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலைப் பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தை அகற்றுமாறு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆண்டவனுக்குக் கூட இன்று சுதந்திர மில்லை; இருக்க இடமுமில்லை. இவ்வளவுக்கு இந்த அரசின் அராஜகச் செயல்கள் வந்துள்ளன.

தமிழர் தலைநகரான திருகோணமலையில் சுமார் 60 வருட கால பழைமை வாய்ந்த பிள்ளையார் ஆலயத்தை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தியைக் காரணங்காட்டி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை அநீதியான செயலாகும்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் நலன் கருதியே இந்த ஆலயம் அன்று நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இவ்வாலயத்தை அரசு அகற்றச் சொன்னதையடுத்து தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். எக்காரணங்கொண்டும் இக்கோயிலை அகற்ற நாம் இடமளிக்கமாட்டோம்.

நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கையை அரசு உடன் கைவிடவேண்டும் - என்றார்.

## குடிதண்ணீர் விநியோகத் திட்டம்

அம்பாறை, ஏப்.26

சாகாமம் பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கான ஆரம்ப வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், அரச சார்பற்ற நிறுவனங்களான சுவாட் மற்றும் ஒக்ஸ்பாம் ஆகியவை மேற்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, திருக்கோவில் பிரதேச செயலாளர் கலாநிதி எம்.கோபாலரட்ணம், திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் வி.புவிதராஜன், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஐ.எல்.ஹைதரலி, சுவாட் அமைப்பின் பிரதிநிதி ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பட்டதாரி ஆசிரியருக்கு கிழக்கில் நியமனம்

### 327 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது

திருகோணமலை,ஏப்.26

கிழக்கு மாகாண பட்டதாரி மற்றும் டிப்ளோமா ஆசிரியர்களுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 327 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதில் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் 256 பேரும் சிங்கள மொழி மூலமான ஆசிரியர்கள் 71 பேருக்கும் வழங்கப்பட்டது.

தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களில் கணித பாடத்துக்கு 97 ஆசிரியர்களுக்கும், விஞ்ஞான பாடத்துக்கு 40 ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆங்கிலப் பாடத்துக்கு 119 ஆசியர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது.

இந்த ஆசிரியர்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களிலே அதிகளவான ஆசிரியர் பற்றாக் குறைகளை எதிர்கொள்கின்ற பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் பதில் செயலாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல வீரதிசாநாயக்க, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மாகாண அமைச்சர்களான எம்.ஸ்.உதுமா லெவ்வே, எம் எஸ். சுபைர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கல்முனையில் மே தினக் கூட்டம்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் அதன் இணை நிறுவனங்களுடன் இணைந்து நடத்தும் 18 ஆவது மே தின ஊர்வலமும், பொதுக் கூட்டமும் கல்முனையில் நடைபெறவுள்ளது.

கல்முனை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா, பிரபல சமூக சேவையாளர் பேராசிரியர் எம்.இராஜேஸ்வரன், சேனைக்குடியிருப்பு அரசினர் வைத்திய சாலை வைத்திய அதிகாரி திருமதி புஸ்பலதா லோகநாதன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜனாபா முபீபா உஸ்மான் ஆகியோர் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு [illegible] செயலாளர் அறிவித்துள்ளார். (ச- 30)

### பள்ளிவாசல் மீதான தாக்குதல்;

## மதத்துக்கு விடுக்கப்பட்ட சவால்

### திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஏப்.26

தம்புள்ளவில் பள்ளிவாசல் மீதான தாக்குதல் மதச்சகிப்புத் தன்மைக்கு விடுக்கப்பட்ட சவால் என்று திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் சி.நந்தகுமார் குற்றம் சாட்டியுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாமியர்களின் விசேட நாளான வெள்ளிக் கிழமை அன்று முறையாக ஜும்மாத் தொழுகையில் ஈடுபடும் அவர்களின் மார்க்க நடைமுறையைக் கூட கடைப்பிடிக்க விடாமல் பெரும்பான்மை இனத்தவர்களால் பள்ளிவாசல் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையான சிங்கள அரசுகளின் பாரபட்சமான கொள்கைகளால், தமிழ் மக்களைப் போல் பாதிக்கப்பட்டு வந்தாலும், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் அதிகாரத்துக்குவரும் அரசுகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த மக்களின் வணக்கத்தலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கவலைக்குரியது. தீமை எங்கு, எப்போது தோன்றினாலும் அதனைக் கண்டிப்பது பாதிக்கப்பட்டவர்களின் மத நல்லிணக்கத்தின் அடையாளக் குறியீடாகும்.- என்றார். (ச-40)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.பல்கலை விளையாட்டு அவை நடத்தும்

# மேசைப்பந்தாட்டம் நிறைவுக் கட்டத்தில்

வலி.வடக்கு, ஏப் 26

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைப்பந்தாட்ட அணியும் சீ லாப் சொலுசன் பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் இணைந்து நடத்திவரும் ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.



ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் உரும்பிராய் ஒஸ்கா விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

மூன்று ஒற்றையர் ஆட்டமும் ஒரு இரட்டையர் ஆட்டமும் இடம் பெற்றன. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 3:1 சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த சஜீவனும் ஒஸ்கா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செந்தூரனும் மோதிக் கொண்டார்கள்.

இதில் முதல் மூன்று சுற்றுக்களையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் சஜீவன் 13:11, 11:4, 11:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் ஒற்றையர் ஆட்டத்தில் உரும்பிராய் ஒஸ்கா விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த விஜிதனும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த அஜந்தனும் மோதிக் கொண்டார்கள்.

இதில் ஒஸ்கா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஜிதன் இரண்டாம் மூன்றாம் மற்றும் ஐந்தாம் சுற்றுக்களை முறையே 11:5, 11:4, 11:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் தன்வசமாக்கினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் அஜந்தன் முதலாம், நான்காம் சுற்றுக்களை முறையே 11:5, 11:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்ற போதும் போட்டியில் ஒஸ்கா விளையாட்டுக்கழக வீரர் விஜிதன் 3:2 என்ற அடிப்படையில் வெற்றியீட்டினார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் ஆகாசும் ஒஸ்கா விளையாட்டுக்கழக வீரன் வினோகாந்தும் மோதிக் கொண்டார்கள். இந்தப் போட்டியில் முதல் மூன்று சுற்றுக்களையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் ஆகாஸ் முறையே 11:6, 11:5, 11:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டார்.

இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த ஸ்ரெயின் - ஆகாஸ். இணை ஒஸ்கா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஜிதரன் - ஜெடரோ இணையோடு மோதியது.

இந்தப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இரண்டாம், நான்காம், ஐந்தாம் சுற்றுக்களை முறையே 11:8, 13:11, 11:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் தனதாக்கி ஒஸ்கா அணியை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது.

பெண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மூன்று ஒற்றையர் ஆட்டங்களைக் கொண்ட போட்டியின் நேர்சுற்றுக்களில் யூனியன் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியைச் சேர்ந்த பாதுஜாவும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியைச் சேர்ந்த கீர்த்தனாவும் மோதிக்கொண்டார்கள்.

இதில் முதல் சுற்றை யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனை 11:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் தனதாக்கிய போதிலும் இறுதி மூன்று சுற்றுக்களிலும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த கீர்த்தனா முறையே 11:9, 11:8, 14:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் அபாரமாக விளையாடி வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிந்துஜாவும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜோஜ் காருணியாவும் மோதிக் கொண்டார்கள்.


இதில் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த சிந்துஜா முறையே 11:5, 11:4, 11:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிகொண்டார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனை மைதிலியும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த தனுசியாவும் மோதிக் கொண்டார்கள்.

இதில் முதல் மூன்று நேர் சுற்றுக்களிலும் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த தனுசிகா 11:9, 11:3, 11:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

ஆட்ட இறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 3:0 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (ங-86)

## இதுவும் போர்தான்...



யாழ்.பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வில் தலையணைப் போரில் ஈடுபட்டுள்ள வீரர்கள்.

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, ஏப்.26

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கக்குழுப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லக்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 54 பாடசாலைகள் கலந்து கொண்டன. 19 வயது, 15 வயது ஆண்கள், பெண்களுக்கிடையே இப் போட்டிகள் இடம் பெற்றன.

இருபிரிவு போட்டிகளிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:-

**15 வயது ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி.

**15 வயது பெண்கள்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**19 வயது ஆண்கள்**

யாழ்.இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**19 வயது பெண்கள்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக ஆர்.கே. ஆதவன், க.கோகுலராஜா, ரி.இராஜசிங்கம், எஸ்.வித்தியாராணி, எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (ங-8)

# துணுக்காய் கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்றவலய மட்ட பெருவிளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான பெருவிளையாட்டுக்களின் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் முடிவினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர், எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

**15 வயதின் கீழ் பெண்கள் பூப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ பாலிநகர் ம.வி. இரண்டாமிடம் -மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் - மு/ மல்லாவி மத்திய கல்லூரி

**19 வயதின் கீழ் பெண்கள் பூப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

இரண்டாமிடம் -மு/ மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம் - மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள் உதைபந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம் -மு/ பாலிநகர் ம.வி.

மூன்றாமிடம் - மு/முத்தையன் கட்டு வலது கரை அ.த.க. பாடசாலை.

**19 வயதின் கீழ் பெண்கள் எல்லே**

முதலாமிடம் -மு/ மல்லாவி மத்திய கல்லூரி

இரண்டாமிடம் -மு/ பாண்டியன்குளம் ம.வி.

மூன்றாமிடம் - மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

**15 வயதின் கீழ் பெண்கள்-கரம்**

முதலாமிடம் -மு/ அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்

இரண்டாமிடம் -மு/யோகபுரம் ம.வி.

மூன்றாமிடம் மு/ யோகபுரம் மகாவித்தியாலயம்

**19 வயதின் கீழ் பெண்கள்-கரம்**

முதலாமிடம் -மு/ யோகபுரம் மகாவித்தியாலயம்

இரண்டாமிடம் -மு/ மல்லாவி மத்திய கல்லூரி

மூன்றாமிடம் - மு/ ஒட்டுசுட்டான் ம.வி.

**15 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ பாண்டியன் குளம் ம.வி

இரண்டாமிடம் -மு/ யோகபுரம் ம.வி.

மூன்றாமிடம் - மு/ முத்தையன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலை

**17 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ பாண்டியன் குளம் ம.வி.

இரண்டாமிடம் -மு/ மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம் - மு/ ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ மல்லாவி மத்திய கல்லூரி.

இரண்டாமிடம் -மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம் - மு/ யோகபுரம் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள்-மென்பந்து துடுப்பாட்டம்**

முதலாமிடம் -மு/யோகபுரம் ம.வி.

இரண்டாமிடம் -மு/ மல்லாவி மத்திய கல்லூரி.

மூன்றாமிடம் - மு/ பாலிநகர் ம.வி.

**15 வயதின் கீழ் பெண்கள்-சதுரங்கம்**

முதலாமிடம் -மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

இரண்டாமிடம் -மு/ அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்

மூன்றாமிடம் - மு/ ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள்-சதுரங்கம்**

முதலாமிடம் -மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்.

இரண்டாமிடம் -மு/ மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம் - மு/ மல்லாவி மத்திய கல்லூரி.

**15 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம் -மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம் - மு/ பாலிநகர் ம.வி.

**17 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை.

இரண்டாமிடம் -மு/ மல்லாவி மத்திய கல்லூரி

மூன்றாமிடம் - மு/ பாலிநகர் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம் -மு/ ஐயன்கன்குளம் அ.த.க. பாடசாலை. இரண்டாமிடம் -மு/ கற்சிலைமடு அ.த.க பாடசாலை.

மூன்றாமிடம் - மு/ பாலிநகர் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுந்தது ஆஸி



மத்தியூவேட் அசத்தலாக சதம் விளாச ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 300 ஓட்டங்களைத் தாண்டியது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நதன் லயோனின் சுழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணியும் இரண்டாவது டெஸ்ட் சமநிலையில் நிறைவடைந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாடியது.

ஆரம்பத்திலிருந்து ஆஸ்திரேலிய அணியை அதிர வைத்த மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சாளர் சிலிங்போர்ட் முதல்நாள் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 90 பந்துப் பரிமாற்றங்களில் 212 ஓட்டங்களை 7 இலக்குகளை இழந்து பெற்றுக் கொள்ளுமளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். ஆட்டநேர நிறைவில் களத்தில் வேட் 22, ஸ்ராக் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே ஸ்ராக் 35 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. அத்துடன் ஆஸி.யின் ஆட்டம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் மத்தியூவேட் மேற்கிந்தியத்தீவுகளுக்கு வேட்டு வைத்தார். அவரது தனிச் சிறப்பான ஆட்டத்தினால் ஆஸி.யின் ஓட்ட எண்ணிக்கை சீராக அதிகரித்தது. அவருக்கு இணையாக ஹில்பென்ஹாஸ் களத்தில் நின்றாட மேற்கிந்தியத்தீவுகளுக்கு கடுமையான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இணைப்பைத் தகர்ப்பதற்கு மேற்கிந்தியத்தீவுகள் பல வழிகளில் முயன்ற போதும் அது தோல்வியிலேயே முடிந்தது. இறுதியில் வேட் டெஸ்ட் அரங்கில் தனது கன்னிச் சதத்தை பதித்தார். இணைப்பாட்டமாக ஒன்பதாவது இலக்குக்கு 102 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் வேட்டின் இலக்குக்கு சிலிங்போர்ட் வேட்டு வைத்தார். ஆஸ்திரேலிய அணி 328 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வேட் 106 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதே பந்துப் பரிமாற்றத்தில் ஹில்ஞ்பென்ஹாஸஉனது இலக்கும் சரிக்கப்பட ஆஸ்திரேலிய அணி 114.5 பந்துப் பரிமாற்றங்களில் 328 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. ஹில்பென்ஹாஸ் 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் சிலிங்போர்ட் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆஸி.யின் ஆதிக்கத்திலிருந்து தப்புவதற்கு போராட வேண்டியிருந்தது. வந்தவேகத்திலேயே பிரத்வெயிட் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். அதன் பின்னர் அட்ரியன் பரத், கிரன் பவல் இணைந்து இரண்டாவது இலக்குக்கு சிறப்பான அடித்தளம் அமைத்தனர். நிலைத்து நின்றாடி மேற்கிந்தியத்தீவுகளின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு கொண்டு சென்றனர். அணி 62 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பரத் 29 ஓட்டங்களுடன் லயோனின் சுழலில் சிக்கினார்.

அதன் பின்னர் டரன் பிராவோ 7 பந்துகளில் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். கிரன் பவல் 40 ஓட்டங்களுடனும், டெனோ நரேன் 7, போச் 5, அணித்தலைவர் சமி 10 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. சிலிங்போர்ட் வந்தவேகத்தில் டக் அவுட்டாக மேற்கிந்தியத்தீவுகள் அணி 8 இலக்குகளை 120 ஓட்டங்களுக்குள் இழந்து 'பலோ ஒன்' நிலையை எதிர் நோக்கியது.

இருப்பினும் சந்தர்போல் ஒரு முனையில் நின்றாட அவருடன் ராம்போல் இணைந்து துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இவர்களது இணைப்பின் துணை கொண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணி 'பலோ ஒனை' தவிர்த்ததுடன், இரண்டாவது நாள் நிறைவில் 65 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் சந்தர்போல் 34, ராம்போல் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர்.

(5)



# சேவாக் சரவெடி 'சரண்டரானார்' கங்குலி

ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில், டெல்லி அணித்தலைவர் சேவாக் 48 பந்துகளில் 87 ஓட்டங்கள் விளாச, டெல்லி டேர் டெவில்ஸ் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. கங்குலியின் புனே அணி, சொந்த மண்ணில் முதல் முறையாக வீழ்ந்தது.

ஐ.பி.எல்., 'ரி-20' தொடரில், நேற்றுமுன்தினம் புனே வாரியர்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ் அணிகள் மோதிய லீக் ஆட்டம் புனேயில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே அணித்தலைவர் கங்குலி முதலில் துடுப்பாடியது.

### ரைடர் 'டக்'

புனே அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இர்பான் பதான் வீசிய முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் ஜெசி ரைடர், 'டக் அவுட்டானார்'. அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் கங்குலி (1), மோர்கல் வேகத்தில் வீழ்ந்தார்.

### உத்தப்பா மந்தம்

அடுத்தடுத்து இலக்குகள் வீழ்ந்ததால், உத்தப்பா தற்காப்பு ஆட்டத்தில் கவனம் செலுத்த, ஓட்ட எண்ணிக்கை மந்தமாக உயர்ந்தது. அவ்வப்போது பவுண்டரி அடித்து ஆறுதல் தந்த மனிஷ் பாண்டே, மோர்கல் பந்தில் ஆட்டத்தின் முதல் சிக்சரை அடித்தார்.

தொடர்ந்தும் மனிஷ் பாண்டே, உமேஷ் யாதவ் பந்துப் பரிமாற்றத்தில் தலா ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார். இர்பான் பதான் பந்தையும் சிக்சருக்கு விரட்டினார். 20, 29 ஓட்டங்களில் தப்பிப் பிழைத்த இவர், அரைச்சதம் கடந்தார். மோர்கல் பந்துப் பரிமாற்றத்தில் இரு பவுண்டரிகள் அடித்த உத்தப்பாவும் அரைச்சதத்தை எட்டினார்.

புனே வாரியர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. மனிஷ் பாண்டே (80 ஓட்டங்கள், 56 பந்து), உத்தப்பா (60 ஓட்டங்கள், 58 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டிவிடும் இலக்கைத் துரத்திய டெல்லி அணிக்கு அணித்தலைவர் சேவாக், ஜெயவர்தனா ஜோடி தொடக்கம் கொடுத்தது. தோமஸ், நெஹ்ரா பந்துகளில் பவுண்டரிகள் அடித்த ஜெயவர்தனா, 18 ஓட்டங்களில் துரதிர்ஷ்டவசமாக 'ரன் அவுட்டானார்'.

இதன்பின் ஆட்டத்தை தன்கையில் எடுத்துக் கொண்டார் சேவாக். நெஹ்ராவின் அடுத்தடுத்த பந்துப் பரிமாற்றங்களில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்சர் விளாசிய இவர், லூக் ரைட் பந்துப் பரிமாற்றத்தில் ஒரு பவுண்டரி, சிக்சர் என்று தொடர்ந்து விளாசினார், கடந்த ஆட்டத்தில் பந்து வீச்சில் அசத்திய கங்குலியையும் சேவாக் விட்டு வைக்கவில்லை.

மறுமுனையில் பீற்றர்சனும், நெஹ்ராவின் பந்துகளை அடித்து நொறுக்கினார். ராகுல் சர்மாவின் பந்தையும், இவர் சிக்சருக்கு அனுப்ப, டெல்லி அணி 10.1 பந்துப் பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை எட்டியது. சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த சேவாக், 28 ஆவது பந்தில் அரைச் சதம் கடந்தார். பீற்றர்சன் (27) இந்த முறை நீடிக்கவில்லை.

அடுத்து சேவாக்குடன் ரோஸ் ரெய்லர் இணைந்தார். ராகுல் சர்மாவின் பந்தை சேவாக், சிக்சருக்கு விரட்ட, டெல்லி டேர்டெவில்ஸ் அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 148 ஓட்டங்கள் எடுத்து, 8 இலக்குகள் வித்தியாசத்தில் எளிதான வெற்றி பெற்றது. சேவாக் ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்கள் (3 சிக்சர்கள், 10 பவுண்டரிகள்) பெற்று ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

### சொதப்பல் துடுப்பாட்டம்

டெல்லி அணிக்கு எதிராக முதலில் களமிறங்கிய புனே அணி, 1 ஓட்டத்துக்கு 2 இலக்குகளை இழந்ததால், மனிஷ் பாண்டே, உத்தப்பா மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் 11 பந்துப் பரிமாற்றங்களில், ஓட்ட எண்ணிக்கை 53 ஓட்டங்களாகத்தான் இருந்தது. பின் வரிசையில் ஸ்டீவ் ஸ்மித், லூக் ரைட் போன்ற அதிரடி வீரர்கள் இருந்தும், இவர்கள் இப்படி மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், கடைசி வரை ஓட்ட எண்ணிக்கை 150 ஐ எட்டவில்லை.

### சூப்பர் ஜோடி

மூன்றாவது இலக்குக்கு 145 ஓட்டங்கள் எடுத்த புனே அணியின் மனிஷ் பாண்டே, உத்தப்பா ஜோடி, ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் எந்தவொரு இலக்குக்கும் அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற பெருமையைப் பெற்றது.

(5)

# கட்டுப்பாடு எனக்கில்லை



எனக்கான சம்பளம் குறைவாக இருந்தாலும் தொடர்ந்தும் இலங்கை அணிக்காக விளையாடுவேன். அத்துடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததால் எனக்கு சில விஷேட சலுகைகள் கிடைத்துள்ளதுடன், ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இவ்வாறு இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தொடர்களிலிருந்து மலிங்க விலகியுள்ள நிலையில், அவரின் தரத்திலான ஏனைய முன்னிலை வீரர்களின் ஊதியத்தில் 60 சதவீதத்தையே மலிங்கவுக்கு வழங்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது. இலங்கையின், முதல்நிலை வேகப்பந்து வீச்சாளரான அவர் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் 40,000 அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்படுவார்.

ஒப்பந்தம் செய்யப்படாத வீரர்களுக்கு போட்டிகளுக்கான ஊதியத்தில் 25 சதவீதம் மேலதிக கொடுப்பனவும் நாளாந்த படியும் வழங்கப்படும். அதேவேளை, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தல், அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு பிரத்தியேக பயணம் மேற்கொள்ளல் போன்றவற்றுக்கான தடைகள் என்பன அடங்கிய ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் இறுக்கமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு நான் மறுத்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானபோதிலும், அவ்வாறு மறுப்பதற்கு இந்த வருடம் வீரர்களுக்கு ஒப்பந்தம் எதுவும் வழங்கப்படவில்லை என்று 28 வயதான லசித் மலிங்க கூறினார்.

'ஒப்பந்தத்துடனோ ஒப்பந்தமில்லாமலோ நான் விளையாட தீர்மானித்தாலும் அது ஒரு பிரச்சினையல்ல. கடந்த வருடம் போன்று, அனைத்து சர்வதேச ஒருநாள் மற்றும் 'ரி-20' போட்டிகளிலும் இலங்கைக்காக விளையாட நான் 100 சதவீதம் தயார் - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி வழிநடத்துகிறார்



முத்தையா முரளிதரன் எப்போதும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அவரது அறிவுரையினாலேயே என்னால் இந்தளவு தூரம் வரையில் சிறப்பாக பந்து வீச முடிகின்றது.

இவ்வாறு, ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டத்தில் முக்கிய 4 இலக்குகளைக் கைப்பற்றிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் பந்து வீச்சாளர் கே.பி.அப்பன்னா தெரிவித்தார்.

முத்தையா முரளிதரன் அந்த அணி சார்பாக எந்த ஆட்டத்திலும் பங்குபற்றியிருக்கவில்லை, எனினும் முத்தையா முரளிதரன் விளையாடாமலிருக்க தான் அணியில் விளையாடுவது குறித்து வித்தியாசமான எண்ணங்கள் எவையும் கிடையாது என்று கே.பி.அப்பன்னா தெரிவித்தார்.


ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக முத்தையா முரளிதரன் பங்குபற்றாமைக்கு ஓர் அணியில் 4 வெளிநாட்டு வீரர் எனும் விதியே காரணம் எனத் தெரிவித்த அவர், முத்தையா முரளிதரன் ஓர் அற்புதமான பந்துவீச்சாளர் எனத் தெரிவித்தார். முத்தையா முரளிதரன் ஆட்டங்களில் பங்குபற்றாவிடினும், அணியில் அவரது பங்களிப்புத் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக அவர் தெரிவித்தார்.

முத்தையா முரளிதரன் எப்போதும் தன்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்த அவர், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்துக்கு முன்னர் அந்த ஆடுகளத்தில் எவ்வாறு பந்து வீசுவது என்று அவர் தனக்கு அறிவுரை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் தொடர்ந்தும் சிறப்பாகப் பந்துவீச எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த கே.பி.அப்பன்னா, அணிக்காக வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

(5)

# பாதுகாப்பு உண்டு



பாகிஸ்தானில் இதர அணிகள் கிரிக்கெட் விளையாடுவதற்கு போதிய பாதுகாப்பு வசதிகள் உள்ளது என்று பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார். இந்த மாத இறுதியில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் விளையாடப் பயணம் மேற்கொள்ள இருந்தது.

ஆனால் பாகிஸ்தானில் போதிய பாதுகாப்புகள் இல்லை என்று கூறி பங்களாதேஷ் நீதிமன்றம், அந்த நாட்டு கிரிக்கெட் குழு பாகிஸ்தான் செல்வதற்குத் தடைவிதித்தது. இதன் காரணத்தினால் பங்களாதேஷ் அணிகளின் பாகிஸ்தான் பயணம் ரத்தாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர், பாகிஸ்தானில் இதர கிரிக்கெட் அணிகள் விளையாடுவதற்குப் போதுமான பாதுகாப்பு வசதிகள் உள்ளதென உறுதியாக தெரிவித்துள்ளார். ஏனெனில், அவர் இரண்டு மாதகாலம் பாகிஸ்தானில் தங்கியிருந்து வீரர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார். இந்த இரண்டு மாத காலத்தில் தனக்கு எவ்வித பாதுகாப்புப் பிரச்சினைகளும் ஏற்பட்டதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(5)

# பொண்டிங்கிடம் வீழ்ந்தார் டிராவிட்



ஆஸ்திரேலியா- மேற்கிந்திய தீவுகள் மோதும் டெஸ்ட் ஆட்டத்தில் ரிக்கி பொண்டிங் புதிய சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ரிக்கிபொண்டிங், 23 ஆவது ஓட்டத்தை எடுத்த போது டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார்.

இவர் 165 டெஸ் டில் 41 சதம் உட்பட 13,289 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இந்தியாவின் டிராவிட் (164 டெஸ்ட், 13,288 ஓட்டங்கள்) மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

முதலிடத்தில் இந்தியாவின் சச்சின் (188 டெஸ்ட், 15, 470 ஓட்டங்கள்) உள்ளார்.

(5)

# டுபாயில் ஐந்து செஸ் சம்பியன்கள்

டுபாய் சர்வதேச செஸ் தொடரில், இந்திய வீரர் சந்திபன் சந்தா, சம்பியன் பட்டத்தை பகிர்ந்து கொண்டார்.

டுபாயில் சர்வதேச செஸ் தொடர் நடைபெற்றது. இதில் இந்திய வீரர்கள் பரிமார்ஜன், அபிஜீத் குப்தா, கங்குலி சூர்யா, சந்திபன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். நேற்று முன்தினம் ஒன்பதாவதும் இறுதியுமான சுற்று போட்டிகள் நடைபெற்றன.

இந்தியாவின் சந்திபன், லோட்வியாவின் மைஜிசை சந்தித்தார். 30ஆவது நகர்த்தலின் போது, இப்போட்டி சமநிலை ஆனது. மற்றொரு இந்திய வீரர் பரிமார்ஜன், ஆர்மீனியாவின் கரேன் ஆகியோர் மோதிய போட்டியும் சமநிலை ஆனது.

ஒன்பது சுற்று முடிவில் தலா 7 புள்ளிகள் பெற்ற இந்தியாவின் சந்திபன், மைஜிஸ் (லோட்வியா), நி குவா (சீனா), ஜோபாவா, மிக்கெய்ல் (ஜோர்ஜியா) ஆகியோர் முதலிடத்தைப் பெற்று, சம்பியன் பட்டத்தை பகிர்ந்து கொண்டனர்.

மானிப்பாயில் முதன் முறையாக
France, Canada
செல்லவுள்ளவர்களுக்கான
French Classes
(பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் ஆரம்பம்)
(CANADA வில் குடியுரிமை பெறவுள்ளவர்களுக்கும் உகந்தது)
FRENCH மொழியில் தகமையும், அனுபவமும் உள்ள பிரபல ஆசிரியரால் விரிவுரைகள் மேற்கொள்ளப்படும்.
இன்றிலிருந்து அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு :-
UNI ICT Education (Pvt) Ltd,
Jaffna Road, Manipay,
T.P. :- 021 22 55 867 / 0777 110 862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 28.4.2012 சனிக்கிழமை
அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் பயிற்சியில் சேரலாம்
ஆங்கிலம் | பிரெஞ்ச்
பிரிவு 1 - காலை 9 - 10 | காலை 11 - 12
பிரிவு 2 : மாலை 4 - 5 | வெறும் 25% கட்டணம்
கட்டணம் : ரூபா 3000/- காலம் 1 – 3 மாதம்
முதல் வகுப்பு இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456

நேற்றுவரை....
16 குடும்பங்கள்
ஆஸ்திரேலியா
பயணமாகின
எம்து முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனத்தில் ஆலோசனைபெற்று 16 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் இதுவரையில் ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளனர்.
அவர்களுக்குக் குறைந்த கட்டணத் தங்குமிட வசதி, பகுதிநேரத் தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
இன்னும் என்ன தாமதம்
5 வருட ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனைகளுக்கு இன்றே நாடுங்கள்.
THISAIKADDI (PVT) LTD.
504, Hampton Street,
Malborne, Australlia. Land phone - 0061390437100
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
(PV82703)
முன்மாதிரியான வீசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2219016
கிளைகள் : இல. 115A , இந்திரபுரம் வீதி, [illegible], 021 2285544
இல. 22A , [illegible], 0112508443, 0756438553.

முகாமைத்துவ உதவியாளர் (Clerical) வங்கி ஆள்சேர்ப்பு போட்டிப்பரீட்சை கருத்தரங்கு
ஆரம்பம் - 28.04.2012 சனி மாலை 3.00 மணி
விரிவுரையாளர் P. உமாசங்கர், P. கமல்தாசன்
கடந்த கால மாதிரி வினாக்கள் ஆராயப்படும்
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆவைப்பந்தி, யாழ். தொ.பே. 0718130390

வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகரினை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 0771807672

சாரதி தேவை
விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு கனரக வாகனச் சாரதி தேவை.
தகுதி:-
* A.D.சாரதி அனுமதிப் பத்திரம்
* 5 வருட முன் அனுபவம்.
தொடர்பு - 0778890797

கட்டடம் வாடகைக்கு உண்டு
முன்னர் சங்கானையில் இலங்கை வங்கிக் கிளை இயங்கிய (லக்சுமி பிளாசா) கட்டடம் வாடகைக்கு உண்டு
லக்சுமி பிளாசா,
பிரதான வீதி, சங்கானை.
T.P.: 077 290 8787

SLAS, SLPS
போட்டிப் பரீட்சை வகுப்புகள்
விரிவுரையாளர்
P. உமாசங்கர்,
P. கமல்தாசன்
ஆரம்பம் - 28.04.2012
சனி 9.00 மணி
(ஒவ்வொரு சனியும் 9 மணிமுதல் 4 மணிவரை)
கொழும்பு சிங்கள மாதிரி வினாத்தாள் ஆராயப்படும்.
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆவைப்பந்தி, யாழ். தொ.பே. 0718130390

# மரண அறிவித்தல்



## திருமதி துஷியந்தி கிருபாகரன்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி துஷியந்தி கிருபாகரன் கடந்த 23.04.2012 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் திருச்செல்வம் - வல்லிநாயகி (ஜேர்மனி) தம்பதியரின் அன்பு மகளும், சிவசுப்பிரமணியம் (குஞ்சர்) - வசந்தாதேவி (நீர்வேலி) தம்பதியரின் மருமகளும், கிருபாகரனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், துகிர்தா, பிரகலாதன், தமிழேந்தி ஆகியோரின் அன்புத் தாயும், துஷியந்தினி (ஜேர்மனி), துஷியந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், மாலதி, சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிவகுமார் (நீர்வேலி), வினோதா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலியும், பிரியங்கா, பிரசாந்த், பிரதிக்கா ஆகியோரின் மாமியும், சுவிர்தனின் (பிரான்ஸ்) அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2012) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். நீர்வேலியில் உள்ள அவரது மாமனார் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவசுப்பிரமணியம் (குஞ்சர்),
சி. சிவகுமார் (பிரசாந் மர அரிவுகாலை, நீர்வேலி)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
ஜேர்மனி - 0049230585945.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org